janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi | janasakthitholaikatchi




புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

மலர் 84 | 2022 ஜனவரி 16 - 22 | விலை: ரூ.10 | 16 பக்கங்கள் | இதழ் 41






**மக்களுக்காக நின்று போராடுகிறது சிபிஐ**

1925 டிசம்பர் 26 கான்பூரில் கூடி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அமைத்தனர். கட்சி நிறுவப்பட்ட தொடக்க நாள் முதலாக >>> ப 08



**பொதுவுடமை சமுதாயம் காண!!!**

இயற்கை நமக்கு அளித்து வரும் கொடையை அதனுடன், மனித குலம் இணைந்து தன் உடல் >>> ப 02



**ஃபாக்ஸ்கான் ஒரு அபாய எச்சரிக்கை!**

போக்குவரத்து நிறைந்த, சென்னைபெங்களூரு சாலையை 16 மணிநேரம் வரை ஆயிரக்கணக்கான பெண் தொழிலாளர்கள் >>> ப 03




## அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் 16 வது

# அகில இந்திய மாநாடு

**அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் 16வது அகில இந்திய மாநாடு ஐதராபாத்தில் 2022 ஜனவரி 7,8,9,10 ஆகிய தேதிகளில் ரோகித் வெமுலா நகர், சோனி தெங்கமம் அரங்கில் ஆப்தாப் ஆலாம் கான், சுக்ஜிந்தர் மகேசரி, ஷாஜிலால், வெங்கடேஷ் வேம்புலி, சஞ்சீவ் குமார் சிங், மோஸ்னி கோஷ், அணில் குமார்ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.**

மாநாட்டில் பல்வேறு மாநிலங்களிலிருந்து பங்கேற்ற இளைஞர்களின் எழுச்சிமிகு முழக்கத்தோடு அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் முன்னாள் அகில இந்திய பொதுச் செயலாளர் சந்தோஷ் குமார் கொடியேற்றி துவக்கி வைத்தார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டி.ராஜா மாநாட்டினை வாழ்த்தி சிறப்புரையாற்றினார்.

சிபிஐ தேசிய செயலாளர் பினாய் விஸ்வம், எம்.பி., ஏஐடியூசி பொதுச் செயலாளர் அமர்ஜித் கவுர், இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் ஆனி ராஜா, அகில இந்திய விவசாயிகள் சங்க தேசிய செயலாளர் பத்மா, சென்னை உயர்நீதிமன்றத்தின் மேனாள் நீதிபதி கே.சந்துரு, மூத்த பத்திரிகையாளர் பி.சாய்நாத், ஏஐஎஸ்ஃஎப் விக்கி மகேஷ்சரி, ஆசிஷ் பாஷா முன்னாள் எம்.பி., கேரளா வருவாய் துறை அமைச்சர் கே.இராஜன், பீகார் எம்.எல்.ஏ., சூர்யா காந்த் பாஸ்வான், இந்திய ஜனநாயக வாலிபர் சங்கத்தின் பொதுச் செயலாளர் அபாய் முகர்ஜி, ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு மாநாட்டினை வாழ்த்திப் பேசினர்.

மாநாட்டு இறுதியில் 95 பேர் கொண்ட தேசியக் குழு தேர்வு செய்யப்பட்டது. பஞ்சாப் மாநிலத்தைச் சார்ந்த சுக்ஜிந்தர் மகேஷ்சரி தேசிய தலைவராகவும், தமிழ்நாட்டைச் சார்ந்த இரா. திருமலை பொதுச் செயலாளராகவும் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டனர்.

தமிழ்நாட்டிலிருந்து, க.பாரதி, த.கு.வெங்கடேஷ் வேம்புலி, துரை. அருள்ராஜன், இரா.தமிழ் பெருமாள், வே.வசந்த்குமார், இரா.ரமேஷ், மு.பார்த்திபன், கு.கலைஅஸ்வினி, இரா.பவிதாரணி உள்ளிட்ட 9 பேர் தேசிய குழுவுக்கு உறுப்பினர்களாக தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

### மாநாட்டு தீர்மானங்கள்

1. புதிய கல்வி கொள்கையை ஒன்றிய அரசு திரும்பப் பெற வேண்டும்.

தொடர்ச்சி 5ம் பக்கம் >>



இரா. திருமலை
பொதுச் செயலாளர் AIYF

சுக்ஜிந்தர் மகேஷ்சரி
தேசிய தலைவர் AIYF

## ஐதராபாத் நகரில் நடைபெறும் AIYF 16வது அகில இந்திய மாநாட்டில் தேசியக்குழு உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழகத் தோழர்கள்



- வே.வசந்த்குமார்
- இரா.ரமேஷ்
- இரா.தமிழ் பெருமாள்
- துரை.அருள்ராஜன்
- மு.பார்த்திபன்
- க.பாரதி
- கு.கலைஅஸ்வினி
- இரா.பவிதாரணி
- த.கு.வெங்கடேஷ் வேம்புலி



புதுமையே எங்கும் பொங்குக!
புன்மைகள் எங்கும் நசுங்குக!
இனிமையே எங்கும் தங்குக!
இல்லாமை எங்கும் நசுங்குக!
மதவெறி எங்கும் பொசுங்குக!
மானுடமே எங்கும் ஓங்குக!

உழவையும் உழைப்பையும் என்றும் தாங்குக!
உலகமே ஒன்றென எங்கனும் முழங்குக!
சமத்துவம் பொங்குக! சாதி வெறி நொறுங்குக!
பொங்கலோ பொங்கலெனும் சமத்துவ பொங்கல்!

**ஜனசக்தி**

சந்தாதாரர்கள், ஏஜென்டுகள், விளம்பரதாரர்கள், வாசகர்கள் அனைவருக்கும் எமது இனிய பொங்கல் நல்வாழ்த்துகள்!

– ஆசிரியர் குழு

## எதிரும் புதிரும்

தன்னுடைய உயிரை குறித்து அஞ்சுபவர்கள் யாரும் நாட்டின் உயர் பதவிகளுக்கு வரக் கூடாது
– வல்லபாய் பட்டேல்




நான் உயிர் பிழைத்து விட்டேன்
– நரேந்திர மோடி

எங்கள் அம்மா ஆட்சியில் ஒமிக்ரான் வகை கொரோனாவை நாங்கள் அனுமதிக்காமல் தடுத்து நிறுத்தினோம். – முன்னாள் அமைச்சர் செல்லூர் ராஜூ




நீங்கள் ஒவ்வொரு முறையும் விஞ்ஞானி என்பதை நிரூபித்துக் கொண்டே இருக்க வேண்டுமா என்ன?

## அறிவிப்பு

ஜனசக்தி சிறப்பிதழ் மற்றும் ஜனசக்தி காலண்டர் ஆகியவற்றுக்கான பில்கள் போடப்பட்டுஅனைத்து ஜனசக்தி மாவட்ட பொறுப்பாளர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளன. வாட்ஸ்ஆப் மற்றும் மின்னஞ்சலில் செய்தி அனுப்பப்பட்டுள்ளன. விரைந்து பில் தொகையை வசூலித்து ஜனசக்தி வங்கிக் கணக்கில் செலுத்துமாறு தோழமையுடன் கேட்டுக் கொள்கிறோம்
– ஆசிரியர் குழு



கட்சிக் கடிதம்



# மக்கள் ஒற்றுமை காக்க! சகோதரத்துவம் காக்க!! பொதுவுடமை சமுதாயம் காண!!!

**பேரன்புமிக்க தோழர்களே!**

**இயற்கை நமக்கு அளித்து வரும் கொடையை அதனுடன், மனித குலம் இணைந்து தன் உடல் உழைப்பைத் தந்து, தன்னோடு இணைந்து உதவி வரும் கால்நடைகள் என அனைத்தும் சேர்ந்து, கூட்டாக உழைத்து, அத்தகைய உழைப்பின் மூலம் கிடைத்திட்ட வெற்றியை பொங்கல் விழாவாக கொண்டாடி மகிழ்கிறோம்!**

போகிப் பண்டிகையன்று, ஊரே புகை மண்டலமாகக் காட்சி அளிக்கும். வேண்டாத, பயன்படாத, கூளம் குப்பைகள் தீயிட்டு கொளுத்தப்படுகின்றது.

வீடு, முற்றம், தோட்டம் என அனைத்தும் சுத்தம் செய்யப்படுகின்றது.

பயன்படாத பழைய துணிகள் வீட்டைவிட்டு வெளியேற்றப்படுகின்றது.

பயன்பாட்டுக்கு உரியது என்றாலும், அவைகளும் தண்ணீரில்நனைத்து,துவைத்து சுத்தம்செய்யப்படுகின்றன.

படுக்கும் பாய்கள், போர்வைகள் அனைத்தும் சுத்தம் செய்யப்படுகின்றது.

வீடுகளில் தேவையற்று ஒட்டிக்கொண்டு ஊஞ்சலாடும் ஒட்டடைகள் துடைப்பம் கொண்டு அகற்றப்படுகின்றன.

வீட்டுத் தரைகள் சாணத்தால் மொழுகி, சுவர்கள் சுண்ணாம்பால் வெள்ளை அடித்து சுத்தம் செய்யப்படுகின்றது. இவை பெரிய வீடா, மச்சு வீடா, ஓட்டு வீடா, அல்லது குடிசை வீடா என்று வேறுபாடு இன்றி அனைத்தும் தூய்மைப்படுத்தப்படுகின்றன.

வீடு புதுப் பொலிவு பெறுகின்றது. முற்றம், தோட்டம் அனைத்தும் புதுப்பொலிவோடு களை கட்டி நிற்கின்றது.

வீட்டை மட்டுமல்ல, நாட்டையும் தூய்மை படுத்திட வேண்டியுள்ளது. போகிப்பண்டிகையைத் தொடர்ந்து தை முதல் நாள் – பொங்கல் விழா.

குயவர்கள் தங்களின் உழைப்பால் மண்ணை நல்ல தண்ணீர் விட்டு பிசைந்து, மண்ணாக இருந்ததை பானையாக, சட்டியாக, மடக்காக செய்து சாயம் பூசி காயவைத்து, சூளையில் அடுக்கி, விறகு கொண்டு எரித்து நமக்கு பானை, சட்டி, மடக்கு என வழங்குகின்றார்கள்.

நமது அம்மா குயவரிடத்தில் சென்று, ஒவ்வொன்றாக எடுத்து தட்டிப் பார்த்து, அதன் ஓசை கொண்டு தரமானதை, தெறிக்காததை தேர்வு செய்து எடுத்து வருவார்.

வயல்களில் ஆடிப்பட்டத்தில் விதைத்து, நடவு செய்த நெற் பயிர் வளர்ந்து, கதிர் வைத்து, முற்றிய நெல் மணிகள் கொண்ட தாளுடன் வேரோடு சேர்த்து எடுத்து வீட்டுக்கு வந்து சேரும். ஆறடி, எட்டடி உயரமுள்ள செங்கரும்பும் தோகையோடு வீடு வந்து சேரும்.

மஞ்சள் கொத்து, இஞ்சிக் கொத்து இவைகளும் வீடு வந்து சேரும். வரப்புகளில் பயிரிட்ட துவரைகளும் வீடுவந்து சேரும். முற்றிப் பழுத்திட்ட வாழைத்தாரும் வீட்டு தாவாரத்தில் தொங்கும்.

பயிரிட்டு விளைந்த பரங்கி, பூசணி, சுரைக்காய் இன்னபிற காய்கறிகளும் வீட்டை வந்து அடையும். பயிரிட்ட கருணைக்கிழங்கு, சேனைக்கிழங்கு, சர்க்கரைவள்ளி கிழங்கு, பனங்கிழங்கு என கிழங்கு வகைகளும் இல்லத்தை வந்தடையும்.

நாடார் ஐயா தென்னை மரத்தில் தொங்கிக் கொண்டுள்ள தேங்காய்களை தனது ஆள்காட்டி விரலால் தட்டிப் பார்த்து முற்றிய தேங்காய் என அடையாளங்கண்டு தேங்காய் பறித்துக் கொடுப்பார் – அவைகளின் மட்டை உரிக்கப்பட்டு குடுமியுடன் கூடிய தேங்காய் வரிசைகட்டி அமர்ந்து இருக்கும்.

சின்னஞ்சிறுசுகள் வீட்டு முற்றத்தை சுத்தம் செய்து, சாணம் தெளித்து, கூட்டிப் பெருக்கி அழகுபடுத்தி, மா கோலமிட்டு, அதன் நடுவே பரங்கி, பூசணி பூக்களை இட்டு பொங்கல் வாழ்த்துக்கள் என மா கோலத்தில் எழுதி அனைவரின் கவனத்தையும் ஈர்த்து இருப்பார்கள்.

செங்கல் கொண்டு, அடுப்புக் கட்டிகள் அமைத்து அவைகளையும் மண்ணால் மொழுகி, பின்னர் சாணத்தாலும் மொழுகி காய வைக்கப்பட்டுள்ள அடுக்குகளை எடுத்துவைத்து அடுப்பு தயாராகிவிடும்.

காய்ந்த சிப்பிகள், பன்னாடைகள் என எரியூட்டவும் தயார் நிலையில் இருக்கும். இல்லத்துப் பெண்கள் நீராடி, புத்தாடை அணிந்து, வாசல் முற்றத்தில் வைக்கப்பட்டுள்ள அடுப்பில் – புதுப்பானை, அமர்ந்து கொள்ளும் பானைக்கு அன்று மிக மரியாதை உண்டு.

பானையைச் சுற்றி மஞ்சள், இஞ்சி கொத்து களை கட்டி அழகு சேர்ப்பார்கள்– பானைக்கு அழகான மஞ்சள் குங்குமம் இட்டு மேலும் அழகு பெறும். புதுப்பானையில், புது அரிசி, வெல்லம் இட்டு சர்க்கரைப் பொங்கல் வைப்பார்கள். ஒரே நேரத்தில் மூன்று அடுப்புகள் எரியும். ஒன்றில் வெண்பொங்கல், மற்றொன்றில் சர்க்கரை பொங்கல் என பொங்கலும் –

மற்றொரு அடுப்பில் புதுச்சட்டியில் காய்கறிகள், கிழங்குகள் என எல்லாம் சேர்த்து வேக வைக்கப்படும்.

## பானையில் இட்ட பொங்கல் பொங்கி வரும்போது, பொங்கலோ பொங்கல் என குரல் எழுப்புவார்கள் –

சிறுவர்கள் வீட்டிலுள்ள தட்டு தாம்பாளம் இவைகளை வைத்து குச்சியால் தட்டி ஓசை எழுப்பியவாறு பொங்கலோ பொங்கல் என குரல் ஓங்கி ஒலிக்கும்–

ஒரே நேரத்தில் தெருவில் உள்ள அனைத்து வீடுகளிலும் இக்குரல் ஓங்கி ஒலிக்கும்–

பொங்கல் வைத்து இயற்கைக்கு, அதுதான் சூரியனுக்கு படைப்பார்கள். சூரியன் என்ற இயற்கைக்கு நன்றி தெரிவிப்பார்கள்–

வீட்டில் உள்ள அனைவரும் வரிசையாய் அல்லது வட்டமாய் அமர்ந்து மகிழ்ச்சி பொங்க தங்களின் பசி தீர்ப்பார்கள்.

இதனை ஒவ்வொன்றாக, ஒன்றுவிடாமல் கூட்டிப் பார்த்தால் இயற்கை, உழவர்களின் உழைப்பு, குயவனின் உழைப்பு அனைத்துமாக சேர்ந்த கூட்டம் உழைப்புக்கு கிடைத்திட்ட வெற்றி பெருவிழாதான் பொங்கல் விழா!

தாங்கள் மட்டும் மகிழ்ச்சி பொங்க விழா கொண்டாடினால் போதுமா?

தங்களோடு இணைந்து உழைப்பை தந்திட்ட கால்நடைகளை பாராட்ட வேண்டாமா? அவற்றிற்கு நன்றி கூற வேண்டாமா? அதுதான் மாட்டுப்பொங்கல்.

கால்நடைகள், வயல்காட்டை உழுது பயிரிட மனிதர்களைப் போன்று உழைப்பைத் தந்திட்ட எருதுகள், பால் தரும் பசு, எருமை, ஆடு என அனைத்து கால்நடைகளுக்கும் விழா–

மாடுகளை நன்கு குளிப்பாட்டி, கொம்புகளில் வர்ணம் பூசி, நெற்றியில் மஞ்சள் குங்குமம் இட்டு, அதன் கழுத்துகளில் தேங்காய் மூடி, கரும்புத் துண்டு, வேப்பிலைக் கொத்து, நெல்லிக் கொத்து இவைகளை ஒன்றாக கோரையில் கோர்த்து கட்டுவதுடன், பல வண்ணங்களில் தயாரிக்கப்பட்ட நெட்டி மாலைகளை கட்டி– அழகு படுத்தி கால்நடைகளுக்கு பொங்கலிட்டு மாட்டுப் பொங்கல் விழாக்கோலம் காணும்–

நான்காம் நாள் கன்னிப்பெண்களின் விழா–

மார்கழி மாதம் முழுவதும் அதிகாலை நேரத்தில் கொட்டும் பனியை, குளிரைப் பொருட்படுத்தாது வாசல் முற்றத்தை சாணம் தெளித்து, கூட்டிப் பெருக்கி, சுத்தம் செய்து– அவரவர் வீட்டு வாசலை அடைத்து அகண்ட பெரிய, பெரிய கோலங்கள் போடுவார்கள்.

இளம் பெண்களிடையே கடும் போட்டி நிலவும்– யார் வீட்டுக் கோலம் அழகாக இருக்கின்றது எனப் பெரும் போட்டியாக இருக்கும். கோலத்தின் நடுவே பசுஞ் சாணியை சிறு, சிறு வட்டமாக, சின்னஞ்சிறு ராட்டி தட்டி அதன் நடுவே பரங்கி, பூசணி, தும்பைப் பூக்களை கொண்டு அழகு படுத்துவார்கள்–

இவைகளை தினசரி சேகரித்து காயவைத்து பத்திரமாக ஒரு மாத காலத்திற்கும் சேமித்ததை– கன்னிப் பொங்கலன்று ஆற்றங்கரைக்கு எடுத்துச் செல்வார்கள்.

இவைகளை ஆற்றில் ஓடும் நீரில் விடுவார்கள். அவைகள் வரிசைகட்டி மிதந்து செல்லும் அழகைக் கண்டு ரசித்து முடித்து, தாங்கள் அவரவர் வீட்டிலிருந்து கொண்டுவந்துள்ள புளி சாதம் உள்ளிட்ட உணவுகளை கூட்டாக பரிமாறி சாப்பிட்டு, பாட்டுப்பாடி கும்மியடித்து தங்களின் மகிழ்ச்சியை வெளிப்படுத்துவார்கள்.

ஒட்டுமொத்தமாக பொங்கல்விழா– கூட்டு உழைப்பின் வெற்றி என்பது மட்டுமல்ல–

இவ்விழா மதத்தை கடந்து நிற்கின்றது, சாதியைக் கடந்து நிற்கின்றது, ஏழை, எளியோர், வசதியுள்ளோர், வாய்ப்புள்ளோர் என்ற வேறுபாட்டை உடைத்து நொறுக்கி ஒற்றுமை என்கிற உயர்ந்த பண்பாட்டை உயர்த்திப் பிடித்து உழைப்பிற்கு பெருமை சேர்க்கின்றது.

மத வெறியூட்டி, மக்களை பிளவுபடுத்தி

சாதி வெறியூட்டி மக்களைப் பிளவுபடுத்தி அரசியல் ஆதாயம் ஒன்றே என்ற குறுகிய நோக்கம் உடையோருக்கு சம்மட்டி அடி கொடுத்திடும் பண்பாட்டு விழாதான் பொங்கல் விழா!

கூட்டு உழைப்பிற்கு கிடைத்திட்ட வெற்றி விழா தான் பொங்கல் விழா!

இத்தகைய பண்பாட்டு விழாவை கொண்டாடி மகிழ்வோம்!

காலங்காலமாக கொண்டாடி மகிழும் கூட்டு உழைப்பின் வெற்றியை–

ஒற்றுமையின் வெற்றியை

மதம் கடந்து

சாதி கடந்து கொண்டாடி மகிழும்

வெற்றியை–

மதத்தின் பெயரால்

சாதியின் பெயரால் மட்டுமல்ல

அடையாள அரசியல் என்ற பெயரிலும், சீர்குலைக்கும் சீர்குலைவுவாதிகளை அடையாளம் கண்டு நிராகரித்து– மக்களின் ஒற்றுமையை, சகோதரத்துவத்தை கட்டிக்காக்க, பொதுவுடைமைச் சமுதாயத்தை உருவாக்கிட, பொங்கல் நாளில் சபதமேற்போம்.

**அனைவருக்கும்**
**இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்!**

**மீண்டும் சந்திப்போம் - வணக்கம்**

தோழமைமிக்க

[signature]

# விஷமானது உணவு மட்டுமா?



டி.எம்.மூர்த்தி

## ஃபாக்ஸ்கான் ஒரு அபாய எச்சரிக்கை!



**போக்குவரத்து நிறைந்த, சென்னை பெங்களூரு சாலையை 16 மணிநேரம் வரை ஆயிரக்கணக்கான பெண் தொழிலாளர்கள் மறியல் செய்திருக்கிறார்கள். இவர்கள் பாக்ஸ்கான் என்ற தொழிற்சாலையில் பணி புரிபவர்கள்.**

காஞ்சிபுரம் மாவட்டம் சுங்குவார்சத்திரம் அருகில் இருக்கிறது ஃபாக்ஸ்கான் தொழிற்சாலை. உலகப் புகழ்பெற்ற ஆப்பிள் ஐபோன் மற்றும் பல்வேறு அலைபேசி மற்றும் மின்னியல் கருவிகளையும், உதிரி பாகங்களையும் இது தயாரிக்கிறது.

ஏற்கனவே 2014 ஆம் ஆண்டில் மூடப்பட்ட இந்த நிறுவனம், பின்னர் 2018ல் மீண்டும் திறக்கப்பட்டது. புதியதாக பெண் தொழிலாளர்களைத்தான் அதிகம் சேர்த்தார்கள். பதினையாயிரம் பெண்கள் வரை வேலை செய்யும் இந்த நிறுவனத்தில், சரி பாதிக்கும் அதிகமானோர் தென் மாவட்டங்களில் இருந்து காண்ட்ராக்டர்கள் மூலம் அழைத்து வரப்பட்டவர்கள்.

இவர்கள் தங்குவதற்கும், உணவுக்கும் கான்ட்ராக்டர்கள் மூலமே இந்த நிறுவனம் ஏற்பாடுகள் செய்திருக்கிறது. இந்த விடுதிகள் ஒன்றரை மணிநேர பயண தூரத்தில், திருவள்ளூர் மாவட்டத்திலும், செங்கல்பட்டு மாவட்டத்திலும் உள்ளன.

இவை தொழிலாளர்கள் தங்குவதற்கான விடுதிகள் அல்ல. கொரானா தொற்றால் விடுமுறை விடப்பட்டும் மற்றும் போதிய மாணவர்கள் இல்லாமலும் மூடப்பட்டுள்ள கல்லூரிகளின் மாணவர் விடுதிகள்.

திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள யசோதா மரைன் இன்ஜினியரிங் கல்லூரி விடுதி அவற்றுள் ஒன்று. இதில் தங்க வைக்கப்பட்டுள்ள பெண் தொழிலாளர்களுக்கு 16.12.2021 அன்று கொடுக்கப்பட்ட தரங்கெட்ட உணவு, விஷத்தன்மை கொண்டதாக இருந்திருக்கிறது. 200க்கு மேற்பட்ட பெண் தொழிலாளர்கள், வயிற்றோட்டம் வாந்தி உள்ளிட்ட உடல்நலக் கேடுகளுக்கு ஆளாகி உள்ளனர்.

அவர்கள் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்கள். எந்த மருத்துவமனையில் இருக்கிறார்கள், அவர்களுக்கு என்ன ஆனது? என்பதை பற்றி தொழிற் சாலை நிர்வாகமோ, மாவட்ட அரசு நிர்வாகமோ, மற்ற தொழிலாளர்களுக்கு தகவல் ஏதும் தெரிவிக்கவில்லை. அந்த ஆலையில் தொழிற்சங்கம் ஏதுமில்லை. அதாவது சங்கம் வைக்க நிர்வாகம் அனுமதிப்பதில்லை.

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட தொழிலாளர்களில் சிலர் இறந்து விட்டார்கள் என்ற வதந்தி வெகுவாகப் பரவியது. தமது சக தொழிலாளர்களுக்கு என்ன நேர்ந்தது என்று தெரியாமல், அதை யாரிடமிருந்து யார் மூலமாக கேட்பது என்று புரியாமல், கவனத்தை ஈர்ப்பதற்காக இந்த மறியல் போராட்டத்தை பெண் தொழிலாளர்கள் தாமாகவே தொடங்கி நடத்தியிருக்கிறார்கள்.

அதன் பின்னரே இது மக்கள் கவனத்திற்கு வந்தது. மூன்று மாவட்ட அதிகாரிகளும் வந்தார்கள். திருவள்ளூர் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் நிலைமையை சுமூகமாக சமாளிக்க முயன்று கொண்டிருந்தபோது, செங்கல்பட்டு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தானே நேரடியாக களத்தில் இறங்கி கடுமையான தடியடி நடத்தி இருக்கிறார். பெண் தொழிலாளர் கூட்டத்துக்குள் ஆண் காவலர்கள் புகுந்து, தடியடி நடத்தும்போது, எவ்வாறு அவர்கள் நடந்து கொள்வார்கள் என்பதை விளக்கித் தெரியவேண்டியதில்லை. எனவே தொழிலாளர்களின் கோபம் உக்கிரமானது.

முன்பு அந்த ஆலை மூடப்படுவதற்கு முன்னர், அங்கு சிஐடியு தொழிற்சங்கம் இருந்தது. தகவல் அறிந்த அவர்கள் தொழிலாளர்களை நிகழ்விடத்துக்கு சென்றிருக்கிறார்கள். காவல்துறை 68 பெண் தொழிலாளர்களையும், அவர்களுக்கு ஆதரவாக நின்ற 22 ஆண் தோழர்களையும் கைது செய்திருக்கிறது. பெண் தொழிலாளர்களை மட்டும், மறுநாள் நாள் காலையில் விடுவித்து இருக்கிறார்கள். சில தொழிலாளர்கள் இறந்துவிட்டதாக வதந்தியைப் பரப்பியதற்காக இந்தக் கைது என்று சொல்லப்படுகிறது.

இதேபோல சமூக வலைத்தளத்தில் பதிவிட்ட ஒருவரையும் காவல்துறை கைது செய்து சிறையில் அடைத்திருக்கிறது.

எத்தனாம் தேதி தொழிலாளர் அமைச்சர் திரு சி.வி.கணேசன் களத்துக்கு நேரடியாகச் சென்று இருக்கிறார். விபரங்களைக் கேட்டு அறிந்திருக்கிறார். அப்போதும் தொழிற்சாலை இயங்கி கொண்டிருந்தது. போராட்டம் பரவாமல் தடுக்கவும், பரபரப்பை போக்கவும் காலங்காலமாக கையாளப்படும் முறைமையின் படி, ஒரு வார விடுமுறை என்று தொழிற்சாலை தலைமை இயக்குனர் மூலம் அரசாங்கமே ஒரு வார விடுமுறை கொடுத்து உத்தரவிட்டிருக்கிறது.

பெண் தொழிலாளர் சங்கம், ஏஐடியுசி, எல்டியுசி உள்ளிட்ட பல தொழிற் சங்கங்களின் தலைவர்கள் ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொண்டிருக்கிறார்கள். ஏஐடியுசி சார்பில் காஞ்சி, செங்கை மாவட்ட பொதுச் செயலாளர் எம்.ஜகாங்கீரும், காஞ்சி மாவட்ட செயலாளர் ஏ.மூர்த்தியும் இவற்றில் பங்கேற்றிருக்கிறார்கள்.

விடுமுறை முடிந்து தொழிலாளர்கள் திரும்ப பணிக்கு வருவார்கள். தற்போதுள்ள நிலையே மீண்டும் தொடரப் போகிறது. அடுத்து மாவட்ட நிர்வாகமும் தமிழ்நாடு அரசும் என்ன செய்யப் போகின்றன என்பதே இப்போதுள்ள கேள்வி?

தமிழ்நாடு தொழிலாளர் துறை, முதலாளிகளோடு கைகோர்த்து, அவர்களது தொழிலாளர் விரோத செயல்கள் அனைத்துக்கும் ஆலோசனை தந்து துணை நிற்கும் துறையாக மாறி நீண்ட காலம் ஆகிறது. புதிய ஆட்சியிலும் அதுவே தொடர்கிறது. அதை ஆலோசனை கூட்டம் நடத்தி எல்லாம் எளிதாக மாற்றிவிட முடியாது.

**தொழிற்சங்கம் வைப்பது தொழிலாளர்களின் சட்டப்படியான உரிமை. அதனை முதலாளி தடுத்தால் அதைத் தட்டிக் கேட்டு உரிமையை உறுதிப்படுத்த வேண்டியது அரசாங்கத்தின் கடமை. தொழிற்சங்கம் வைத்தால் தொழிலாளர்களின் வேலை பறிக்கப்படுவது ரகசியமான ஒன்றல்ல. இதற்கு அரசும் தொழிலாளர் துறையும் என்ன செய்யப் போகின்றன?**

இரண்டு அல்லது நான்கு மாணவர்கள் தங்கும் அறைகளில் 8 முதல் 15 பெண்கள் வரை அடைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களது உடைகளையும் மிகச்சில உடமைகளையும் வைத்துக் கொள்வதற்கு கூட அங்கு எந்த இடமும் இல்லை. மேலும் தமக்கு மிகவும் தரம் இல்லாத உணவு வழங்குவதாகவும் தொழிலாளர்கள் நிர்வாகத்திடம் பலமுறை எடுத்துச் சொல்லி வலியுறுத்தி இருக்கிறார்கள்.

இவற்றைத் திருத்த நிர்வாகம் முயற்சி ஏதும் எடுக்கவில்லை. மனம் இல்லாத போது வழி எப்படி திறக்கும். ஆனால் இந்த மோசமான தங்குமிடம் மற்றும் உணவு அளிப்பதற்காக அவர்களுக்கு சராசரியாக தரப்படும் ரூ.9,000 மாத ஊதியத்தில் கூட பெரும்பகுதியை உணவு மற்றும் தங்குமிடச் செலவு என நிர்வாகமே பிடித்தம் செய்து கொள்கிறது.

இவற்றையெல்லாம் தொழிலாளர் துறையிடம் முறையிடுமாறு தொழிலாளர்களுக்கு அரசு அறிவுறுத்தியுள்ளது. நிர்வாகத்திடம் கேட்டால், விடுதிகளுக்கும் தமக்கும் சம்பந்தம் இல்லை என்றும் அவை காண்ட்ராக்டர்கள் ஏற்பாடு செய்யப்படுபவை என்றும் போக்குக் காட்டும். அரசுக்கு காதுகள் இருந்தால் மட்டும் போதாது. பிரச்சனையைப் புரிந்து கொள்வதற்கான இதயமும், உண்மையை பேசுவதற்கான வாயும், சட்டமீறல்களைத் தடுக்கும் மனவுறுதியும் இருக்க வேண்டும்.

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான விடுதியை நடத்துவது பற்றி 2014ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசு ஒரு சட்டம் இயற்றி இருக்கிறது. அதன்படி பாதுகாப்பான அறைகள், நல்ல காற்றோட்டம் போதுமான சுகாதார வசதிகள், உணவு உண்ணவும், படுக்கவும் தனித்தனி அறைகள், உறுதியான ஜன்னல்கள், கதவுகள், விடுதியில் தங்கும் ஒவ்வொரு ஐம்பது பேருக்கும் ஒரு மேலாளர், காவல்துறையிடம் நடத்தைச் சான்றிதழ் பெற்ற விடுதி மேலாளர் மற்றும் பாதுகாவலர் ஆகியவை ஒரு விடுதியில் இருக்க வேண்டும். அவை இருப்பதை உறுதிப்படுத்தி அரசாங்கத்திடம் விடுதியைப் பதிவு செய்ய வேண்டும். விடுதி நடத்துவதற்கு அந்த மாவட்ட ஆட்சியரிடம் விண்ணப்பித்து, உரிமம் பெற வேண்டும்.

உரிமம் பெறாமல் விடுதிகள் நடத்தினால் அது தண்டனைக்குரிய குற்றமாகும். சம்பந்தப்பட்ட மாணவர் விடுதிகள் பெண்களளைத் தங்க வைப்பதற்கான விடுதிகளாக மாற்றி உரிமம் பெற்றுள்ளதா? என்பதை அரசு தாமதம் இல்லாமல் ஆய்வு செய்ய வேண்டும்.

உலகமெங்கும் விற்பனைக்கான சந்தை இருக்கும், கொள்ளை லாபம் ஈட்டும் ஒரு பிரபலமான பன்னாட்டு நிறுவனம், நமது தமிழ்நாட்டு பெண்களை பதினெட்டாம் நூற்றாண்டு கொத்தடிமைகள் போல வேலை வாங்கிக் கொண்டு இருப்பதை மாநில அரசு சகித்துக்கொண்டு இருப்பது, அது பேசும் சமூகநீதி கோட்பாடுகளுக்கு பொருத்தமானதல்ல.

மோசமான தங்குமிடம் மற்றும் உணவகம் ஏற்பாடு செய்த, பாதிப்பு நிலவரம் குறித்து தொழிலாளர்களுக்கு தகவல் தர மறுத்த நிர்வாகத்தின் மீது உடனடியாக வழக்குத் தொடர வேண்டும்.

அதிகமான பெண் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தியுள்ள நிறுவனங்கள், அவர்களுக்கு வழங்கியுள்ள உணவு உறைவிடம் குறித்து விசாரணை நடத்த தொழிற் சங்கங்களும் அடங்கிய ஒரு விசாரணைக் குழுவை அமைக்க வேண்டும்.

இதுபோன்ற நிலைமைகளில் மாவட்ட நிர்வாகம் செயல்பட வேண்டிய முறைமைகள் குறித்து தெளிவான வரையறைகள் வகுத்து அறிவுறுத்தப்பட வேண்டும்.

சம்பந்தப்பட்ட அந்த விடுதிக்கு உரிமம் இல்லை எனில் உடனடியாக மூடுவதற்கு உத்தரவிட வேண்டும்.

போதிய இடவசதியும், தரமான உணவும் வழங்கத்தக்க விடுதிகளில் பெண் தொழிலாளர்களை தங்கவைக்க உரிய ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

முதலீடுகளை ஈர்ப்பதற்காக தொழிற்சாலை துவங்க பல சலுகைகளை அள்ளி வழங்கும் அரசு, வெளியூர்களில் இருந்து வந்து அங்கு பணிபுரியும் பெண் தொழிலாளர்கள் தங்குவதற்கு, உழைக்கும் பெண்களுக்கான தரமான விடுதிகளை அரசே உருவாக்குவேண்டும். இதற்காக நிர்வாகங்களை சார்ந்து இருப்பதையும், அதனைப் பயன்படுத்தி சம்பளத்தின் பெரும்பகுதியை நிறுவனங்கள் கொள்ளை அடிப்பதையும் தடுக்க வேண்டும்.

நிர்வாகத்தின் சட்ட விரோதச் செயலையும், பெண் தொழிலாளர்களின் உடல் நலக் கேடு குறித்து காட்டப்பட்ட அலட்சியத்தையும், மாவட்ட நிர்வாகத்தின் செயலற்ற தன்மையையும் வெளிக்கொண்டு வர, வேறு வழியில்லாமல் மறியலில் ஈடுபட்டவர்களை கைது செய்திருப்பது கண்டனத்துக்குரியது உடனடியாக எந்த நிபந்தனையும் இன்றி அவர்களை விடுதலை செய்ய வேண்டும்.

தொடர்புக்கு: **73971 30367**

## இண்டூர் பகுதியில் மாற்றுக் கட்சியினர் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்தனர்

தருமபுரி மாவட்டம் நல்லம்பள்ளி வட்டம் இண்டூர் வட்டாரக்குழு, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் இண்டூர், சிறுகலூர், மாரியம்பட்டி உள்ளிட்ட 10 கிளைகளில் அக்கட்சியிலிருந்து விலகி பி.டி.அப்புனு தலைமையில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினரும்,முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான ந.நஞ்சப்பன் முன்னிலையில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்தனர்.இந்த நிகழ்ச்சியில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தருமபுரி மாவட்ட துணைச் செயலாளர் எம்.கோபால் மாவட்ட பொருளாளர் எம்.மாதேஸ்வரன் மாநிலக்குழு உறுப்பினர் எஸ்.சின்னசாமி ஆகியோர் உடனிருந்தனர்.

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 84 இதழ் 41

# அவ்வாறாயின் மோடி!

"பஞ்சாப் வரலாறு கண்டிராத ஐந்து லட்சம் பேர் பங்கேற்கும் மாபெரும் பொதுக்கூட்டம்; மக்களைத் திரட்டி அழைத்து வர 3,485 பேருந்துகளும் 5000 இதர வாகனங்களும் ஏற்பாடு" எனப் பத்திரிகைகளுக்கு பேட்டி அளித்திருந்தார் பஞ்சாப் பிஜேபி தலைவர் அஸ்வனி குமார் சர்மா.

மூன்று வேளாண் சட்டங்களை திரும்ப பெற்றபின் முதலாவதாக, வரப்போகும் பஞ்சாப் சட்டப்பேரவைத் தேர்தலுக்கு கட்டியம் கூறும் பிரதமர் பொதுக்கூட்டம்.

உள்நாடு, வெளிநாடு என எங்கு சென்றாலும், "மோடியே திரும்பிப் போ" என ஆர்ப்பாட்டங்களும் கருப்பு கொடிகளும் களம் காண்கின்றன. அவர் தலைமை தாங்கும் கார்ப்பரேட் ஆட்சியின் மாட்சி அப்படி!

ஜனவரி 2ல் கிராமங்களிலும், 5ம் தேதி நகரங்களிலும் பஞ்சாப் முழுவதும், 'மோடியே திரும்பிப் போ' என ஆர்ப்பாட்டங்களை நடத்த விவசாயிகள் ஐக்கிய முன்னணி முடிவு செய்தது.

ஃபெரோஸ்பூரிலும் மாவட்ட ஆட்சியர் அலுவலகம்முன்பு ஆர்ப்பாட்டம் நடத்த விவசாயிகள் முயன்றனர். பஞ்சாப் மாநில அரசின் காவல்துறை தடுத்ததால், சாலையில் அமர்ந்து மறியல் செய்தனர்.

ஆனால், ஹெலிகாப்டரில் செல்வதாக இருந்த மோடி திடீரென திட்டத்தை மாற்றி அந்த வழியாக சாலையில் வரப்போகிறார் என அவர்களுக்கு தெரியாது.

அவர்கள் மறியல் செய்த இடத்துக்கும், அனைத்து பாதுகாப்பு ஏற்பாடுகளோடு பிரதமரின் கார் அணிவகுப்பு வந்து நின்று திரும்பிய பைராயனா மேம்பாலத்துக்கும் இடையே வெகு தூரம் இருந்தது.

மறியல் செய்த விவசாயிகள் மோடி கார் அணிவகுப்பு பக்கத்திலேயே வரவில்லை. அவர்களால் பிரதமரின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படவும் இல்லை. மறியல் செய்தவர்களிடம் பேசி அப்புறப்படுத்த, மாநில அரசுக்கு சில நிமிடங்கள் அவகாசம் தந்திருக்கலாம். அதை விட மோடியே நேரில் சென்றால் அவரைப் பார்த்த மகிழ்ச்சியில் தாமாக வழி விட்டிருப்பார்கள். அவர்களிடமும் இராஜதந்திரமாக வணக்கம் சொல்லி ஈர்த்திருக்கலாம். அவர்கள் நமது மக்கள்தானே, அன்னியர் அல்லவே!

பிரதமர் பயணம் செய்யும் சாலையை, பிரதமரின் தனிப்பாதுகாப்பு குழு (எஸ்பிஜி) எடுத்துக்கொண்டது. அவர் வந்து இறங்கிய பதிந்தா விமான நிலையத்தில் இருந்து 90 கிலோ மீட்டர் தூரம் பயணித்து இருக்கிறார். இடையில் வரவேற்பு நிகழ்வுகளும் நடந்துள்ளன. பாதுகாப்பு குறைபாடுகள் எதுவும் இல்லை.

பொதுக் கூட்டத் திடலில் மழையும் பெய்து, காற்றும் வீசி இருக்கிறது. மோடி உரையாற்ற இருந்த பொதுக் கூட்டத்தில் எதிர் பார்க்கப்பட்ட 5 லட்சம் பேருக்கு பதிலாக 500 பேர் கூட வரவில்லை. போட்ட நாற்காலிகள் அனைத்தும் காலியாக இருந்திருக்கின்றன. அதனாலோ, அன்றி வேறு காரணங்களாலோ கூட்டத்தை ரத்து செய்து, பிரதமர் திரும்ப நினைத்திருக்கலாம். அது அவரது சொந்த முடிவு!

ஆனால் விமானம் ஏறும் முன்பு "உயிரோடு திரும்ப அனுமதித்தித்ததற்கு நன்றி" என்று கொளுத்திப் போட்டதுதான் மோடியின் அரசியல்.

பஞ்சாப் மாநில பிஜேபி தலைவர்கள் பேசுவதைப் பார்த்தால் "மோடி உயிருக்கு ஆபத்து" என்பதுதான் தேர்தல் பிரச்சாரத் துவக்கம் எனத் துலக்கமாகிறது.

"ராகுல்காந்தி! மோடியின் உடலில் ஒரு சிறு கீறல் ஏற்பட்டு இருந்தாலும், 1984ஆம் கலவரங்களை விட மிகப்பெரிய கலவரத்தை உருவாக்கி இருப்போம். அவர் 130 கோடி மக்கள் கொண்ட குடும்பத்தின் தலைவர்" என்று பிஜேபி தலைவர் சுஷில் கேடியா என்பவரும், "மோடிஜி, இந்திராகாந்தி அல்ல, உனக்கு எழுதுவதற்கு காகிதமும், படிப்பதற்கு வரலாறும் கிடைக்காது, நினைவில் வை" என பிஜேபி எம்எல்ஏ அபிஜித் சிங் சங்காவும் ராகுல்காந்திக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர்!

இந்தியா விடுதலை பெறுவதற்கு நான்கு நாட்களுக்கு முன்பு கலவரம் நடந்துகொண்டிருந்த நவகாளிக்கு காந்தி சென்றார். கும்பல் கூடி அவர் தங்கியிருந்த வீட்டின் மீது கல் எறிந்தனர். மின் சாரம் துண்டிக்கப்பட்டது. சன்னல் கதவு கண்ணாடிச் சில்லுகள் தெறித்து அவர் தலை மீது விழுந்தன. வெறி பிடித்து நின்ற அந்தக் கூட்டத்தை நோக்கி காந்தி வந்தார். "உங்களை நம்பி என் பாதுகாப்பை ஒப்படைக்க வந்துள்ளேன். நீங்கள் வேறு மாதிரியாக முடிவெடுத்தால் அதற்கும் நான் மகிழ்ச்சி அடைவேன்!" அவர் தலைவர்!

அவரைச் சுட்டுக் கொன்றதற்காக பெருமைப்படுவது ஆர்எஸ்எஸ். எனவே அவர்களுக்கு பிடித்த சர்தார் வல்லபாய் பட்டேல் சொன்னதை பார்க்கலாம்:

"எவர் ஒருவர் தன்னுடைய அரசியல் பணியை விட தன்னுடைய உயிர்தான் முக்கியம் என்று நினைக்கிறாரோ, அவர் இந்த இந்தியா போன்ற நாட்டில் உயரிய பொறுப்பு எதையும் பெற்றுவிட கூடாது". பட்டேலும் தலைவர்!

அவ்வாறாயின் மோடி?!



# கீழே தள்ளியதோடு குழியும் பறிப்பதா?

ம.இராதாகிருஷ்ணன்



**உள்ளாட்சி அமைப்புகளின் பிரதான பணி யான தூய்மைப் பணியில் ஈடு பட்டுவரும் தூய் மைப் பணி யாளர்களில் பெரும் பகுதியினர் வருணாசிரம, சாதி ஆதிக்கத்தின் கோரப் பிடியில் சிக்கி சமூக, கல்வி, பொருளாதார ரீதியாக மிகவும் கடைநிலையில் அவதியுற்று வருபவர்கள் ஆவர்.**

தமிழ்நாட்டில் ஏற்பட்ட ஆட்சி மாற்றம் கடந்த பல ஆண்டுகளாக அனுபவித்து வரும் இன்னல் களிலிருந்து விடுபட வழிவகுக்கும் என இவர்கள் மிகுந்த நம்பிக்கையுடன் இருந்தனர். அந்த நம்பிக் கையை பொய்த்துப் போகச் செய்து "குதிரை கீழே தள்ளியதோடு குழியும் பறித்த" கதையைப் போல் அமைந்துள்ளது நகராட்சி நிர்வாக இயக்குனரின் 2.10.2021 நாளிட்ட சுற்றறிக்கை.

**இன்றைய தேவை:**

குப்பைகளையும் கழிவுகளையும் அகற்ற தேவை யான தொழிலாளர்களின் எண்ணிக்கை குறித்து 28.05.1942 க்கு பின்னர் 55 ஆண்டுகள் கழித்து வரையறுக்கப்பட்டது. அவ்வாறு வரையறுக்கப்பட்டதும் கலைஞர் முதல்வராக இருந்த காலத்தில் தான். இந்த அரசாணையில் "புதிய குடியிருப்புகள் உருவாகி நகராட்சிகள் பராமரிப்பு பகுதி பன்மடங்கு விரிவடைந்த நிலையில் குறைந்த பணியாளர்களைக் கொண்டு பொது சுகாதாரத்தை நல்ல முறையில் பராமரிக்க நகராட்சியால் இயலவில்லை. பல நகராட்சிகளில் வேலைப்பளு அதிகரிப்பை சமாளிக்க இயலவில்லை. எனவே கூடுதலாக துப்புரவு பணியாளர்களை நிய மனம் செய்ய வேண்டும். அவ்வாறு நியமனம் செய்யும் போது மாறுபட்ட சூழ்நிலையில் துப்புரவு பணி யாளர் நியமனத்திற்கான அளவு கோல் மாற்றி அமைக்கப் படுகிறது". என்று இந்த அரசாணை தெரிவிக்கிறது.

ஆனால் 1997 இல் இருந்ததை விட ஊர்கள் விரிவுபட்டும், மக்கள் தொகை அதிகரித்தும், நுகர்வு கலாச்சாரத்தின் விளைவாக தனிநபர் வெளியேற்றும், கழிவுகள் மற்றும் குப்பையின் சராசரி அளவு பல மடங்கு அதிகரித்தும் உள்ளன. இதனால் கழிவுகளை அப்புறப்படுத்துவது இன்றைக்கு மிகப்பெரும் சவாலாக மாறி இருக்கிறது. கழிவுகளை சேகரிக்கும் முறையும் முற்றிலும் மாறி இருக்கிறது. இவற்றை எல்லாம் கருத்தில் கொண்டு வேலை அளவு நிர்ணயித்து, கூடுதலாகும் பணிக்கேற்ப இப்போதுள்ளதை விட அதிகமான எண் ணிக்கையில் தூய்மைப் பணியாளர்களை நியமிக்க வேண்டியது அவசியமானது

**தமிழ்நாடு குப்பைக் காடுகளாகும் அபாயம்:**

ஆனால் நகராட்சிகளின் நிர்வாக இயக்குனரின் சுற்றறிக்கை வெளிச்சந்தை முறையில் தொழிலாளர்களை பணிக்கு அமர்த்திக் கொள்வதற்கான ஒப்பந்தங்கள் எவ்வாறு இருக்க வேண்டும் என அறிவுறுத்தி வெளி யிடப்பட்டுள்ளது. அது பெருமளவு குறைப்பதற்கு வழிவகுக்கிறது.

1997 இல் நிர்ணயிக்கப்பட்ட அளவு கோல் படி இன் றைய வேலை முறை இல்லை. உதாரணமாக குப்பைகளை மக்கும் குப்பை, மக்காத குப்பை என வீடுகளில் தரம் பிரித்து தர வேண்டும், அதனை தொழிலாளர்கள் சேக ரிக்க வேண்டும் எனக் கூறுகிறது திடக்கழிவு மேலாண்மை திட்டம். அப்படி தரம் பிரித்து வழங்க பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த கிராமப்புறங்களில் 12,000 தொழிலாளர்களும், நகர்ப்புறங்களில் ஆயிரக் கணக்கான தொழிலாளர்களும் கடந்த 5 ஆண்டு களாக வேலை செய்கிறார்கள். உண்மையில் குப்பைகளை சேகரிக்கும் தொழிலாளிகள்தான் அந்த வேலையை செய்கிறார்கள்.

கிராம ஊராட்சிகளில் இந்த திடக்கழிவு மேலான்மை திட்ட தொழிலாளர்கள் தூய்மை காவலர்கள் என அழைக்கப்படுகின்றனர். நாள் ஒன்றுக்கு 150 வீடுகளில் அவர்கள் குப்பைகளை சேகரித்து தர வேண்டும். காலை 6 மணிக்கு வேலைக்கு வரும் தொழிலாளி மாலை 6 மணிக்கு மேல் தான் வேலை முடிக்கிறார். அப்படியானால் 12 மணி நேரத்திற்கும் மேல் பணி புரிய வேண்டும். 150 வீடுகளுக்கே இந்த நிலைமை என்றால் நகராட்சி நிர்வாக இயக்குனரின் சுற்றறிக்கை இரண்டு தொழிலாளிகளில் ஒருவர் பேட்டரி மூலம் இயங்கும் வண் டியை இயக்கி 400 வீடுகளில் குப்பையை சேக ரிக்க வேண்டும் என்றும், கூறுகிறது. இலகு ரக வாக னத்தில் இரண்டு தொழிலாளிகள் 1200 வீடுகளில் குப்பைகளை சேகரிக்க வேண்டும் என்றும் கூறுகிறது. அது மட்டுமல்ல தினசரி தெருக்களை பெருக்கி சுத்தம் செய்யும் ஒரு தொழிலாளி மாநகராட்சிகளில் ஒரு வார்டு, நகராட்சி எனில் இரண்டு வார்டு அல்லது 8 கிலோ மீட்டர் சுத்தம் செய்ய கோருகிறது.

1997 இல் 250 குடியிருப்புகளுக்கு அல்லது மூன்று கிலோ மீட்டர் சாலைக்கு 3 பேர் கொண்ட குழு என வேலை அளவு கோள் வரையறுக்கப்பட்டுள்ளது. அன்று குப்பையை தரம் பிரித்து தரும் பணி இல்லை என்பதை சேர்த்து பார்த்தால் இன்றைய அளவு கோல் நிர்ணயம் மனித தன்மையற்றது என்பதை அறிய முடியும். இப்போதே பல்வேறு நகரங்களில் குப்பை காடு களையும், கழிவு நீர் ஓடைகளையும் சகிக்க முடியாத மக்கள் அங்கங்கு போராடி வருவதை காண முடிகிறது. இந்த சூழ்நிலையில் நகராட்சி நிர்வாக இயக்குனரின் சுற்றறிக்கையை அடிப்படையாகக் கொண்டு தூய்மை பணியாளர் எண்ணிகையை வெகுவாகக் குறைத்தால், தமிழ்நாட்டு நகரங்களின் பொது சுகாதாரம் மற்றும் கழிவு மேலாண்மை மிகுந்த சவால் நிறைந்ததாகி நகரங் களின் தெருக்கள் குப்பை காடுகளாகவும், கழிவு நீர் வாய்க்கால்களாகவும் மாறும் பேரபாயம் உள்ளது.

**கானல் நீரா சமூக நீதி பொருளாதாரம்?**

தொழிலாளர்களின் குறைந்தபட்ச ஊதியச் சட்டம் 1948 இன் படி உள்ளாட்சி நிறுவனங்களுக்கு தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அரசாணை குறைந்தபட்ச ஊதியத்தை தமிழ்நாடு அரசு நிர்ண யித்து அறிவித்துள்ளது. இந்தக் குறைந்தபட்ச ஊதி யத்தை விட சரிபாதி குறைவாக புதிதாக நிச்சயக் கப்பட்டுள்ள ஊதியம் இருக்கிறது. சட்டமும், உச்ச நீதிமன்றமும் உறுதி செய்துள்ள சம வேலைக்கு, சம ஊதிய முறை பேசப்பட்டு வரும் நிலையில், நிரந்தர தொழிலாளியின் ஊதியத்தில் ஐந்தில் ஒரு பங்கைக் கூட அனுமதிக்கவில்லை.

நடைமுறை சாத்தியமற்ற வகையில் வேலைப்பளு இரண்டு மடங்காக உயர்த்தப்பட்டுள்ளது. ஏற்கனவே பெற்று வரும் ஊதியத்தில் பாதியாக வெட்டி குறைத்த ஊதியம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் ஒப்பந்த மற்றும் நிரந்தரமற்ற தொழிலாளர்களுக்கு மாவட்ட ஆட்சியர்கள் நிர்ண யிக்கும் ஊதியம் வழங்க வகை செய்து தான் ஏற்கனவே ஒப்பந்தங்கள் உள்ளன. அதையும் முழுமையாக ஒப்பந்ததாரர்கள் வழங்குவதில்லை. குறைந்தபட்ச ஊதியத்திற்கும் குறைவாக ஊதியம் தருவது சட்ட விரோதமாகும்.**

தனியார் துறையினர் இதைச்செய்தால் தண்டிக்க வேண்டிய கடமை உள்ள அரசாங்கமே இவ்வாறு நினைக்கும் நிலை கைவிடப்பட வேண்டியது அவசியமாகும். தற்போது ஈரோடு மாவட்டத்தில் ரூ.693/ கோவை யில் ரூ. 450/ திருப்பூரில் ரூ.520/ மதுரையில் ரூ. 450/ ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. அதனினும் குறைவான தொகையை தமிழ்நாடு முழுமையும் ஒரே ஊதியம் என்று கூறி ரூ.391/ நிர்ணயித்திருப்பது சமூக நீதிக் கொள்கைக்கு எதிரானதாகும். எனவே இந்த சுற்றறிக்கையை முற்றாகக் கைவிட்டு குறைந்தபட்ச ஊதிய அரசாணையை விட மேம்பட்ட ஊதியம் நிர்ண யிப்பது அவசர அவசியமாகும்.

சமூக நீதி என்பது அரசியல் கொள்கை மட்டுமல்ல, இந்த அரசு சமூகநீதிப் பொருளாதாரத்தை அமுலாக்கும் என்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கூறியிருக் கிறார். ஆனால் இந்த சுற்றறிக்கை அரசின் நோக் கத்துக்கு அடிப்படையிலேயே எதிராக உள்ளது.

**தேவை சரியான அணுகுமுறை:**


செய்யவேண்டிய பணியின் அளவை சரியாக கணக்கிட்டு எண்ணிக்கையை அதிகரிப்பதும், அந்தத் தொழிலாளர்கள் வாழ்க்கை நடத்த தேவையான தொகையை ஊதியமாக கொடுப்பதும் தான் பொருத்தமானதாகும். ஆனால் செலவிட வேண்டிய தொகையை மிகக்குறைவாக முன்கூட்டியே நிர்ண யித்துவிட்டு, அதற்கேற்ப தொழிலாளர் எண்ணிக்கை, வேலைப்பளு, ஊதியத்தை வரையறை செய்வது தலைகீழ் அணுகுமுறையாகும். ஏற்கனவே அரசாணை நிலை எண் 101 நாள் 30.04.1997 இல் நிர்ணயிக்கப் பட்டுள்ள வேலை அளவு கூட அதிகமானதாகும். உள் ளாட்சி தொழிலாளர் பிரதிநிதிகள் மற்றும் துறை வல்லுனர்களைக் கொண்ட குழு அமைத்து வேலைப் பளுவை குறைத்து மறு நிர்ணயம் செய்ய வேண்டியது அவசியமாகும்.

தொடர்புக்கு: **85248 67888**



எஸ். தோதாத்ரி

தத்துவார்த்தம் 12



**அவரது முக்கியமான பங்களிப்பு மார்க்சியத்தை திரித்து கூறுபவர்கள், சீர்திருத்த முயற்சிப்பவர்கள் ஆகியோருக்கு பதில் அளித்ததில் உள்ளது. அவரது "பொருள் முதல்வாதமும் அனுபவ வாத விமர்சனமும்" என்ற நூல் இதனை விரிவாகச் சொல்கிறது. அவர் காலத்தில் விஞ் ஞானம் வேகமாக வளர்ந்து வந்தது. எலக்ட்ரான்கள் கண்டு பிடிக்கப்பட்டு விட்டன. பொருள் சக்தியாக மாறும்; சக்தி பொருளாக மாறும் என்ற கொள்கை உருவாக்கப்பட்டது. இவற்றின் காரணமாக தத்துவத்திலும் மாறுதல்கள் தோன்றின.**

# லெனினிசம்

**மார்க்சியம் பற்றிப் பேசும் பொழுது லெனினைப் பற்றி கூறாமல் இருக்க முடியாது. ஏனென்றால் மார்க்சியத்தை ஏகாதிபத்திய காலகட்டத்திற்கு பொருத்திக் காட்டியவர் லெனின் ஆவார். அவர் ஒரு அரசியல்வாதி, தத்துவவாதி, நடைமுறைவாதி ஆகியன ஒன்றாக இணைந்தவர் ஆவார். அவருடைய தீவிரமான அரசியல் நடவடிக்கைகளுக்கு இடையே பல விஷயங்களை ஆழ்ந்து கற்கவும் செய்தார். அது மட்டுமல்ல சோசலிச சமுதாயத்தை நடைமுறைப்படுத்தும் பணியிலும் ஈடுபட்டார். மார்க்ஸ் கொள்கையை மட்டுமே வகுத்துக் கொடுத்தவர் ஆவார். அவர் கூறிய சோசலிசத்தை நடைமுறைப்படுத்தும் வாய்ப்பு அவருக்குக் கிட்டவில்லை.**

ஆனால் லெனின் அதனை நடைமுறைப்படுத்திய அனுபவம் கொண்டவர் ஆவார். மார்க்சியத்தை பரப்பிய மற்ற மற்ற எல்லா சிந்தனையாளர்களுக்கும் இல்லாத ஒரு வாய்ப்பு லெனினுக்கு இருந்தது. எனவே, அவர் மார்க்சியம் பற்றிய கூறியவற்றை லெனினிசம் என்ற பெயரால் அழைக்கிறார்கள். ஸ்டாலினின் "லெனினிசத்தின் அடிப்படைகள்" என்பது இதைத்தான் விளக்குகிறது.

லெனின் காலத்தில் முதலாளித்துவ நாடுகளில் பெரும் மாறுதல்கள் நடந்து கொண்டிருந்தன. மார்க்ஸ் காலத்தில் இருந்த ஆலை மூலதனம் என்பது ஏகாதிபத்திய மூலதனமாக மாறிக்கொண்டிருந்தது. அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி போன்ற நாடுகள் உலகின் பல பாகங்களில் காலனி களைப் பிடித்து தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். மூலதனம் சர்வதேச தன்மையுள்ளதாக மாறிக் கொண்டிருந்தது. இதில் முரண்பாடுகளும் வளர்ந்து கொண் டிருந்தன. அந்தந்த நாட்டின் தன்மைக்கு ஏற்ப உழைக்கும் மக்களது போராட்டங்களும் இடம் பெற்றுக் கொண்டிருந்தன. இவற்றையெல்லாம் விளக்கி லெனின் "முதலாளித்துவத்தின் உச்சகட்டம் ஏகாதிபத்தியம்" என்ற நூலை எழுதினார். ரஷ்யாவில் எவ்வாறு முதலாளித்துவம் வளர்ந்தது என்பதை விளக்கினார். இப்பொழுது உள்ள அரசு ஏகாதிபத்திய அரசு; இதனை ஒழித்தால்தான் பாட்டாளிவர்க்க ஆட்சியை கொண்டுவர முடியும் என்று அவர் கூறினார்.

மார்க்சியத் தத்துவத்திற்கு அவர் மிகப் பெரிய சேவை செய்துள்ளார். லெனினிற்கு முந்தியே பிளக்கனாவ் இதனை செய்திருந்தாலும், அவரை விட அதிகமான அளவிற்கு மார்க்சியத்தை தெளிவுபடுத்தியுள்ளார். அவருடைய "தத்துவக் குறிப்பேடுகள்" என்பதில் இதனைக் காணலாம். ஹெகலியத்தை மிக நுணுக்கமாக ஆராய்ந்து, அதன் இயங்கியல் கூறுகளை அவர் வகைப்படுத்திக் காட்டியுள்ளார். ஆனால், அதன் கருத்து முதல்வாதத்தை அவர் ஏற்றுக் கொள்ளவில்லை.

சில ஜெர்மானிய தத்துவவாதிகள் பல புதிய விளக்கங்களை முன்வைத்தனர். இதில் ஒன்று அனுபவம் வாதம் என்பது. பொருள் புறத்தே இருக்கிறது; புலன்கள் மூலம் அது பற்றிய அனுபவம் நமக்குக் கிடைக்கிறது. இந்த புதிய கொள்கையினர் இந்த அனுபவங்கள் மட்டும் தான் உண்டு என்று கூறினார். அதோடு நின்றிருந்தால் பரவாயில்லை. இவற்றிற்கு பொருட் தன்மை உண்டு என்று கூறினர்.

இவற்றை மூலகங்கள் என்றும் அழைத்தனர். இது கருத்து முதல் வாதத்தையும், பொருள்முதல்வாதத்தையும் இணைக்கும் போக்கு ஆகும். இவர்கள் மார்க்சியத்துடன் இதனை இணைத்தனர்.

இதற்கு அனுபவவாத விமர்சனம் என்று பெயர். இவர்கள் புதிய விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளின் அடிப்படையில் பொருள் மறையும் என்று கூறினர். இது சுற்றிவளைத்து பொருளை மறுக்கும் போக்கு ஆகும்.

இவற்றை லெனின் மறுத்தார். பொருள் என்பது புறத்தே உள்ளது. அது நமது புலன்கள் மூலம் மனதில் பிரதிபலிக்கிறது என்ற வரையறையை முன்வைத்தார். பொருள் மறையாது என்று எடுத்துக்காட்டினார். இவ்வாறு மார்க்சியத்தை கருத்து முதல்வாதத்துடன் இணைத்துப் பேசுபவர்களது மார்க்சியத்தை லெனின் "பிச்சைக்காரன் கஞ்சி" என்று அழைத்தார்.

மார்க்சியத்தை மாற்ற விரும்புபவர்களது போக்கினை அவர் இரண்டு வகையாகப் பிரித்தார். ஒன்று அதனை உள்ளிருந்தே மாற்ற முயற்சிப்பது.இதனை அவர் சீர்த்திருத்த வாதம் என்று அழைத்தார். மற்றொன்று வெளியே இருந்து அதனை மாற்றுவது, இதனை திரிபுவாதம் என்று அழைத்தார். மார்க்ஸ், ஏங்கல்ஸ் வழியில் நின்று அதன் அடிப்படைகளை நடைமுறைப்படுத்திய பொழுது லெனின் பெற்ற அனுபவங்களை அவரது தத்துவப் பங்களிப்புகளில் காணலாம்.

தொடர்புக்கு: **98947 83657**

---

## மணப்பாறை நகர்ப்பகுதியில்

# அரசு கலை அறிவியல் கல்லூரி அமைத்திட வேண்டும்

## மணப்பாறை நகர மாநாட்டில் தீர்மானம்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மணப்பாறை 13வது நகர மாநாடு நடைபெற்றது. தங்கமணி, மனோன்மணி, மரிய ராஜ் ஆகியோர் தலைமை வகித்தனர்.

மாநாட்டு கொடியினை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் புறநகர் மாவட்ட செயலாளர் த.இந்திரஜித் ஏற்றிவைத்தார். மாநாட்டினை தொடங்கி வைத்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி புறநகர் மாவட்ட துணை செயலாளர் செல்வராஜ் உரை நிகழ்த்தினார்.

சுப்பிரமணி அஞ்சலி தீர்மானம் வாசித்தார். சவுகத் அலி வரவேற்றார்.

ஜனசக்தி உசேன் வேலை அறிக்கை சமர்ப்பித்தார்.

நல்லுசாமி வரவு – செலவு அறிக்கையை சமர்ப்பித்தார்.

புதிய நிர்வாகிகளாக 27 பேர் கொண்ட நகர குழு அமைக்கப்பட்டது.

நகர செயலாளராக ஜனசக்தி உசேன் தேர்வு செய்யப்பட்டார்.

மணப்பாறை குளத்தில் ஆக்கிரமிப்புகளை அகற்றி குளம் முழுமையாக தூர்வார படவேண்டும்.

மணப்பாறை பகுதியில் சாக்கடைகளை அகலப்படுத்தியும், ஆழப்படுத்தியும் நீர் தேங்காமல் செல்வதற்கு நகராட்சி நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உட்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மரிய ராஜ் நன்றி கூறினார்.

---

>> 01ம் பக்கத் தொடர்ச்சி



2. 10 லட்சம் இளைஞர்களுக்கான வேலையை நிரப்ப வேண்டும். மேலும் பகத்சிங் வேலை உறுதியளிப்பு சட்டம் BNEGAACT உடனே நிறைவேற்ற வேண்டும்.

3. தனியார் துறையில் இடஒதுக் கீட்டை உறுதி செய்க....

4. விருப்பம் உள்ள மாநிலங்களுக்கு நீட் தேர்விலிருந்து நிரந்தர விலக்கு அளித்திடுக.

5. புதுச்சேரி யூனியன் பிரதேசத்திற்கு மாநில அந்தஸ்து வழங்கிடுக.

உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாநாட்டு விவரங்கள் அடுத்த இதழில்...

---

# திருச்சி மாவட்டத்தோடு கடவூர் ஊராட்சியை இணைக்க வேண்டும்

## வையம்பட்டி ஒன்றிய மாநாட்டில் கோரிக்கை

மணப்பாறை தாலுகா வையம்பட்டி ஒன்றியத்தில், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி 13வது ஒன்றிய மாநாடு நடைபெற்றது. மரிய டெய்சி ராணி பழனிச்சாமி ஸ்டீபன் சேவியர் தலைமை வகித்தனர்.

மாநாட்டின் கொடியினை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி திருத்துறைப்பூண்டி எம்எல்ஏ க.மாரிமுத்து ஏற்றிவைத்தார்.

தங்கராஜ் வரவேற்றார். அஞ்சலி தீர்மானத்தை வீராசாமி வாசித்தார்.

மாநாட்டை தொடங்கி வைத்து மாநிலக்குழு உறுப்பினர் செல்வராஜ் உரை நிகழ்த்தினார்.

மாநாட்டை வாழ்த்தி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி புறநகர் மாவட்ட துணை செயலாளர் பழனிச்சாமி, நகர செயலாளர் ஜனசக்தி உசேன், ஒன்றிய துணை செயலாளர் ராஜேந்திரன், மருங்காபுரி ஒன்றிய செயலாளர் வெள்ளக் கண்ணு, கும்பகோணம் போக்குவரத்து கழக மண்டல ஏ.ஐ.டி.யூ.சி செயலாளர் சுப்பிரமணியன் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

வேலை அறிக்கையினை ஒன்றிய செயலாளர் சண்முகானந்தம் வாசித்தார்.

பதினோரு பேர் கொண்ட ஒன்றிய குழுவும், 2 பேர் அழைப்பாளர்களாகவும் தேர்வு செய்யப்பட்டனர். ஒன்றியச் செயலாளராக சண்முகானந்தம், ஒன்றிய துணைச் செயலாளர்களாக தங்கராசு, ஸ்டீபன் சேவியர், பொருளாளராக செலின் லீமா ரோஸி ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

புறநகர் மாவட்ட செயலாளர் த.இந்திரஜித் புதிய நிர்வாகிகளை வாழ்த்தி உரை நிகழ்த்தினார்.

கரூர் மாவட்டம் கடவூர் ஊராட்சியை திருச்சி மாவட்டத்துடன் இணைக்க வேண்டும்.


வையம்பட்டி ஒன்றியத்தில் உள்ள வி பெரியபட்டி, தவளை வீரன் பட்டி, முகவனூர், அமயபுரம்,




பழையகோட்டை ஊராட்சிக்கு உட்பட்ட வீடில்லா விவசாய தொழிலாளர்கள் வீட்டுமனை பட்டா கேட்டு விண்ணப்பித்துள்ள அனைவருக்கும் வீட்டுமனை பட்டா வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



நீ.சு.பெருமாள்



# அழிவின் விளிம்பில் நெசவுத் தொழில்...!

**மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் தலைமையில் கடந்த வாரத்தில் டெல்லியில் நடைபெற்ற கவுன்சில் கூட்டத்தில் கைத்தறி துணிகளுக்கான 12 சதவீத ஜிஎஸ்டி வரியை தற்காலிகமாக ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.**

இதில் இன்னொரு தகவலும் வெளியாகி உள்ளது. கடந்த ஆண்டில் ( 2020) வசூலான ஜிஎஸ்டி வரி வருவாயை விட நடப்பாண்டில் 13 விழுக்காடு அதிகம் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

இருந்தாலும் இந்தியாவில் இருக்கும் கோடிக்கணக்கான நெசவுத் தொழிலின் வரி உயர்வு கைவிடப்படாமல் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. அதாவது தலை மேல் கத்தி தொங்க விடப்பட்டுள்ளது.

இதனால் பாரம்பரியமான நெசவுத் தொழில் அழிவின் விளிம்புக்கு சென்று கொண்டிருக்கிறது

இந்தியாவில் வேளாண்மைக்கு அடுத்தபடியாக அதிக மக்கள் செய்கின்ற தொழில் நெசவுத் தொழிலாகும்.

இந்த நெசவுக்குத் தேவைப்படுகின்ற கச்சாப் பொருட்களின் விலை உயர்வு என்பது இன்று வரலாற்றில் என்றும் இல்லாத அளவுக்கு உயர்ந்துள்ளது. தறி நெய்வதற்கும், ஊடை நூலுக்கும் பயன்படுகின்ற பருத்தி நூல் கிலோ ஒன்றுக்கு 40 விழுக்காடு அளவிற்கு விலை உயர்ந்துள்ளது.

இதனால் கைத்தறி நெசவு நெய்து பிழைக்கும் நெசவாளர்களின் வாழ்வாதாரம் மிகப்பெரும் அபாயத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. உழவர்களும், நெசவாளர்களும் நிரம்பிய இந்தியாவில் பருத்தி விவசாயத்திற்கு நம் நாடு போதிய முக்கியத்துவம் தருவதில்லை என்பதே கசப்பான உண்மையாகும்.

மேலும் பருத்தி பஞ்சு நூல் மீது விதிக்கும் மோசமான வரி விதிப்பு என எல்லாம் சேர்ந்து பருத்தி விவசாயத்தில் இருந்து விவசாயிகளை அப்புறப்படுத்தியது எனலாம்.

2021–22 ஆம் ஆண்டிற்கான மத்திய வரவு செலவுத் திட்டத்தில் 5 சதவீதம் அடிப்படை சுங்கவரி, 5 சதவீதம் விவசாய உள்கட்டமைப்பு மேம்பாட்டுவரி மற்றும் அதனுடன் 10 சதவீதம் சமூக நலவரி என விதிக்கப்படுகிறது.

இதனால் இந்தியாவில் பருத்தியை விளைவித்து ஏற்றுமதி செய்யும் எண்ணமே சிறிய அளவிலான ஏற்றுமதியாளர்களுக்கு இல்லாமல் போனதன் காரணம்தான் பருத்தி விவசாயம் தோல்வியுற்று வருகிறது.

அதே நேரத்தில் மிகப்பெரும் ஜவுளி வர்த்தக வணிகர்கள் இறக்குமதியில் ஆர்வம் காட்டி அவர்கள் நிர்ணயிக்கும் விலை தான் என்று வருகிறபோது விலை உயர்வு மிக அதிகமாகி வருகிறது.

ஜவுளி உற்பத்திக்கு குறிப்பாக பின்னலாடை தயாரிப்புக்கு தேவைப்படும் 40 ஆம் எண் கொண்ட நூல் அதேபோல 30 மற்றும் 20 ஆம் எண் கொண்ட நூல் என இந்த மூன்றுவகை நூல் மட்டுமே கடந்த ஆண்டைவிட நடப்பாண்டில் 62 விழுக் காடு விலை உயர்ந்துள்ளது.

திருப்பூர், கோவை, ஈரோடு, கரூர் போன்ற மாவட்டங்களில் தயாராகும் பின்னலாடைகள் அமெரிக்கா, ஐரோப்பா, ஆஸ்திரேலியா, கனடா போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

இந்தியாவில் உற்பத்தியாகும் மொத்த பின்னலாடையில் 70 விழுக்காடு தமிழகத்தில்தான் தயாராகிறது.

குறிப்பாக திருப்பூர் மாவட்டத்தில் மட்டும் கடந்தாண்டில் தயாரான பின்னலாடைகளின் ஏற்றுமதியால் 26 ஆயிரம் கோடி ரூபாய் அன்னியச் செலவாணியாக இந்தியாவுக்கு கிடைத்துள்ளது. உள்நாட்டு வணிகத்தில் மட்டும் 22 ஆயிரம் கோடி ரூபாய்க்கு வர்த்தகம் நடைபெற்றுள்ளது.

தற்போது இந்த பின்னலாடை உற்பத்திக்கு கடுமையான பின்னடைவு ஏற்பட்டுள்ளது. இன்றைய நிலையில் பின்னலாடை தயாரிப்புக்கு பயன்படும் ஓசைரி நூல் மட்டும் கிலோ ஒன்றுக்கு 50 ரூபாய் விலை உயர்ந்துள்ளது.

இதே போன்று விலை உயர்வு நீடிக்கும்பட்சத்தில் ஜவுளி வர்த்தகத்தில் இந்தியாவுக்கு போட்டியாக இருக்கும் நாடுகளான சீனா, வியட்நாம், கம்போடியா, இலங்கை போன்ற நாடுகளுக்கு இந்தியாவின் பின்னலாடை ஏற்றுமதி மாறிச் செல்லும் அபாயம் ஏற்பட்டிருக்கிறது.

பின்னலாடை உற்பத்தியில் தொழில் செய்யும் தொழிலாளர்கள் அதேபோல கைத்தறி மற்றும் விசைத்தறியில் உள்ள நெசவாளர்கள் என நேரடியாகவும், மறைமுகமாகவும் சுமார் 31 லட்சம் குடும்பங்கள் தமிழகத்தில் வேலைவாய்ப்பை இழக்கும் சூழல் ஏற்பட்டுள்ளது.

இதற்கான எதிர்வினையாகத்தான் மக்கள் திரள் போராட்டங்கள் கும்பகோணம் திருப்பூர், கோவை, ஈரோடு, பரமக்குடி மதுரை உள்ளிட்ட நகரங்களில் தற்போது நடைபெற்று வருகின்றன. இந்த அபாயத்தை உணர்ந்து மத்திய அரசு தீவிர கவனம் செலுத்தி செயற்கையான முறையில் விலையேற்றம் கண்டிருக்கிற நூல் விலையை கட்டுப்படுத்த முன்வர வேண்டும்.

பருத்தி, பஞ்சு, நூல் உள்ளிட்ட மூலப்பொருட்களை நேரடியாக ஏற்றுமதி செய்வதுதான் இந்த விலை உயர்வுக்கு முக்கிய காரணமாகப் பார்க்கப்படுகிறது.

மேலும் இறக்குமதி என்கிற பெயரில் வெளிநாடுகளில் இருந்து நூல் இறக்குமதி செய்வோர் முறையாக விநியோகம் செய்யாமல் ஊக வணிகத்தின் அடிப்படையில் செயற்கையான முறையில் பதுக்குவதும் நூல் விலை உயர்வுக்கு முக்கிய காரணமாக உள்ளது.

நூற்பாலைகளின் நேரடி பருத்தி கொள்முதல் உச்சவரம்பை இந்திய பருத்தி கழகம் நிர்ணயம் செய்ய வேண்டும். அதேபோல ஊக வணிகத்தை தவிர்க்க ஒட்டுமொத்த இறக்குமதி வரியாக உள்ள 11 சதவீத வரியை முற்றிலுமாக நீக்க வேண்டும்.

மின்னணு ஏல முறையில் மிகப்பெரும் வணிகர்களே நூல் மற்றும் பஞ்சு, பருத்தி கொள்முதலில் இருக்கும் நிலைமையை மாற்ற வேண்டும். சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களும் மின்னணு ஏலத்தில் பங்குபெற ஏதுவாக குறைந்தபட்சம் 500 பருத்தி பேல்கள் போதுமானது என்கிற முறையில் தளர்த்த வேண்டும்.

மேலும் பருத்தி விவசயாத்தை ஊக்குவிக்கும் வகையில் சிறப்பு மானியங்கள் அறிமுகப்படுத்த வேண்டும்.

இதனால் மிகப்பெரும் ஜவுளி வர்த்தகம் மட்டுமல்ல, சாதாரண கைத்தறி நெசவுக்கும் தேவைப்படுகின்ற கச்சாப் பொருட்களின் விலையும் பெருமளவுக்கு குறையும் வாய்ப்புகள் ஏற்படும்.

**பல ஆயிரம் கோடிகளில் புழங்கும் பின்னலாடை ஜவுளி வணிகமே தற்போதைய விலை உயர்வால் திணறும் சூழலில் கைத்தறியின் நிலை இன்னும் மோசமாக பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் கைத்தறியில் தயாராகும் சேலைகளுக்கு விதிக்கப்படும் 5 சதவீத ஜிஎஸ்டி வரியை உயர்த்தி 12 சதவீத வரியாக இன்றைய சூழலில் மாற்றியிருப்பது ஒட்டுமொத்த கைத்தறி மற்றும் சிறிய அளவிலான விசைத்தறி நெசவாளர்களுக்கு மிகப்பெரும் பாதிப்பை ஏற்படுத்தும்.**

நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு விசைத்தறிகள் பெருகிய போது அதனை கைத்தறி எதிர்கொள்ள வேண்டும் என்பதற்காக தமிழக அரசு ரிபேட் என்கிற தள்ளுபடி மானியத்தை வழங்கியது.

ஆனால் இன்று எல்லாமே ஒன்றுதான் என்கிற வகையில் ஜிஎஸ்டி வரிவிதிப்பது தவறான நிர்வாக நடைமுறையாகும்.

கதர்துணி உற்பத்திக்கு முற்றிலுமாக ஜிஎஸ்டி வரிவிதிப்பில் இருந்து விலக்களித்ததுபோல் கைத்தறியில் தயாராகும் துணிகளுக்கும் ஜிஎஸ்டி வரி விதிப்பில் இருந்து விலக்களிக்க வேண்டும்.

பருத்தி, பிறகு பஞ்சு, அதன் பின்னர் நூற்பாலையில் தயாராகும் நூல், பிறகு சாயமிடுதல் என அனைத்து நிலையிலும் ஜிஎஸ்டி வரி விதிக்கப்படுகிறது. இந்த மூலப் பொருட்களை பயன்படுத்தி தயாராகும் துணிகள் மீது வரிகள் விதிப்பது எந்த விதத்திலும் நியாயமானதல்ல.

கடந்த காலங்களில் காங்கிரஸ் ஆட்சியில் மத்திய ஜவுளித் துறை அமைச்சர் ஆனந்த் சர்மா அவர்களைச் சந்தித்து நெசவாளர்களின் கடன் தள்ளுபடி குறித்து பேசினோம்.

அப்போதைய மாநிலங்களவை உறுப்பினர் து ராஜா, ஏஐடியூசி கைத்தறி சம்மேளன பொதுச் செயலாளர் எஸ் பி ராதா, செயலாளர் என் எஸ் பெருமாள் ஆகியோர் டெல்லியில் நேரடியாகவே சந்தித்துப் பேசினோம்... ஜவுளித்துறை அமைச்சகத்தில் இருக்கும் கைத்தறித் துறையை பிரித்து தனி அமைச்சகம் ஏற்படுத்த வேண்டும் என்று கோரிக்கை வைத்தோம். இன்று வரை நிறைவேறவில்லை.

ஆனால் கடனால் நலிவுற்ற நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு நிதிகள் வந்தன. அது போன்ற நடவடிக்கைகள் மேற் கொள்ள தொழிற்சங்க ங்கள் சொல்வதைக் கேட்க மத்திய ஜவுளித் துறை அமைச்சர் தயாராக வேண்டும்.

கோடிக்கணக்கான மக்களுக்கான அரசாங்கம் இது என்கிற நம்பிக்கைதான் மக்களாட்சியின் மாண்பாகும்.

சில நூறு பேர்களின் வணிகம் மேம்பட சிந்திக்காமல் சாமானிய நெசவாளர்களின் குரலுக்கும் அரசாங்கம் செவி சாய்க்கும் என்கிற வகையில் மத்திய அரசு செயல்பட வேண்டும்.

அதற்கு கடந்த காலத்தில் தமிழகத்திலேயே அதற்கான வரலாறு உண்டு.

எம்ஜிஆர் முதலமைச்சராக இருந்தபோது அப்போதைய நிதியமைச்சர் நெடுஞ்செழியன் பட்டு சேலைக்கு ஐந்து சதவிகித விற்பனை வரியைக் கொண்டு வர திட்டமிட்டார்.

ஐந்தாயிரம் ரூபாய் செலவழித்து பட்டுச்சேலை வாங்கும் மக்கள் ஐந்து சதவீத வரியான 250 ரூபாய் செலுத்தமாட்டார்களா என்றார்.

நெசவாளர் பகுதியில் இருந்து சட்ட மன்றத்திற்கு தேர்வான எஸ் ஆர் ராதா இந்த வரி விதிப்பை எதிர்த்தார்.

கைத்தறியில் பட்டுச் சேலை நெய்து விற்பனை செய்பவர்கள் மிகப் பெரும் முதலாளிகள் அல்ல.

சிறிய அளவில் பட்டுச்சேலை உற்பத்தி செய்து தொழில் நடத்தும் நெசவாளர்களும் இந்த வரிவிதிப்பால் பாதிப் படைவார்கள். வணிகவரி அதிகாரிகளால் துன்புறத்தப் படுவார்கள் என்று முதலமைச்சரிடம் தெளிவு படுத்தினார்.

நிலைமையை புரிந்து கொண்ட எம்ஜிஆர் அந்த வரிவி திப்பை தவிர்த்தார்.

இந்தியப் பிரதமர் மோடி, நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் ஆகியோர் வரி வசூல் என்பதே இலக்காக இல்லாமல் மக்களின் வாழ்வாதாரத்தையும் கவனத்தில் கொண்டு செயல்பட வேண்டிய நேரம் இது.

தொடர்புக்கு: **94426 78721**

**கன்டோன்மென்ட்**

## செங்கொடி ஆட்டோ நிறுத்தம் பெயர் பலகை திறப்பு

சென்னை செயின்ட் தாமஸ் மவுண்ட் ஹாஸ்பிட்டல் அருகில், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தென் சென்னை மாவட்டச் செயலாளர் எஸ்.ஏழுமலை தலைமையில் கன்டோன்மென்ட் செங்கொடி ஆட்டோ நிறுத்தம் என்ற புதிய பெயர் பலகை திறக் கப்பட்டது. தென்சென்னை மாவட்ட தலைவர் ரேணுகாதாமஸ், தென் சென்னை மாவட்ட பொதுச்செயலாளர் எம்.ரங்கநாதன், டி.சுப்பிரமணி மற்றும் சேகர்எம்போரியம் உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.

# சங்கே முழங்கு!

### தியாகி எஸ்.ஜி.எம். 43 வது நினைவு தின, பேரணி பொதுக்கூட்டம்

## இரா.முத்தரசன் மலர் வைத்து மரியாதை



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தேசியக்குழு உறுப்பினராக, மாநில நிர்வாகக்குழு உறுப்பினராக, விவசாய தொழிலாளர் சங்க மாநிலத் தலைவராக, அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் மாநிலத் தலைவராக, அகில இந்திய துணைத் தலைவராக திறம்பட செயலாற்றி புகழ் பெற்றவர் தோழர் எஸ்.ஜி.எம். என்கிற சித்தமல்லி கோ.முருகையன் ஆவார்.

இவர் கோட்டூர் ஒன்றிய பெருந் தலைவராக 10 ஆண்டு காலம் பணியாற்றிய போது, இவரது அதிரடி செயல்பாடுகள் சிரமதான பணி மூலம் இந்தியா மட்டுமல்லாது உலகம் முழுவதும் பிரபலம் அடைந்து பல்வேறு நாடுகளுக்கும் சென்று மாநாடுகளில் பங்கேற்றவர். இவரின் செயல்பாடுகளை இந்திய நாடாளுமன்றமே பாராட்டியது என்பதெல்லாம் வரலாறு. பின்னர் நாகை நாடாளுமன்ற உறுப்பினராக வெற்றி பெற்று நாடு போற்றும் நாடாளுமன்ற உறுப்பினராக திறம்பட செயலாற்றி கொண்டு இருந்தபோது நள்ளிரவு சமூக விரோதிகளால் படுகொலை செய்யப்பட்டார். இந்திய வரலாற்றில் மக்களால் தேர்தெடுக்கபட்ட ஒரு நாடாளுமன்ற உறுப்பினருக்கு இப்படி நடந்ததே இல்லை.

எஸ்.ஜி.முருகையன் அவர்களின் 43 ஆம் ஆண்டு நினைவு தினம் திருவாரூர் மாவட்டம் சித்தமல்லியில் ஒன்றிய நிர்வாக குழு உறுப்பினர் எஸ்.ஜி. தேவதாஸ் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் பங்கேற்று தியாகியின் நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து மரியாதை செய்தார்.

தியாகியின் நினைவு தினத்தை முன்னிட்டு இரத்ததான நிகழ்ச்சி உள்ளிட்ட மருத்துவ முகாம், மரக்கன்று வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. மாவட்ட செயலாளர் வை.சிவ புண்ணியம் தலைமையில், மாநிலச்செயலாளர் இரா. முத்தரசன், தேசியக்குழு உறுப்பினர் கோ. பழனிசாமி எக்ஸ்.எம்எல்ஏ, மாநில நிர்வாகக்குழு உறுப்பினர்கள் எம்.செல்வராஜ் எம்பி. வை.செல்வராஜ், நாகப்பட்டினம் மாவட்ட செயலாளர் எஸ்.சம்பந்தம், மாநிலக்குழு உறுப்பினர் கே.உலகநாதன் எக்ஸ்.எம்எல்ஏ, திருத்துறைப்பூண்டி ஒன்றியப் பெருந்தலைவர் அ.பாஸ்கர், கோட்டூர் ஒன்றியப் பெருந்தலைவர் தி. மணிமேகலை முருகேசன், கோட்டூர் ஒன்றிய செயலாளர் (பொ) எம்.செந்தில்நாதன், முத்துப்பேட்டை ஒன்றிய செயலாளர் கே.முருகையன் உள்ளட்ட ஆயிரக்கணக்கானோர் பேரணியாக சென்று தியாகியின் நினைவிடத்தில் மலர் வைத்து மரியாதை செலுத்தினர்.

நிகழ்ச்சியில் விவசாய தொழிலாளர்கள் சங்க மாநிலச் செயலாளரும் திருத்துறைப்பூண்டி ஒன்றிய குழு தலைவருமான அ.பாஸ்கர் எழுதிய *உழைக்கும் மக்களின் போர்முரசு தியாகி எஸ்ஜி முருகையன் என்னும் நூலை மாநில செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட தேசியக் குழு உறுப்பினரும் முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினருமான கோ.பழனிச்சாமி, மற்றும் எம்.செல்வராஜ் எம்பி ஆகியோர் பெற்றுக் கொண்டார்.

செய்தி: **அ.பாஸ்கர்**



ப.பா.ரமணி



# நேர்மை அர்ப்பணிப்பின் மறுவடிவம் - தோழர் சி.எஸ்.ராமசாமி

**வங்கி ஊழியர் தொழிச்சங்க இயக்கத்தின் முதுபெரும் தலைவர் சி.எஸ். ராமசாமி(94) டிசம்பர் 29 கோவையில் உடல்நலக்குறைவால் காலமானார்.**

அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் புகழ் மிக்க தலைவர்கள் டி.பி.சத்தா, எச்.எல்.பர்வானா, பி.எல்.சயால், கே.ஜே.ஜோசப் ஆகியோருடன் தொழிற்சங்கப் பணியாற்றிய பெருமைக்குரியவர், சி.எஸ்.ஆர்.என அன்புடன் அழைக்கப்பட்ட தோழர் சி.எஸ்.ராமசாமி.

சால்டியன் சிரியன் வங்கி என்ற தனியார் வங்கியின் பாலக்காடு கிளையில் 1944ல் பணியாற்றிய பிறகு சி.எஸ். ஆர். பஞ்சாப் நேஷனல் வங்கியின் சென்னை கிளையில் 1946 ல் சேர்ந்தார். அதன்பின் கோவை கிளைக்கு மாற்றலாகி வந்தார். அப்போது பஞ்சாப் நேஷனல் வங்கியுடன் பாரத் வங்கி இணைந்தது. பாரத் வங்கியில் 800 ஊழியர்களை ப.நே.வங்கி பணியில் எடுக்க மறுத்தது. எனவே பாரத் வங்கி ஊழியர்களின் வேலைநிறுத்தப் போராட்டம் வெடித்தது.

இந்தச் சூழலில் சி.எஸ்.ஆர். கோவையிலிருந்து மும்பைக்கு மாற்றப்பட்டார். பஞ்சாப் நேஷனல் வங்கி ஊழியர்கள் பாரத் வங்கி ஊழியர்களுக்காக போராட்டத்தில் இறங்கினர். ப.நே. வங்கி சங்கத்தின் மும்பை மாநில செயலாளராக சி.எஸ்.ஆர். தேர்ந்தெடுக்கப்பட்டார்.

நிதி வசூலிப்பதிலும் சுழன்று பணியாற்றினார். ப்ளிட்ஜ் இதழில் எழுத்தாளர் கே.ஏ. அப்பாஸ் இயக்கிய “பூட் பாலிஷ்” படத்தை திரையிட்டு நன்கொடை வசூலித்தார்.

கோவை மாவட்ட வங்கி ஊழியர் சங்கத்தை செயலூக்கமிக்க அமைப்பாக உருவாக்குவதில் இவரின் பங்களிப்பு மறக்க முடியாதது. சி.எஸ்.ஆர். தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் இணை செயலாளராகப் பணியாற்றினார்.

அடுத்து கரூர் வைசியா வங்கி, லட்சுமி வைசியா வங்கி, பேங்க் ஆப் மதுரை போன்ற தனியார் வங்கிகளில் சங்கங்களை உருவாக்குவதில் இவர் ஈடுபட்டார். கூடவே பல மாவட்டங்களில் மாவட்ட சங்கங்களை துவக்குவதிலும் பங்களிப்பு செய்துள்ளார்.

பஞ்சாப் நேஷனல் வங்கியின் தொழிலாளர் பிரதிநிதியாக சி.எஸ்.ஆர் நியமனம் செய்யப்பட்ட போது அவரது துணிச்சலான நடவடிக்கை வங்கி ஊழியர் இயக்கத்திற்கே பெருமை சேர்த்தது. மூன்று நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளில் கடன் வாங்கி பின்னர் திவாலாகி விட்டதாக அறிவித்து மோசடி செய்த ராஜேந்திர சேதியா ஊழல் பற்றி வங்கித் தலைவருக்கும், மத்திய நிதி அமைச்சருக்கும் முன்னரே எழுதி எச்சரிக்கை செய்தார். அதன்படி உடன் நடவடிக்கை எடுக்காததால் ப.நே.வங்கி உள்ளிட்ட மூன்று வங்கிகள் 250 கோடி நட்டமடைந்தன. மற்றொரு சமயம்,

**வங்கியின் வராக் கடன் பற்றிய தகவலை வங்கித் தலைவரிடம் கேட்டார், சி.எஸ்.ஆர். அதைத் தர மறுத்தது, வங்கி. அதற்கும் மேலாக அவரை நிர்வாகக் குழுவிலிருந்து பதவி நீக்கம் செய்தது நிதி அமைச்சகம். சி.எஸ்.ஆர். நீதி மன்றம் சென்று தடை ஆணை பெற்று மீண்டும் நிவாகக் குழுவில் அமர்ந்தார்.**

தனது வர்க்க கடமையை செய்யும் வகையில், கோவை ஜில்லா மில் தொழிலாளர் சங்கத்தின் பொருளாளராக செயலாற்றினார். மில் நிர்வாகங்கள் வரவு செலவு அறிக்கையில் செய்யும் ஏமாற்று வேலைகளை அம்பலப்படுத்தி ஆலைத் தொழிலாளர்கள் நியாயமான போனஸ் பெற துணை நின்றார்.

94 வயதில் மரணமடைந்த சி.எஸ்.ஆரின் எழுபதாண்டு பொது வாழ்க்கையில் ஒரு சிறந்த முன்னுதாரணமான கம்யூனிஸ்டாக இருந்துள்ளார். வங்கி ஊழியர்கள், வங்கி ஊழல்களை எதிர்த்து போராட வேண்டும் என்பதை வலியுறுத்தினார். பணிப்பண்பாடு விஷயத்தில் சங்கங்கள் கவனம் செலுத்த வேண்டும் என்றார்.

கட்சியின் மாநில அலுவலகமான பாலன் இல்லம் கட்டும் பணிக்காக தனது ஓய்வூதிய பணத்தில் நான்கு லட்சம் தொகையை வட்டியில்லா கடனாக வழங்கினார்.

சி.எஸ்.ஆர். போன்ற தலைவர்களின் பொருள் பொதிந்த வாழ்க்கை, தொழிற்சங்க இயக்கத்தில் பணியாற்றுவோருக்கு சிறந்தவொரு முன்னுதாரணமாக விளங்குகிறது.

தொடர்புக்கு: **94421 78974**

### மருத்துவ மற்றும் பல் மருத்துவப் படிப்புகளில் இதர பிற்படுத்தப்பட்டோருக்கு

# 27% இட ஒதுக்கீடு உச்சநீதிமன்றம் உத்தரவு

சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் ஜி.ஆர்.இரவீந்திரநாத் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

இதர பிற்படுத்தப்பட்டோருக்கு மத்திய உயர்கல்வி நிறுவனங்களில், கல்வியில் 27 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்கிட ஏதுவாக 93 வது அரசியல் சட்டத்திருத்தம் 2005 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டது. அதன் படி பிரிவு 15 ல் உட்பிரிவு 5 சேர்க்கப்பட்டது. இந்த அரசியல் சட்டத்திருத்தத்திற்கு 2006 ஜனவரியில் குடியரசுத் தலைவர் ஒப்புதல் வழங்கினார்.அதைத் தொடர்ந்து இந்த இட ஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்துவதற்கான சட்டம் 2006 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டது. இந்த இட ஒதுக்கீட்டை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.இந்த இட ஒதுக்கீடு செல்லும், 93 வது அரசியல் சட்டத்திருத்தம் செல்லும் என 2008 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10 ஆம் தேதி உச்ச நீதிமன்றம் தீர்ப்பை வழங்கியது. அதைத் தொடர்ந்து மத்திய உயர்கல்வி நிறுவனங்களில், கல்வியில் படிப்படியாக 27 விழுக்காடு இட ஒதுக்கீடு நடைமுறைப்படுத்தப்பட்டது.

அதன் படி, 2009 ஆம் கல்வி ஆண்டு முதற்கொண்டே, அகில இந்தியத் தொகுப்பு இளநிலை மற்றும் முதுநிலை மருத்துவ மற்றும் பல் மருத்துவப் படிப்பு இடங்களுக்கான மாணவர் சேர்க்கையில் 27 விழுக்காடு இட ஒதுக்கீட்டையும் நடைமுறைப்படுத்தியிருக்க வேண்டும். ஆனால் மத்திய அரசு ,2009 ஆம் கல்வி ஆண்டு முதல் இந்த இட ஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்த தவறிவிட்டது.அதனால் இதர பிற்படுத்தப்பட்ட சமூகங்களைச் சேர்ந்த மாணவர்கள் மிகப் பெரும் இழப்புகளுக்கு உள்ளாகி வந்தனர்.

இந்த இட ஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்திடக் கோரி சமூக சமத்துத்திற்கான டாக்டர்கள் சங்கம் சார்பில் பல்வேறு போராட்டங்கள் 2009 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து நடத்தப்பட்டு வந்துள்ளது. மத்திய மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்களாக இருந்த டாக்டர் ஹர்ஷ்வர்தன் மற்றும் நட்டா ஆகியோரை டெல்லியில் நேரடியாக சந்தித்து மனுக்களும் கொடுக்கட்டன. சென்னை உயர் நீதி மன்றத்தில் வழக்கும் தொடரப்பட்டது. ஆனால், மத்திய ஆட்சியாளர்கள் இந்த இட ஒதுக்கீட்டை நடை முறைப்படுத்த எந்த முயற்சியையும் மேற்கொள்ளவில்லை. சென்னை உயர் நீதிமன்றம் வழக்கை உச்சநீதிமன்றத்தில் தொடர அறிவுறுத்தியது.

### சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கம் வரவேற்பு

இந்நிலையில், திமுக ,இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி,மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உள்ளிட்ட பல்வேறு அரசியல் கட்சிகளும் உச்ச நீதிமன்றத்தில் இதர பிற்படுத்தப்பட்டோருக்கு, தமிழ்நாட்டில் உள்ளது போல் 50 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்கிடக் கோரி வழக்கு தொடர்ந்தன. உச்ச நீதிமன்ற அறிவுறுத்தலின் படி அவ்வழக்குகளை சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடர்ந்தன. அதைத் தொடர்ந்து இட ஒதுக்கீடு வழங்குவது தொடர்பாக ஓர் குழுவும் நியமிக்கப்பட்டது.

இந்நிலையில் மத்திய அரசு, தி.மு.க நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு அவர்கள் விடுத்த வேண்டுகோளை ஏற்று 27 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்கிட ஒப்புக்கொண்டது.

இந்த இட ஒதுக்கீட்டை எதிர்த்து மாணவர்கள் சிலரால், உச்ச நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில், உச்ச நீதிமன்றம் 27 விழுக்காடு இட ஒதுக்கீட்டை நடை முறைப்படுத்தலாம் என இன்று உத்தரவிட்டுள்ளது. இது வரவேற்புக்குரியது.

இந்த 27 விழுக்காடு இட ஒதுக்கீடு கிட்டிட தொடர்முயற்சியை மேற்கொண்ட தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு அவர்களுக்கும்,இந்த இட ஒதுக்கீட்டிற்காக வழக்கு தொடர்ந்த அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் ,திராவிடர் கழகத்திற்கும், இந்த இட ஒதுக்கீட்டை பெறுவதற்காக போராட்டங்களில் பங்கேற்ற மருத்துவ மாணவர்களுக்கும், ஆதரவளித்த அனைவருக்கும் சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கம் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளார்.




எஸ்.சுதாகர் ரெட்டி

# மக்களுக்காக நி

## இந்திய

## கம்யூ



**1925 டிசம்பர் 26 கான்பூரில் கூடி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அமைத்தனர். கட்சி நிறுவப்பட்ட தொடக்க நாள் முதலாக கடுமையான அடக்குமுறைகளைச் சந்தித்தது.**

நீண்ட காலம் சிறை தண்டனை பெற்ற பல தலைவர்களில் சிலர் பத்தாண்டுகளுக்கு மேல் 'வெஞ்சிறையில் வீழ்ந்தும் செக்கடியில் நொந்தும்' கிடந்தனர். ஒரு வழக்கறிஞராகப் பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள் வழக்குகளில் வாதாடினார். அடக்குமுறைகளைத் தாங்கி சிபிஐ நாட்டின் பல பகுதிகளில் மெல்ல, உறுதியாகப் பரவியது. பல கம்யூனிஸ்ட்கள் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியில் சோஷலிசக் காங்கிரஸ்காரர்களாகப் பணியாற்றினர். அவர்கள் பின்னர் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்தனர்.

பிரிட்டிஷ் காலனியத்தை எதிர்ப்பதில் சிபிஐ காங்கிரஸ் கட்சியுடன் ஒத்துழைத்தது. 'பூரண சுயராஜ்யம்' கோரிக்கையை முதலில் எழுப்பியர்கள் கம்யூனிஸ்ட்களே. மற்றவர்கள் பிரிட்டிஷ் பேரரசுக்கு உட்பட டொமினியன் அந்தஸ்து, சுய ஆட்சி என்று மட்டும் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

சமூகத்தின் பல்வேறு பகுதி மக்கள் காலனியத்தைத் தீர்மானகரமாக முறியடிக்க மேலும் தீவிரமான துணிச்சலான போராட்டங்களை விரும்பினர்.

இந்த நேரத்தில் தேசிய விடுதலை இயக்கத்தின் போற்றுதலுக்குரிய தலைவர் மகாத்மா காந்தியும் தீவிரமான சத்யாகிரகத்துக்கு அழைப்பு விடுத்தார். போராட்ட வீச்சு அதிகரித்த வேளையில் சௌரி சௌராவில் போராட்டக்காரர்கள் போலீஸ் நிலையத்தைக் கோபத்துடன் தீயிட்டு எரித்த வன்முறையைக் காரணம் காட்டி காந்திஜி சத்யாகிரகத்தை ரத்து செய்தார். இதனால் மக்கள் மத்தியில் ஏமாற்றம், நம்பிக்கையின்மை, செய்வதறியாத கோபம் ஏற்பட்டது.

பல நெஞ்சுரம் மிக்க இளைஞர்கள், கற்றறிவாளர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள் எனப் பலரும் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்தனர். 1936ல் சுதந்திரமாகச் செயல்படும் வெகுஜன அமைப்புகளைக் கட்ட சிபிஐ முன்முயற்சி எடுத்தது. மாணவர் பெருமன்றம், விவசாயிகள் சங்கம், இப்டா போன்ற அமைப்புக்களை நிறுவி லட்சக் கணக்கான மக்கள் விடுதலை இயக்கத்தில் திரட்டப்பட்டனர். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நாட்டின் பல மாகாணங்களில் ஆல்போல் தழைத்துப் பரவியது.

கட்சியின் வளர்ச்சியோடு கம்யூனிஸ்ட் எதிர்ப்பு பிரச்சாரமும் காங்கிரஸ்காரர்கள் மற்றும் வேறு சிலரால் நடத்தப்பட்டது. கம்யூனிஸ்ட்களை ரஷ்யாவின் ஏஜெண்டுகள் எனப் பழிதூற்றினர். இந்த அனைத்துக் குற்றச்சாட்டுகளுக்கும் விளக்கம் அளித்த சிபிஐ அன்றைய பொதுச்செயலாளர் பிசி ஜோஷி அவை தவறானவை, அடிப்படையற்றவை என்று விளக்கினார். மேலும் கட்சியின் கணக்கு வழக்குகளை கட்சி வசூல் செய்தது மற்றும் செலவழித்தது அனைத்திற்குமான கணக்குகளை மகாத்மா காந்திக்கு அனுப்பிச் சரி பார்க்கலாம் என வெளிப்படையாக வாய்ப்பு வழங்கினார்.

மகாத்மா காந்திக்கும் ஜோஷிக்கும் இடையே நடைபெற்ற கடிதப் போக்குவரத்து அந்த நாட்களிலிலிருந்தே மிகவும் புகழ்பெற்றவை. இந்திய தேசியக் காங்கிரசின் வழிமுறைகள் மற்றும் அதன் தலைவர் மகாத்மா காந்தியுடன் சிபிஐ முரண்பட்டாலும் கம்யூனிஸ்ட்கள் எப்போதும் அவருக்கு மிக உயர்ந்த பட்ச மரியாதையை அளித்தனர். குறிப்பிட வேண்டிய ஒரு முக்கிய செய்தி, மகாத்மா காந்தியைத் "தேசத் தந்தை" என முதன் முதலில் அழைத்தவர் தோழர் ஜோஷியே.

மகாத்மா காந்தியும் இந்திய தேசியக் காங்கிரசும் நிலப்பிரபுத்துவ அரசர்கள், நவாப்கள் ஆட்சி செய்த சமஸ்தானங்களில் எந்தப் போராட்ட இயக்கங்களையும் நடத்துவதில்லை என முடிவு செய்தனர்; ஆனால் அப்பிராந்தியங்களில்தான் காலனிய இந்தியாவைவிட மிக மோசமாக இருந்தன. அங்கே சட்ட ஒழுங்கு ஆட்சி முறை என்பதே இல்லாமல் பொருளாதார ரீதியில் சுரண்டப்பட்ட மக்கள், சிவில் அரசியல் உரிமைகள் மறுக்கப்பட்டு, கல்வி வாய்ப்பின்றி நிலப்பிரபுத்துவ அடக்குமுறை கொடுமைகளை அனுபவித்து வந்தனர்.

உதாரணத்திற்கு நம் நாட்டின் மத்திய பகுதியில் பெரும் நிலப்பரப்பை ஆண்ட நிஜாம், இரக்கமற்று மக்களைக் கொடுமையான சுரண்டலுக்கு ஆட்படுத்தி உலகின் அதி பணக்காரர் ஆனார் அவர் ஆட்சி செய்த மக்களை நாட்டின் ஏழை மக்களில் மிக மோசமான பராரிகளாக்கினார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, நிஜாம் அரசின் தெலுங்கானாவிலும்; திருவிதாங்கூர் கொச்சி அரசின் புன்னப்புரா வயலாரிலும் சரித்திரப் புகழ்மிக்க ஆயுதம் தாங்கிய போராட்டங்களைத் தலைமையேற்று நடத்தியது. தெலுங்கானா ஆயுதப் போராட்டத்தில் 4500க்கும் அதிகமான மக்கள் உயிர்த் தியாகம் செய்தனர், புன்னப்புரா வயலாரில் பல நூறு மக்கள் கொல்லப்பட்டனர். வீரம் செறிந்த இப்போராட்டங்கள் நிலப்பிரபுத்துவ அரசுகளின் அடித்தளத்தை அசைத்தது, அவற்றை மண்ணில் வீழ்த்தியது.

இப்போராட்ட இயக்கங்கள் மூலமாகத்தான் விடுதலைபெற்ற தேசத்தின் நிகழ்ச்சி நிரலில் நிலச் சீர்திருத்தம் முன்னுரிமை பெற்றது. தொழிலாளர்களின் போராட்டங்கள் அவர்களுக்குப் பணி பாதுகாப்பு, சமூகப் பாதுகாப்பு மற்றும் மேம்பட்ட பணிநிலைமைகளைப் பெற்றுத் தந்தன; வேளாண் மக்களின் போராட்டங்கள் விவசாயிகளுக்கு நாட்டில் லாபகரமான விலை கிடைக்கச் செய்தது. 'உழுபவனுக்கே நிலம் உரிமை' என்பது அனைத்து அரசியல் கட்சிகளின் பொது முழக்கமாயிற்று.

பம்பாயில் ராயல் இந்தியக் கப்பற்படையினரின் எழுச்சியின்போது அவர்கள் தங்கள் போர்க் கப்பல்களில் இந்திய தேசியக் காங்கிரஸ், முஸ்லீம் லீக் மற்றும் கம்யூனிஸ்ட் கட்சியின் கொடிகளை ஒருசேரப் பறக்கவிட்டனர். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி விடுதலை இயக்கத்தின் முக்கிய அங்கம் என்பதை அங்கீகரித்துப் போர் வீரர்கள் செலுத்திய மரியாதை அது. அதேபோல

**தீண்டாமை, சாதி பாகுபாடு மற்றும் சுரண்டலுக்கு எதிரான பல வரலாற்றுப் புகழ்மிக்கப் போராட்டங்களைச் சிபிஐ தலைமையேற்று நடத்தியது. விடுதலைக்குப் பிறகு நடைபெற்ற பொதுத் தேர்தல்களில் சிபிஐ முக்கிய எதிர்கட்சியானது;**

கோவா மற்றும் பாண்டிச்சேர் விடுதலை போராட்டங்களில் கேந்திரமான முக்கிய பங்கு வகித்தது. பாண்டிச்சேரியில் நடைபெற்ற தேர்தலில் சிபிஐ தலைவர் சுப்பையா பிரெஞ்ச் நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார், பாண்டிச் சேரி விடுதலைக்காகப் போராடினார்.

சில ஆண்டுகளுக்குப் பிறகு சிபிஐ அதன் செல்வாக்கு சிலவற்றை இழந்தது உண்மைதான். கம்யூனிஸ்ட் கட்சியில் ஏற்பட்ட பிளவு, 1964ல் சிபிஐ(எம்) உருவெடுத்தது, வளரும் கம்யூனிஸ்ட் இயக்கத்திற்குப் பலத்த அடியானது. அந்தத் தருணத்தில்தான் மக்கள் இந்திய தேசிய காங்கிரஸ் ஆட்சிச் செயல்பாட்டில் நம்பிக்கை இழந்து வேறொரு மாற்றைத் தேடிக் கொண்டிருந்தார்கள்.


1967ல் பல காங்கிரஸ் அல்லாத அரசுகள் பல்வேறு மாநிலங்களில் அமைக்கப்பட்டன. நாடாளுமன்றத்தில் காங்கிரசின் தனிப் பெரும்பான்மை குறைந்தது. மேற்கு வங்கம், கேரளா, பீகார் போன்ற சில மாநிலங்களில் சிபிஐ மற்றும் சிபிஐ(எம்) இரண்டும் ஒருங்கிணைந்து இழந்த பகுதிகள் சிலவற்றில் செல்வாக்கை மீண்டும் திரும்பக் கைப்பற்றியது;

இருப்பினும் நியாயமாக நாட்டின் முக்கிய எதிர்க்கட்சியாக கம்யூனிஸ்ட் இயக்கம் பெற்றிருக்க வேண்டிய இடத்தைத் திரும்பப் பெற இயலவில்லை. மாநிலக் கட்சிகளின் வளர்ச்சியும் சவாலானது; அவை மெல்ல மெல்ல பஞ்சாப், தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம் போன்ற மாநிலங்களின் எதிர்கட்சியாகின.

சோவியத் யூனியன் வீழ்ச்சிக்குப் பிறகு பல ஆதரவாளர்கள், நண்பர்கள் மற்றும் அறிவாளர்கள் நம்பிக்கை இழந்து சோஷலிசத்தின்பால் கோட்பாட்டு ரீதியாக நம்பிக்கை இழக்கத் தலைப்பட்டனர். பாராளுமன்ற ஜனநாயக முறையில் மாநிலக் கட்சிகள் மற்றும் பாஜக அல்லாத கட்சிகளுடன் தேர்தல்களில் தொகுதி உடன்பாடு தவிர்க்க முடியாததாகி விட்டது.

சில இடங்களை நாம் அடைந்தாலும், நமது மக்களை அரசியல்படுத்துவதில் நாம் தோல்வியடைந்த காரணத்தால் பல இடங்களை இழந்தோம். கட்சி அணிகள் பிற பூர்ஷ்வா கட்சிகள்பால் மென்மையான போக்கைக் கடைபிடிக்கத் தொடங்கி, மக்கள் பிரச்சனைகளிலும் மெல்ல வர்க்க சீற்றத்தையும் மென்மைப்படுத்தத் தலைப்பட்டனர்.

பாராளுமன்ற ஜனநாயகத்தின் பாதை என்பதன் பொருள், மக்களின் சார்பாகக் குரல் எழுப்பி, அரசின் தவறான கொள்கைகளை அம்பலப்படுத்த இடங்களைப் பெறுவதற்காகவும்; மக்களின் பிரச்சனைகளுக்காக சட்டமன்றங்களுக்கு வெளியே சக்திவாய்ந்த பெருந்திரள் போராட்டங்களை நடத்துவதற்காகவும் என்பதே.



**காரல் மார்க்ஸ் மனிதகுல வரலாற்றின் வளர்ச்சி விதிகளைக் கண்டுபிடித்தார். இதுவரை இருந்தவற்றில் சிந்தனைகளில் இந்த உண்மை மூடி மறைக்கப்பட்டிருக்கிறது.**
**– ஏங்கல்ஸ்**

ஆனால் இத்தகைய போராட்டங்கள் ஒப்பிட்டளவில் குறைந்து கொண்டேபோய் அதன் விளைவாய் கட்சிக்குப் பரந்த ஆதரவாளர்கள் மற்றும் மக்களுடன் இருந்த தொடர்பு குறைந்தது. இவற்றைப் பற்றி கட்சியின் அனைத்து அமைப்பு மட்டங்களிலும் பரிசீலனை செய்ய வேண்டும்.

கடந்த ஆண்டுகளில் அனைத்து சவால்களையும் மீறி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நாட்டின் கேந்திரமான பிரிவுகளான சுரங்கங்கள், வங்கிகள், போக்குவரத்து, ஏர்வேஸ், தொலைத் தொடர்பு, எண்ணெய், காப்பீடு, ஸ்டீல் மற்றும் முக்கிய ஆலைத் தொழில்கள் முதலானவற்றைத் தேசியமயமாக்க அரசை நிர்பந்திப்பதில் வெற்றிகரமாகச் சாதித்து நாட்டை சுய சார்புடையதாக மாற்றியது. இதன் பயனாய், சர்வதேச அளவில் பொருளாதாரப் பின்னடைவுகள் பலமுறை ஏற்பட்டபோதும் நமது நாடு பாதிக்கப்படாமல் காப்பாற்ற உதவியது.

1957ல் உலகிலேயே இரண்டாவது முறையாக ஜனநாயக முறையில் கேரளாவில் தேர்ந்தெடுக்கப்பட்ட கம்யூனிஸ்ட் அரசு அமைக்கப்பட்டு சிபிஐ ஆட்சிப் பொறுப்பிற்கு வந்தது. 1996ல் சிபிஐ தலைவர் இந்திரஜித் குப்தா, முதன் முறையாக ஒரு கம்யூனிஸ்ட், ஒன்றிய அரசின் உள்துறை அமைச்சராகவும், சதுரானன் மிஸ்ரா ஒன்றிய விவசாயத் துறை அமைச்சராகவும் பொறுப்பு ஏற்றனர். அமைச்சராக இந்திரஜித் குப்தா முன்மொழிந்த தேர்தல் சீர்திருத்த அறிக்கை நீண்டகாலக் கண்ணோட்டம் உடையது; பயிர் காப்பீடு திட்டம் நாட்டில்

# ...ன்று போராடுகிறது

# ...க் ...னிஸ்ட் கட்சி



முதன் முறையாக விவசாயத் துறை அமைச்சராக சதுரானன் மிஸ்ரா அறிமுகப்படுத்தியது.

தொழிலாளி வர்க்கம் மற்றும் வேளாண் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க மக்கள் பிரதிநிதித்துவச் சட்ட மன்றங்களுக்கு உள்ளேயும் வெளியேயும் சிபிஐ போராடியது. 1971ல் நாடு தழுவிய அளவில் தீவிரமாக நடத்தப்பட்ட நிலங்களைக் கைப்பற்றும் இயக்கம், நிலமில்லாத விவசாயிகளுக்கு உபரி நிலங்களைப் பகிர்ந்தளிக்க வழிவகுத்தது.

தற்போது கார்ப்ரேட்டுகள் மற்றும் இந்துத்துவ வகுப்புவாத சக்திகள் தாக்குதலில் சிபிஐ மற்றும் இடதுசாரி இயக்கம் கடினமான நிலையைச் சந்தித்து வருகின்றன. கடந்த ஏழாண்டு நரேந்திரமோடி ஆட்சியில் சிறுபான்மையினர்பால் சகிப்பின்மை, பசு பாதுகாப்புப் பெயரில் கொலைகள், சிந்தனையாளர் மற்றும் பத்திரிக்கையாளர்களைக் கொலை செய்வது, அரசுக்கு எதிராகப் பேசுபவர்களைச் சிறையில் தள்ளுவது, நியாயமற்ற மோசமான வழிகள் மூலமாக வெகுஜன ஊடகங்களை முழுமையாகத் தங்கள் ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவருவது என்பனவற்றையே நாடு சந்திக்கிறது.

ஒவ்வொரு நாளும் அரசியலமைப்பு மற்றும் அதன் விழுமியங்களைச் சீர்குலைத்து பாழ்படுத்தப்படுகின்றன. நீதிமன்றம், தேர்தல் ஆணையம், புலனாய்வுத் துறை, அமலாக்கத் துறை போன்ற அரசியல் சட்டப்படியான அமைப்புகள் அரசின் கூண்டுக் கிளியாய் மாறுகின்றன.

அமலாக்கத்துறை, சிபிஐ புலனாய்வு மற்றும் வருமானவரித் துறைகளைப் பயன்படுத்தி எதிர்கட்சித் தலைவர்கள் மற்றும் அரசியல் கட்சிகள் குறிவைக்கப்படுகின்றன. எதிர்கட்சிகள், அறிவார்ந்த சான்றோர்கள், பத்திரிக்கையாளர்கள் முதலானவர்களைக் குறிவைத்துத் தாக்க நுட்பமான விரிவான உளவுத் தொழில்நுட்பங்கள் இரகசியமாகப் பயன்படுத்தப்படுகின்றன.

அரசை விமர்சிப்பவர்கள் அனைவரும் தேசவிரோதிகள் எனக் குற்றம் சாட்டப்பட்டு, தேசத் துரோகச் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்படுகின்றனர். அவர்களில் எவர் மீதும் ஒரு வழக்குகூட இதுவரை நிரூபிக்கப்படவில்லை. பல்கலைக் கழகங்கள், கல்வி நிறுவனங்களுக்குக் கல்விப்புலம் சார்ந்த சுதந்திரம் மறுக்கப்படுகிறது.

பணமதிப்பிழப்பு நடவடிக்கை, அவசர கோலத்தில் அமலாக்கப்பட்ட ஜிஎஸ்டி பொருளாதாரப் பேரழிவுக்கு வழி வகுத்தது; நாட்டின் பெரும்பான்மை வேலைவாய்ப்பு வழங்கிய சிறு குறு நடுத்தர தொழில் முனைவோர் நிறுவனங்கள் மோசமாகப் பாதிக்கப்பட்டன.

கோவிட் 19 பெருந்தொற்றைக் கட்டுப்படுத்துவதில் பரிதாபகரமாகத் தோல்வியடைந்தது மட்டுமல்ல முன்யோசனையற்ற அதிரடி ஊரடங்கு உத்தரவால் புலம் பெயர்ந்த தொழிலாளர்கள் வாழ்விழந்து நிர்கதியாகி சாலைகளில் கால்நடையாக பயணித்தனர். நாட்டில் ஒவ்வொரு சிறு குடும்பமும் பாதிக்கப்பட்டு பல ஆயிரக்கணக்கில் உயிர் இழந்தனர்.

ஓராண்டில் இந்திய நாட்டில் உற்பத்தியான லாபங்களில் 75 சதவீதம் வெறும் 19 கார்ப்பரேட்டுகளின் கைகளில் சேர்ந்தது. உண்மையிலிருந்தே அரசு தனது கார்ப்பரேட் மாஸ்டர்கள் சிலர் மட்டுமே பலன் அடைவதில் முழு கவத்தையும் செலுத்தியது வெளிப்படுகிறது. கார்ப்பரேட் எஜமானர்களிடம் இந்த அரசு அடிமைப்பட்டுக் கிடக்கிறது.

இந்தக் கட்சியின் அரசு அமைகிறது என்ற செய்தி வந்தவுடன் பங்குச் சந்தையில் ஒரு கம்பெனி மட்டும் ரூ20ஆயிரம் கோடிகள் மதிப்பில் லாபம் அடைந்தது என்பதும் வெளிப்படுத்துகிறது. வகைதொகையற்ற தனியார்மயப்படுதல், நாட்டின் பொருளாதாரத்தைப் பின்னடைவில் தள்ளி, இத்தகைய சில கார்ப்பரேட்டுகள் ஒட்டுமொத்தப் பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் பெறுகிறது.

**ஆனால் பிரகாசமான நம்பிக்கை கீற்றுகளும் உள்ளன. தேசம் முழுவதுமுள்ள தொழிலாளர் வர்க்கம், தொழிலாளர் விரோதமான சட்டங்களையும், தனியார்மயப்படுத்தலையும் எதிர்த்து நடத்திய பொது வேலைநிறுத்தங்களில் 20லிருந்து 25 கோடி தொழிலாளர்கள் பங்கு பெற்றனர். வங்கி ஊழியர்கள் போராடுகின்றனர். மாணவர்களும், இளைஞர்களும் கிளர்ச்சியில். ஓராண்டைத் தாண்டி வேளாண்குடி பெருமக்கள் விவசாயிகளுக்கு எதிரான மூன்று கருப்புச் சட்டங்கள் ரத்தாகும் வரைப் போராடினர். ஏழைகளுக்கு எதிரான இந்த அரசின் அபாயம் பற்றிய விழிப்புணர்வு மக்களிடையே நாட்டில் வளர்ந்து வருகிறது.**

பிற்போக்கான சட்டங்களை எதிர்த்து முறியடிக்க ஒவ்வொருவரையும் போராட்டங்களில் ஒன்றிணைக்கவும், மேலும் நியாயமான சமத்துவச் சமுதாயப் பாதையில் நாட்டைக் கொண்டு செல்லவும் இந்த விழிப்புணர்வை மேலும் பரப்புவதற்கான கடமைப் பொறுப்பு ஒவ்வொரு சிபிஐ தோழரையும் சேர்ந்தது.

மேலும் வலிமையான கம்யூனிஸ்ட் கட்சியை நாம் கட்ட வேண்டும்! பாசிசச் சக்திகளின் தாக்குதல்களைத் திருப்பித் தாக்கக் கட்சி உறுப்பினர்களைக் கொள்கை ரீதியில் அரசியல் ரீதியாக பயிற்றுவிக்க வேண்டும்! மேலும் வலிமையான இடதுசாரி மற்றும் இடது ஜனநாயக மதசார்பற்ற சக்திகளின் ஒற்றுமையை நாம் கட்டி மேம்படுத்த வேண்டும்! மக்கள் விரோத, கார்ப்பரேட்டுகளுக்கு ஆதரவான அரசைத் தோற்கடிக்க அனைவரும் ஒன்றுபட வேண்டும்!

இதைவிடக் கடுமையான சூழல்களில் செயல்பட்டிருக்கிறோம். பிரிட்டிஷ் காலனியத்தை நாம் தோற்கடித்திருக்கிறோம், கொடூரமான நிலப்பிரபுத்துவ அரசர்களை வென்று நிலப்பிரபுத்துவ முதுகெலும்பை உடைத்து நொறுக்கியிருக்கிறோம். எதையும் எதிர்த்து நின்று போராடி முறியடிக்கும் வரலாறு நமக்கு உண்டு.

சந்தேகமில்லாமல் கம்யூனிசம் வெல்லப் போகிறது. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் அமைப்பு தின இந்த ஆண்டு விழா நாளில் நாம் நமது கட்சியை, நமது மக்களை, நமது அரசியலமைப்புச் சட்டத்தை மற்றும் நமது மதசார்பற்ற ஜனநாயகத்தையும் பாதுகாக்க உறுதி ஏற்போம்!

தமிழில் : **நீலகண்டன்**

**புரட்சி என்பது சமுதாய வளர்ச்சிகளில் ஏற்படும் பாய்ச்சல் என்பதை குறிக்கும். அதாவது அளவுநிலை மாற்றங்கள் பண்புநிலை மாற்றங்களாக பரிணமிப்பதை குறிக்கிறது.**
**- லெனின்**



---

### எம்.பி., தொகுதி மேம்பாட்டு நிதியில்

# செங்காட்டில் புதிய சமுதாயக் கூடம்

### கே.சுப்பராயன் எம்.பி. திறந்து வைத்தார்



திருப்பூர் நாடாளுமன்ற தொகுதிக்கு உட்பட்ட பவானி ஊராட்சி ஒன்றியம் காடையாம்பட்டி ஆண்டிகுளம் ஊராட்சியில் உள்ள செங்காட்டில், நாடாளுமன்ற உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து சமுதாயக்கூடம் புதிதாக கட்டப்பட்டுள்ளது. இச்சமுதாயக் கூடக் கட்டடத்தை திருப்பூர் நாடாளுமன்றத் தொகுதி உறுப்பினர் கே.சுப்பராயன் திறந்து வைத்தார்.

இத்திறப்பு விழாவிற்கு, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஈரோடு வடக்கு மாவட்ட செயலாளர் மாதேஸ்வரன் தலைமை வகித்தார். கட்சியின் ஒன்றிய செயலாளர் கோபால் வரவேற்புரையாற்றினார். ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் பூங்கோதை வரதராஜ் , வட்டார வளர்ச்சி அலுவலர் மாரிமுத்து, உதவி வட்டார வளர்ச்சி அலுவலர் சாந்தி, உதவி பொறியாளர் தீபா உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# 5 மாநில சட்டசபை தேர்தல் தேதி அறிவிப்பு

உத்தரபிரதேசம், உத்தரகாண்ட், பஞ்சாப், கோவா, மணிப்பூர் ஆகிய 5 மாநிலங்களின் சட்டசபை தேர்தல் தொடர்பான அறிவிப்பை தலைமை தேர்தல் ஆணையர் சுஷில் சந்திரா அறிவித்தார். அவர் கூறியதாவது:

உத்தரப்பிரதேசம், பஞ்சாப், கோவா, மணிப்பூர் மற்றும் உத்தரகாண்ட் ஆகிய மாநிலங்களில் கொரோனா வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி தேர்தல்களை நடத்தப்படும். தேர்தல் பணியில் ஈடுபடும் மத்திய, மாநில அதிகாரிகள் அனைவரும் இரண்டு தவணை கொரோனா தடுப்பூசி செலுத்தியிருக்கவேண்டும்.

ஆன்லைன் மூலமாக வேட்புமனு தாக்கல் செய்யும் வசதி அறிமுகம் செய்யப்படுகிறது. 80 வயதைக் கடந்த மூத்த குடிமக்கள், மாற்றுத்திறனாளிகள் தபால் வாக்கு அளிக்கலாம். கொரோனா பரவலை கருத்தில் கொண்டு, பிரசாரங்களுக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. வீடுவீடாக பிரசாரம் செய்ய 5 நபர்களுக்கு மேல் செல்லக்கூடாது. தேர்தல் அறிவிக்கை ஜனவரி 14ம் தேதி வெளியிடப்படும். அன்றே வேட்பு மனு தாக்கல் தொடங்கும்.

5 மாநிலங்களிலும் பிப்ரவரி 10ம் தேதி முதல் மார்ச் 7ம் தேதி வரை 7 கட்டங்களாக சட்டமன்ற தேர்தல்கள் நடத்தி முடிக்கப்படும். உத்தர பிரதேசத்தில் 7 கட்டங்களாக வாக்குப்பதிவு நடக்கிறது. பிப்ரவரி 10ம் தேதி முதற்கட்ட தேர்தல் நடைபெறுகிறது. பிப்ரவரி 14, பிப்ரவரி 20, பிப்ரவரி 23, பிப்ரவரி 27, மார்ச் 3, மார்ச் 7 ஆகிய நாட்களில் அடுத்தடுத்த கட்ட தேர்தல் நடைபெறுகின்றன.

இதேபோல், பஞ்சாப், உத்தரகாண்ட், கோவா மாநிலங்களில் பிப்ரவரி 14ம் தேதி ஒரேகட்டமாக வாக்குப்பதிவு நடைபெறும். மணிப்பூரில் பிப்ரவரி 27ம் தேதி, மார்ச் 3 ஆகிய தேதிகளில் 2 கட்டங்களாக வாக்குப்பதிவு நடைபெறும். 5 மாநில தேர்தல்களில் பதிவான வாக்குகள் மார்ச் 10ம் தேதி எண்ணப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# ரத்த செங்கொடி தாழாது

## சின்னியம் பாளையம் தியாகிகள் நினைவு தினத்தில் கே.சுப்பராயன் எம்.பி. முழக்கம்

**கோவை சின்னியம் பாளையத்தில் தியாகிகள் நினைவு தினம், அஞ்சலி நிகழ்ச்சி கடந்த ஜன. 8 அன்று நடைபெற்றது. அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணைச் செயலாளர் கே.சுப்பராயன் பேசும்போது, இரத்த செங்கொடி என்றும் தாழாது என்று முழங்கினார்.**



தொடர்ந்து அவர் பேசும்போது, 'சவால்கள், நெருக்கடிகள், சிக்கல்களுக்கு இடையில், மகா உன்னதமான ஒரு லட்சியத்தை மக்களிடம் கொண்டு செல்வதற்காக நடந்த போராட்டத்தில் இந்த நான்கு தோழர்கள் தங்கள் இன்னுயிரை தந்தார்கள். அவர்கள்தான் சின்னியம்பாளையம் தியாகிகள்.

1946இல்சின்னியம்பாளையம்தியாகிகள்தூக்கிலிடப்பட்டார்கள், அந்த நிகழ்வுக்குப் பின்னர் ஒரு வாரம் கழித்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அன்றைய பொதுச்செயலாளர் பி.சி. ஜோஷி அவர்கள், இதே கல்லறைக்கு வந்து மறைந்த தியாகிகளுக்கு தன்னுடைய அஞ்சலியை செலுத்தினார்.

பின்னர் இந்த தோழர்களின் குடும்பத்தாரிடம், உங்களது மகன்கள் மகத்தான தியாகம் செய்திருக்கிறார்கள், அதற்கு இந்த செங்கொடி இயக்கம் கொடுத்து வைத்திருக்க வேண்டும், அத்தகைய மகத்தான புதல்வர்களை பெற்ற உங்களை நினைத்து உள்ளபடியே சிந்திக்க முடியாத அளவிற்கு நாங்கள் பெருமை கொள்கிறோம் என்று கூறினர். " நீங்கள் ஒன்றும் கவலைப்படாதீர்கள் நாங்கள் இருக்கிறோம்", என்றும் கூறினார். இதை தோழர் பி.இராமமூர்த்தி அவர்கள் அவர்களிடம் தமிழில் மொழிபெயர்த்து கூறினார்.

இதைக் கேட்ட அந்த தியாகிகளின் பெற்றோர், "உங்களை போன்ற ஆயிரக்கணக்கான தோழர்கள் இருக்கிற போது நாங்கள் ஏன் கவலைப்படுகிறோம்" என்று திருப்பி கூறினார்கள். இதை வரலாற்று ஏடுகள் கூறுகின்றன. அதேபோல 1943ல் கேரளாவில் கையூரில் 4 தோழர்கள் தூக்கிலிடப்பட்டார்கள். அவார்கள் நால் வரும் மிகவும் இளம் வயது தோழர்கள்.

அந்தத் தோழர்களை சிறையில் சந்திக்க அன்றைய பொதுச்செயலாளர் பி.சி. ஜோஷி, கட்சி முடிவின்படி சிறைச் சாலைக்கு சென்று அந்த நான்கு தோழர்களையும் சந்தித்தார். இதுகுறித்து தோழர். ஜோசி எழுதுகிறார். " எனக்கு வாயடைத்துப் போய் விட்டது, நாக்கு வரண்டு விட்டது, நீண்ட காலம் கட்சிக்கும் இந்த சமூகத்திற்கு உழைக்க வேண்டியவர்கள், இந்த சின்னஞ் சிறு வயதில் தூக்கிலிடப்பட போகிறார்களே என்று நினைத்து, நாக்கு வறண்டு, பேச்சு வரவில்லை, கண்களிலிருந்து என்னையும் அறியாமல் கண்ணீர் பெருக்கெடுத்து வழிந்தோடியது, அந்த வழிந்தோடிய கண்ணீர் வாய்க்குள் வந்து விழுந்து நாக்கு நனைந்த பிறகு தான் என்னால் பேச முடிந்தது. அப்படி விக்கித்துப் போனேன்" என்று கையூர் தியாகிகளை சந்தித்த அனுபவம் குறித்து அவர் எழுதுகிறார்.

இத்தகைய தியாகம் கோவை மட்டுமல்ல, கையூர் மட்டுமல்ல, தமிழகம் மற்றும் இந்தியா,. உலகெங்கிலும் ஏன் ஐந்து கண்டங் களிலும் கூட அனைத்து நாடுகளிலும் இத்தகைய தியாகங்களை நம்முடைய தோழர்கள் செய்திருக்கிறார்கள்.

இத்தகைய வரலாறு வேறு எந்த அரசியல் கட்சிகளுக்கும் கிடையாது.

நடந்து முடிந்த அமெரிக்க ஜனாதிபதி தேர்தலின் போது டிரம்ப் கம்யூனிஸ்டுகளை பார்த்துதான் அச்சம் தெரிவித்தார். கம்யூனிஸ்டுகளை அமெரிக்காவில் காலூன்ற விட மாட்டோம் என்று பேசினார். அவர் வேறு எந்த கட்சியை பார்த்தும் அச்சம் தெரிவிக்கவில்லை.

நீ என்ன அனுமதிப்பது காற்று புகமுடியாத இடங்களிலும் புகுந்து களம் காண்பவர்கள் கம்யூனிஸ்டுகள்! எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்து நிலைத்து பெரும் புகழ் படைத்த இயக்கம் கம்யூனிஸ்ட் இயக்கம்!

மிருகங்களால் கூட தாங்கிக்கொள்ள முடியாத கொடுமைகளை தாங்கிக் கொண்டு, இந்த இயக்கத்தை கட்சியை காப்பாற்றி கடந்த தலைமுறை நம் கைகளிலே கொடுத்துவிட்டு போயுள்ளது. கேரள கம்யூனிஸ்டுகள் தங்கள் ஊர்வலங்களில் முழக்கமிடுவார்கள்

**" மார்க்சும், லெனினும், எங்கெல்சும் ஏற்றி வைத்த தீபம் இது,**
**லட்சம், லட்சம் வீரர்கள் ரத்தம் சிந்திய கட்சி இது,**
**ரத்த செங்கொடி தாழாது,**
**எங்கள் கரங்கள் தளராது,**
**எங்கள் வீரம் ஒரு போதும் குறையாது"**

என்று முழக்கமிடுவார்கள்.

அத்தகைய நம்பிக்கை தந்த தியாகம் நம்முடைய தோழர்களின் தியாகம்.

ஒரு ஆழமான உண்மையை நாம் புரிந்து கொள்ள வேண்டும். உலகில் எல்லா நாடுகளிலும் கம்யூனிஸ்டுகள் இருக்கிறார்கள், இயங்குகிறார்கள், போராடுகிறார்கள்,

கம்யூனிஸம் புதைக்கப்பட்டு விட்டது இனி அவ்வளவுதான் என்றும் பலரும் ஒருகாலத்தில் கருதினார்கள்.

ஆனால் உலகின் பல இடங்களிலும் புதைக்கப்பட்ட இடங்களில் இருந்து மீண்டேழுந்து, மீண்டும் போர்களத்திற்கு போர்புரிய வந்து விட்டது கம்யூனிஸ்ட் கட்சி. செங்கொடி இயக்கம் தனது உன்னதமான இலட்சியம் நிறைவேறும் வரை தொடர்ந்து போராடும்.

ஒரு பெரும் கேள்வி தற்போது கேட்கப்படுகிறது. அது கம்யூனிஸ்டுகளைப் பார்த்து கேட்கப்படுகிறது. எல்லோரும் கேட்கும் கேள்வி, ஏன் கம்யூனிஸ்டுகளே கூட கேட்கும் கேள்வி, அது என்னவென்றால் இவ்வளவு உயர்ந்த லட்சியத்தை கொண் டுள்ள நாம் ஏன் வளரவில்லை என்பதுதான்.

கால்கள் தேய்ந்து விடாமல் இருக்க செருப்பு தன்னைத்தானே தேய்த்துக் கொண்டு கால்களை காப்பாற்றுவதை போல, இந்த மனிதகுலத்தை காப்பாற்றுவதற்காக, தங்களது உயிரை அர்ப் பணிக்க, மகா உன்னதமான தியாக புருஷர்களை கொண்டிருக்கிற இந்தக் கட்சி ஏன் இன்னும் வளரவில்லை ? உலகையே கபளீகரம் செய்து கொண்டு இருப்பது உலக நிதி மூலதனம், இந்த நிதி மூலதனம் கண்களுக்குப் புலப்படாத தீயசக்தி என்பதை தோழர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

உலக நிதி மூலதனம் என்ற அமைப்பு, உலகின் வளர்முக நாடுகளின் இயற்கை வளங்களை கொள்ளை அடிப்பதோடு, அதன் சந்தையையும் கைப்பற்றிக் கொள்கிறது. அவர்களுக்கு எதிராக போராடுகிற ஒரே இயக்கம் கம்யூனிஸ்ட் இயக்கம் தான்.

எனவேதான், உலக நிதி மூலதனமும் கார்ப்பரேட் கம்பெனிகளும் கம்யூனிஸ்டுகளுக்கு எதிராக குறி வைத்திருக்கிறார்கள். உலகம் முழுவதும் சிதறிக் கிடக்கிற மக்களை ஒன்று திரட்டி உலக நாடுகளில் மேலாதிக்கம் செலுத்தும், செல்வ வளங்களை கொள்ளை அடிக்கும், பொருளாதார மேலாதிக்கம் செலுத்தும் நிதி மூலதனத்தை தகர்க்க போராடுவது கம்யூனிஸ்டு இயக்கங்கள் தான். எனவேதான் அவர்கள் கம்யூனிஸ்டு இயக்கங்களை குறி வைத்து இருக்கிறார்கள். எனவே தான், ட்ரம்ப் கம்யூனிஸ்டுகளை அமெரிக்காவிற்குள் அனுமதிக்கமாட்டோம் என்று குறிப்பிடுகிறார். அவர்கள் தான் நம்மால் புரிந்து கொள்ள முடியாத ஆயுதங்களை நம் மீது ஏவி இருக்கிறார்கள். அதாவது மதம், மொழி, சாதி, வட்டாரம் என்கின்ற உணர்வுகளை தூண்டி விடுவதன் மூலம், நம்மை ஒருவரோடு ஒருவர் மோத விடுவதன் மூலம் நம்மை, நமது ஒற்றுமையை சிதறடிக்கிராரார்கள்.

நாம் உலகத்தொழிலாளர்களே ஒன்று சேருங்கள் என்கிறோம், அவர்கள் மதம், சாதி, இனம், வட்டாரம் என்று பிரித்து நம்மை மோத விடுகிறார்கள். இந்த அடையாள அரசியல் எதிரிகளுக்கு கிடைத்திருக்கிற ஆயுதம். "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்பது தான் மெய்யான தமிழ் பண்பாடு, ஆனால் தமிழனை பிரிக்க தமிழகத்தில் இருந்தே ஒருவன் கிளம்பியிருக்கிறான்.

மூன்றாண்டுகளுக்கு முன்னர் சுதந்திர தின விழா கொண் டாட்டத்தின் போது மோடி தனது உரையில் அதானி, அம்பானி போன்ற கார்ப்பரேட் முதலாளிகளை காப்பாற்ற வேண்டும். அவர்களுக்கு அரசு உதவ வேண்டும். ஏனென்றால் சமூக செல்வத்தை அவர்கள் உருவாக்குகிறார்கள் என்று குறிப்பிட்டார். அவரது அந்தப் பேச்சு அவர் ஒரு பொருளாதார ஞானசூனியம் என்பதைத்தான் காட்டியது.

இங்கே இருக்கிற மரம் நாற்காலியாக வேண்டுமானால் அதற்கு உழைப்பு தேவை, மனிதனுடைய உழைப்பு இல்லாமல் ஒரு போதும் மரம் நாற்காலி ஆகாது. அந்த உழைப்பை விற்கிற கூட்டம் தான் தொழிலாளி வர்க்கம். அந்த தொழிலாளி வர்க்கம் தான் சமூக செல்வத்தை உண்டாக்குகிறது என்ற உண்மையை மூடி மூடி மறைத்து, பூசி மெழுகி தனது உரையில் அம்பானிக்கும், அதானிக்கும் ஆதரவுக் குரல் கொடுக்கிறார். இத்தகையவர்கள் தான் பன்னாட்டு பகாசுர கம்பெனிகளுடன் கைகோர்த்துக் கொண்டு கம்யூனிஸ்டுகள் வளர்ந்து விடாமல் தடுத்து வருகிறார்கள்.

**தொழிலாளிகள் வர்க்க ஐக்கியத்தை சிதைக்க அடையாள அரசியல் நடத்துகிறார்கள். தொழிலாளி வர்க்கத்திற்கு ஞானத்தை கற்றுத் தருகிற, மார்க்சியத்தை கற்றுக்கொடுக்க விடாமல் தடுக்கிற, கண்ணுக்குப் புலப்படாத ஆயுதங்கள் தான் அடையாள அரசியல்.**

மார்க்சியத்தை கற்று கரை ஏறாமல், அவற்றை நாம் நம் ஊனோடும் உயிரோடும் இரண்டற கலக்காமல், நிகழ்கால சவால்களை நம்மால் சந்திக்க முடியாது. இந்த கொடி பெரும் நெருப்பிற்கு நிகரானது. எந்த முறைகேடுகளையும் அண்டவிடாது. நாம் வீடு வீடாக சென்று மனித மனங்களை மண்டிக் கிடக்கின்ற புதர்களை அகற்ற பிரச்சாரம் மேற்கொள்ள வேண்டும். அதுதான் தற்போதைய தேவை'. என்றும் கே.சுப்பராயன் கூறினர்.

இந்த நிகழ்ச்சியில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணை செயலாளர் கே.சுப்பராயன் எம்.பி. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கொடியை ஏற்றிவைத்தார். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிக் கொடியை கனகராஜ் ஏற்றிவைத்தார். மாவட்ட செயலாளர் வி.எஸ்.சுந்தரம், மாநில பொருளாளர் எம்.ஆறுமுகம், மாவட்ட துணை செயலாளர்கள் ஆர்.தேவராஜ், சி.சிவசாமி, பொருளாளர் யூ.கே.சுப்ரமணியன், மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் நிர்வாக்கிகள் வெ.ராமமூர்த்தி, வேலுசாமி, யூ.கே.சிவஞானம், சந்திரன், மற்றும் இரு கட்சி தோழர்கள் தியாகிகளுக்கு அஞ் சலி செலுத்தினர்.

## பெரியார் சிலை அவமதிப்பு

# குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும்

கோவை மாநகரில் உள்ள வெள்ளலூர் பகுதியில் அமைந்துள்ள பெரியார் ஈ.வெ.ரா. சிலைக்கு, கடந்த 08.01.2022 ஆம் தேதி இரவில் சமூக விரோதிகள் செருப்பு மாலை போட்டு, காவிப்பொடி தூவி அவமதித்துள்ளனர்.

கடந்த சில வருடங்களாகவே பகுத்தறிவு, சமூக சீர்திருத்தக் கருத்துகளை முன்னெடுத்து, சமூக நீதி சார்ந்த ஜனநாயகத்திற்காக போராடிய தலைவர்களை இழிவுபடுத்தி, தரம் தாழ்ந்து பேசுவது, மறைந்த தலைவர்களை அவமதிப்பது போன்ற ஆத்திர மூட்டும் செயல்கள் தொடர்ந்து நடந்து வருகின்றன.

தமிழ்நாட்டு மக்களின் உயர்கல்வி உரிமையை பறிக்கும் "நீட்" தேர்வுக்கு விலக்களிக்கும் சட்ட முன் வடிவுக்கு குடியரசுத் தலைவர் ஒப்புதல் பெறும் நடவடிக்கையில் கவனம் செலுத்தாத ஆளுநர் நடவடிக்கை கடுமையான கண்டனத்திற்கு ஆளாகியுள்ளது.

இது தொடர்பாக முதலமைச்சர் 08.01.2022 ஆம் தேதி கூட்டிய சட்டமன்றக் கட்சித் தலைவர்கள் கூட்டம் கலந்தாலோசித்து தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. இதே நாளில் இரவில் கோவையில் பெரியார் சிலைக்கு செருப்பு மாலை போட்டு, சமூக நீதி உணர்வாளர்களை ஆத்திரமூட்டி, மக்கள் கவனத்தை திசைதிருப்பும் முயற்சியில் சமூக விரோதிகள் ஈடுபட்டிருக்கின்றனர்.

இது ஏதோ தற்செயலாக, மனநிலை பாதித்தவன் செய்து விட்ட காரியம் அல்ல, திட்டமிட்டு நிறைவேற்றிய சதிச் செயலாகும். சட்டம் ஒழுங்கு நிர்வாகத்திற்கு விடப்பட்ட சவாலாகும். ஜனநாயக சக்திகளை சீண்டி விடும் நோக்கம் கொண்ட வன்மம்.

சமூக விரோதிகளின் இழி செயலை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி யின் தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாகக் கண்டிப்பதுடன், இது போன்ற நேர்வுகளில் மேலோட்டமான, மென்மையான நடவடிக்கைகளை மேற்கொண்டு, குற்றவாளிகளை கண்டுகொள்ளாமல் விட்டுவிடும் காவல்துறையின் அணுகுமுறையும் குற்றச் செயல்கள் தொடருவதற்கு காரணமாகும் என்பதை கருத்தில் கொண்டு, மறைந்த தலைவர்களை அவமதிக்கும் இழி செயலை கொடுங் குற்றமாக கருதி, குற்றவாளிகள் சட்டத்தின் பிடியில் இருந்து தப்பித்து விடாமல் கடுமையாக தண்டிக்கப்பட வேண்டும் என வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

# எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற வேண்டும் ஆளுநர் உரை

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வேண்டுகோள்

தமிழ்நாடு சட்டமன்றத்தின் பதினாறாவது கூட்டத் தொடரை ஜன.05 அன்று ஆளுநர் தொடக்கி வைத்து உரை ஆற்றியுள்ளார்.

ஆளுநர் உரை அரசின் கொள்கை நிலையினையும், பிரச்சனை அணுகும் முறை குறித்தும் தெளிவுபடுத்தும் மரபு வழி நிகழ்வாகும்.

ஆளுநர் சட்டப் பேரவையில் ஆற்றிய உரை கடந்த எட்டு மாதங்களாக அரசு எடுத்து வந்த நடவடிக்கைகளை மிக சிறப்பாக தொகுத்து வழங்கியுள்ளது.

குறிப்பாக கோவிட் 19 நோய்த் தொற்றுப் பரவல் தடுப்பு நடவடிக்கை விரிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது. ஆனாலும் 40 சதவீதம் மக்களுக்கு இன்னும் இரண்டாம் தவணை தடுப்பு ஊசி செலுத்த வேண்டும் என்பதை கருதி பார்க்க வேண்டும்.

இப்போது ஒமைக்கரான் நோய்த் தொற்று பரவல் தடுப்பு நடவடிக்கையைத் தீவிரப்படுத்த வேண்டியுள்ளது.

வடகிழக்கு பருவ மழை இயல்பு நிலைக்கும் மிக அதிகமாக தொடர் கன மழை பெய்தது. இதனால் பெருவெள்ளம் ஏற்பட்டு சென்னை பெருநகரம், அதன் சுற்றுவட்டாரப் பகுதிகள், காவிரி பாசன மாவட்டங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டன. மேட்டு நிலச் சாகுபடி செய்த விவசாயிகளும் பெரும் இழப்புகளை சந்தித்துள்ளனர்.

இந்த இயற்கைப் பேரிடர் காலங்களில் மாண்புமிகு முதலமைச்சர் சலிப்பறியாது பயணம் செய்து, இரவும், பகலுமாக பாதிக்கப்பட்ட மக்களை அரவணைத்து ஆறுதல் கூறியது இதுவரை தமிழ்நாடு கண்டறியாத சாதனையாகும்..

வடக்கு கிழக்கு பருவமழையின் தீவிரத் தாக்குதலில் காவிரி பாசன மாவட்டங்களில் விளைந்து, அறுவடைக்கு தயாராக இருந்த சம்பா நெற்பயிரை விவசாயிகள் இழந்து விட்டனர்.

இதே காலகட்டத்தில் தாளடி பயிர் நடவு செய்திருந்த விவசாயிகளின் வயல்களில் தண்ணீர் தேங்கியதால் பயிர்களின் வேர்கள் அழுகி முற்றிலுமாக சேதமடைந்து விட்டன.

மேட்டு நில சாகுபடி சேதாரத்தால் காய்கறி விலைகள் வரலாறு காணாத அளவில் உயர்ந்து விட்டதை அரசு அறிந்திருக்கும்.

அண்மையில் தென்னக வானிலை ஆய்வு மையத்தையும், அரசின் கவனத்தையும் ஏமாற்றி பெய்த பெருமழையால் விளைந்த நெற்பயிர்கள் தண்ணீரில் மூழ்கி, சேரும் சகதியுமான நிலத்தில் விழுந்து அழுகி போயுள்ளது.

இந்தக் கடுமையான பாதிப்பை சந்தித்த விவசாயிகள் கூடுதல் நிவாரணம் கிடைக்கும் என எதிர்பார்த்திருந்தனர். இது பற்றி ஆளுநர் உரை எதுவும் குறிப்பிடவில்லை.

குடும்ப அட்டைகளுக்கு பொங்கல் பரிசு தொகுப்புத் திட்டம் மகிழ்ச்சி அளிப்பதுதான். ஆனால் பொங்கலுக்கு ரொக்கப் பண உதவி பெற்ற மக்களின் எதிர்பார்ப்பை ஆளுநர் உரை கருத்தில் கொள்ளவில்லை.

நீர் வழிப்பாதைகளில் ஆக்கிரமிப்பை அகற்றுவது சரிதான். ஆனால் பல ஆண்டுகளாக அங்கு குடியிருந்து வந்தவர்களின் மறுகுடியமர்வு, மறு வாழ்வு அளிப்பது குறித்து ஆளுநர் உரையில் எதுவும் இடம் பெறவில்லை.

தமிழ்நாட்டில் புதிய முதலீட்டுக்கு முன்னுரிமை கொடுத்து, 109 பரஸ்பர புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போட்டிருப்பது வரவேற்கதக்கது.

ஆனால் தொழிலாளர் நலன், பணியாளர் நலன், பழைய ஓய்வூதியத் திட்டம் போன்றவை குறித்து ஒரு வார்த்தையும் ஆளுநர் கூறாதது வியப்பளிக்கிறது.

தமிழ்நாட்டு மக்களின் எதிர் பார்ப்புகளை ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை நிறைவேற்றும் போது மாண்புமிகு முதலமைச்சர் ஆற்றும் உரையில் இடம் பெறும் என நம்பிக்கையோடு எதிர்பார்த்து, மரபு வழி ஆளுநர் உரையை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வரவேற்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

# நிவாரண அறிவிப்பு அரசாணையை மறுபரிசீலனை செய்க!

## தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் வேண்டுகோள்

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் பி.எஸ்.மாசிலாமணி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

கடந்த வடகிழக்கு பருவமழை தொடர் கனமழையாக பெய்து ஏற்பட்ட பெருவெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாய பயிர்களுக்கான இழப்பீடு பற்றிய அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அரசாணையில் கண்டுள்ள இழப்பீடுகள் விவசாயிகளின் துயர் துடைக்கப் போதுமானது அல்ல. மேலும் மனிதர்கள் மற்றும் கால்நடைகளின் உயிரிழப்புகளுக்கு இழப்பீடுகள் ஏதும் இல்லை என்பது ஏமாற்றம் அளிக்கிறது.

பெருமழை காலத்தில் வேலை வாய்ப்பிழந்து வருமானம் இல்லாத நிலைக்கு தள்ளப்பட்ட விவசாயத் தொழிலாளர் குடும்பங்களுக்கு ரொக்கப் பண உதவி குறித்து அரசாணையில் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

வடகிழக்கு பருவமழை வெள்ள பாதிப்புகளை பார்வையிட்டு மாண்புமிகு முதலமைச்சர் வெளியிட்ட நிவாரண அறிவிப்புகள் அரசாணையாக வெளியிடப்பட்டுள்ளது. இந்த அரசாணையில் முதல்வர் அறிவித்த இடுபொருள் மானியம் ரொக்கப் பண உதவியாக மாற்றப்பட்டுள்ளது.

கடந்த டிசம்பர் இறுதியில் பெய்த பெருமழையால் மீண்டும் ஏற்பட்ட சேதாரம் அதற்கான நிவாரணம் இவைகள் குறித்து அரசாணையில் எந்தக் குறிப்பும் இல்லை.

ஒரு ஏக்கர் தாளடி மற்றும் சம்பா சாகுபடி செய்த காலத் தைப் பொறுத்து ஏக்கருக்கு 30 ஆயிரம் ரூபாய் வரை செலவு செய்துள்ள விவசாயிகள் அதனை முற்றிலுமாக விவசாயிகள் இழந்து நிற்கும் துயர நிலையை கருத்தில் கொள்ளாமல் இழப்பீட்டுத் தொகையில் 8 சதவிகிதம் மட்டுமே நிவாரணமாக அறிவித்திருப்பது பெரும் வேதனையளிக்கிறது. தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் கடந்த டிசம்பர் 14ஆம் தேதி மாநிலம் முழுவதும் கோரிக்கைகளை வலியுறுத்தி மாண்புமிகு முதலமைச்சரின் கவனத்திற்கு கோரிக்கை விண்ணப்பங்களை அனுப்பி வைத்தது. இவைகளும் பரிசீலிக்கப்படவில்லை.

இந்த ஆண்டு ஜனவரி 5ஆம் தேதியிலிருந்து காவிரி டெல்டா பாசன பகுதிகளில் விவசாயிகள் நிவாரணம் கேட்டு போராடி வருவது தமிழ்நாடு அரசின் கவனத்திற்கு வந்திருக்கும் என நம்புகிறோம்.

தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ரூபாய் 6032 கோடியை ஒன்றிய அரசு இதுவரையிலும் வழங்காமல் தமிழ்நாட்டை வஞ்சித்து வருவதை தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் வன்மையாகக் கண்டித்து போராட்டங்களில் ஈடுபட்டு வருகிறது. மாநில அரசும் வலுவான அழுத்தம் கொடுத்து பேரிடர் நிவாரணம் பெறுவதுடன் தமிழ்நாடு அரசு நிவாரணம் தொடர்பாக வெளியிட்டுள்ள அரசாணையை ரத்து செய்து விவசாயிகளுக்கான நிவாரணத் தொகையை மேலும் உயர்த்தி வழங்க புதிய அரசாணை வெளியிட வேண்டும் என தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் தமிழ்நாடு அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு கூறியுள்ளார்.

### சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கு மூன்று மடங்கு கூலி உயர்வு

# கொள்முதல் பணியாளர்களுக்கு சம்பள உயர்வு

## தொழிற்சங்க தலைவர்கள் முதல்வருக்கு நன்றி

ஏஐடியூசி தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக தொழிலாளர் சங்க மாநில பொதுச் செயலாளர் சி.சந்திரகுமார் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நெல்கொள்முதல் சுமை தூக்கும் தொழிலாளர்கள் பெற்றுவந்த கூலி ரூபாய் ரூ 3.25 என்பதை மும்மடங்காக உயர்த்தி மூட்டை ஒன்றுக்கு ரூபாய் பத்தாக உயர்த்தப்பட்டுள்ளது. நெல்கொள்முதல் பணியாளர்களுக்கு 5.3.19 முதல் அமுல்படுதப்பட வேண்டிய குறைந்தபட்ச சம்பளம் சட்டப்படியான சம்பளம் வழங்கப்படாமல் சென்ற ஆட்சியில் காலம் கடத்தப்பட்டு அமுல்படுத்தாமல் அநீதி இழைக்கப்பட்டது. தற்போது முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு அமல்படுத்தப்படுத்துவதோடு பயணப்படி உயர்வும் வழங்கப்பட்டுள்ளது. மகழ்ச்சிக்குரியது. எனவே தொழிலாளர்களுக்கு மிகப்பெரிய அளவில் கூலி உயர்வு அறிவித்த தமிழக முதலமைச்சரை தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவை, ஏஐடியுசி தொழிற்சங்கங்கள் சார்பில் சென்னை தலைமைச் செயலகத்தில் சந்தித்து நன்றி தெரிவித்தோம்.

சந்திப்பின் போது உணவுத்துறை அமைச்சர் அர.சக்கரபாணி, மன்னார்குடி சட்டமன்ற உறுப்பினர் டிஆர்பி ராஜா ஆகியோர் உடன் இருந்தனர்.

தொழிலாளர் முன்னேற்ற சங்க பேரவை பொதுச்செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சண்முகம், சங்க மாநிலத் தலைவர் மா.பேச்சிமுத்து, மாநில பொதுச் செயலாளர் கோ.சி.வள்ளுவன் ஏஐடியூசி மாநில பொதுச் செயலாளர் டி.எம்.மூர்த்தி, சங்க மாநில பொதுச் செயலாளர் சி.சந்திரகுமார் சுமைதூக்கும் தொழிலாளர் சங்கத்தின் மாநில தலைவர் அ.சாமிக்கண்ணு மாநில நிர்வாக குழு உறுப்பினர் கே. பாலமுருகன் உள்ளிட்டோர் முதலமைச்சர் சந்திப்பில் கலந்து கொண்டு நன்றி தெரிவித்து மகிழ்ந்தனர்.

# தமிழ்நாட்டை வஞ்சிக்கும் பாஜகவின் அணுகுமுறை

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்

மருத்துவக் கல்லூரி மாணவர் சேர்க்கைக்கு ஒன்றிய அரசு ‘நீட்’’ தேர்வை அறிமுகப்படுத்திய, ஆரம்ப நிலையில் இருந்தே தமிழ்நாடு கடுமையாக எதிர்த்து வருகிறது.

இது தொடர்பாக சட்டமன்றப் பேரவையில் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டின் கோரிக்கை மீது முடிவு எடுத்து “நீட்” தேர்வுக்கு விலக்கு அளிக்க முன்வராமல் காலதாமப்படுத்தி, நடைமுறையில் நெட்டித் தள்ளி அமலாக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறது.

இந்த நிலையில் தமிழ்நாட்டில் இருந்து தேர்வு செய்யப்பட்ட ஜனநாயக முற்போக்குக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குடியரசுத் தலைவரை சந்திக்க சென்ற போது, கோவிட் நோய்த் தொற்று தடுப்புக்கான கட்டுப்பாடுகளை காரணமாக்கி குடியரசுத் தலைவர் நாடாளுமன்ற கட்சித் தலைவர்களை சந்திக்கவில்லை. அவரது அலுவலக அதிகாரிகளிடம் விண்ணப்பம் கொடுத்து திரும்பினர்.

இந்த நிலையில் ஒன்றிய அரசின் உன்துறை அமைச்சர் அமித்ஷாவை சந்திக்க திமுகழக நாடாளுமன்றக் கட்சி தலைவர் டி.ஆர்.பாலு தலைமையில், கூட்டணிக் கட்சிகளின் நாடாளுமன்றக்குழு தலைவர்கள் கடந்த 02.01.2022 முதல் 05.01.2022 முடிய நான்கு நாட்கள் டெல்லியில் காத்திருத்தும் உள்துறை அமைச்சரை சந்திக்க முன்வரவில்லை.

பாஜகவின் இந்த அணுகுமுறை தமிழ்நாட்டின் நலனுக்கு எதிரானது. மக்கள் பிரதிநிதிகளை சந்திக்க முன்னுரிமை அளிக்காதது, நாடாளுமன்ற உறுப்பினர்களை அவமதிக்கும் செயலாகும்.

ஒன்றிய அரசின் உள்துறை அமைச்சரின் எதிர்மறை அணுகுமுறையை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாக கண்டிக்கிறது. “நீட்” தேர்வுக்கு விதிவிலக்கு பெறவதற்கான முறையில் மக்கள் உணர்வுகளை அணி திரட்டி, ஒன்றிய அரசுக்கு வலுவான அழுத்தம் தர தயாராக வேண்டும் என அனைத்து ஜனநாயக சக்திகளையும் கேட்டுக் கொள்கிறது. இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

## இந்த வார தம்பிக்குறள்

### 53. இம்மைக்கே வாழ்வு

**வாழ்வா வதுலகின் கண்ணே வாழ்வதே**
**வாழ்வாகும் மற்றெல்லா மருள்.**

இவ்வுலகில் நாம் வாழ்கின்ற வாழ்க்கைதான் உண்மையான வாழ்க்கை. இவ்வாழ்க்கை இல்லாமல் மேலுலக வாழ்க்கை (வீடுபேறு) என்பன எல்லாம் பொய்யாகும் (அறியாமை என்றறிக)

**இங்கின்றி எங்கேவுண் டின்பமும் துன்பமும்**
**எங்கோ இருப்ப திருள்.**

இன்பமும் துன்பமும் இப்பொழுது வாழ்கின்ற வாழ்க்கையில்தான் உள்ளது. வேறு எங்கோ இருப்பதாகச் சொல்வதும் அறியாமையே!

## வாசகர் டுவிட்



**ஆசிரியர் ஜனசக்தி,**

ஜனசக்தியின் முதல்பக்கமே சாட்டையடியாக இருக்கிறது. ஒன்றிய பாஜக அரசு கிரிமினல் அரசு என்று சொல்வதற்கு எவ்வளவு துணிச்சல், ஆதாரங்கள் வேண்டும். அதுல்குமார் அஞ்சான் குற்றச்சாட்டில் அதற்கான ஆதாரங்களும் துணிச்சலும் சேர்ந்தே இருந்தது.

– **திவ்ய பாரதி**, கோவில்பட்டி

**ஆசிரியர் ஜனசக்தி,**

கம்யூனிஸ்ட்டுகள் கடைபிடித்த நேர்மையான முன்னுதாரணங்கள் குறித்து கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் மிக பொருத்தமான நேரத்தில் பொருத்தமாக சுட்டிக்காட்டி இருக்கிறார். தோதாத்ரி அவர்களின் மார்க்சியம் பற்றிய தொடர் கடினமாக இல்லாமல் புரியும் வகையில் இருக்கிறது. இன்றைய சூழலுக்கு தேவையான ஒன்று.

– **சக்திவேல்**, மதுரை

**ஆசிரியர் ஜனசக்தி,**

நாகலாந்தின் படுகொலைகளையும் ஆயுதப்படைகளின் சிறப்பு அதிகாரச் சட்டத்தையும் முன்னாள் அகில இந்தியப் பொதுச் செயலாளர் தோழர் எஸ்.சுதாகர் ரெட்டி தோலுரித்துக் காட்டி உள்ளார். பாராளுமன்றமா? பாஜகவின் பஜனைக் கூடமா? தோழர் ஆர்.கே.வின் கட்டுரை பாராளுமன்றத்தின் அவலத்தை படம் பிடித்துக் காட்டுகிறது.

– **சிங்காரம்**, தஞ்சாவூர்.

**ஆசிரியர் ஜனசக்தி,**

இந்தியாவில் அரசும் மதமும் என்ற பொதுச் செயலாளர் டி.ராஜாவின் கட்டுரை நமது நாட்டில் பல்வேறு மொழி, மதங்கள், பண்பாடுகளை பாஜக அழித்தொழிப்பதை ஆதாரத்தோடு நிறுவுகிறது.

பெண்களின் திருமண வயது உயர்த்தும் திரைமறைவு அரசியலை ஆனி ராஜாவின் கட்டுரை அம்பலப் படுத்துகிறது.

– **மதன்குமார்**, சென்னை.



சி.எஸ். கட்டிட இரண்டாவது தள பணிகள்

# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்கள் பார்வையிட்டனர்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கோபிசெட்டிபாளையத்தில் கட்டப்பட்டு வரும் சி.எஸ்.கட்டிட இரண்டாவது தளம் அமைக்கும் பணி பணியினை மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், துணைச் செயலாளர் கே.சுப்பராயன் எம்.பி., மாநில பொருளாளர் எம்.ஆறுமுகம் எக்ஸ்.எம்.எல்.ஏ., மாநில செயற்குழு உறுப்பினர்கள் என்.பெரியசாமி எக்ஸ்.எம்.எல்.ஏ., க.சந்தானம் மற்றும் பி.எல்.சுந்தரம் எக்ஸ்.எம்.எல்.ஏ., ஈரோடு வடக்கு மாவட்டச் செயலாளர் டி. ஏ.மாதேஸ்வரன், ஈரோடு தெற்கு மாவட்ட பொருளாளர் எஸ்.டி.பிரபாகரன் ஆகியோர் பார்வையிட்டனர்.

# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் இண்டூர் வட்டாரக்குழு கூட்டம்

தருமபுரி: இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் இண்டூர் வட்டாரக்குழு கூட்டம் இண்டூரில் நடைபெற்றது. கூட்டத்திற்கு வட்டார நிர்வாகக்குழு உறுப்பினர் ஆர்.மாணிக்கம் தலைமை வகித்தார். மாநில செயற்குழு உறுப்பினர் ந.நஞ்சப்பன் இன்றைய அரசியல் சூழ்நிலைகள் குறித்து பேசினார்.வட்டார பொறுப்பாளர் சிவன் வேலை அறிக்கை வைத்து பேசினார். கூட்டத்தில் இண்டூர் ஏரியில் உள்ள கருவேல மரங்களை அகற்றி தூர்வாரி ஏரியை ஆழப்படுத்த வேண்டும்.

இண்டூர்நல்லம்பள்ளி சாலையை அகலப்படுத்தி பொது மக்கள் வசதிக்காக கூடுதல் பேருந்துகளை இயக்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கூட்டத்தில் மாவட்ட பொருளாளர் எம்.மாதேஸ்வரன், மாநிலக்குழு உறுப்பினர் எஸ்.சின்னசாமி,வட்டார பொருளாளர் எம்.மாதையன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## இளைஞர் பெருமன்ற புதிய கிளை துவக்கம்

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி ஒன்றியம், நுணாக்காடு கிளை ஆண்டு பேரவை சிறப்பாக நடைபெற்றது. பேரவையினை ஆர்.ராஜ்கபூர் தலைமை ஏற்று நடத்தினார். வி.ஆர். ஐயப்பன் அனைவரையும் வரவேற்று பேசினார். ஒன்றிய தலைவர் ஜெ.கணேஷ் கொடியேற்றி வைத்தார். முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.உலகநாதன் பேரவையினை துவக்கிவைத்து பேசினார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஒன்றிய செயலாளர் கே.பாலு, ஒன்றிய நிர்வாகக்குழு உறுப்பினர் அ.குமரேசன், வி.சகாதேவன், வி.சண்முகம் ஆகியோர் பேரவையினை வாழ்த்தி பேசினர். 50க்கும் மேற்பட்ட இளைஞர் பெருமன்ற உறுப்பினர்கள், பொறுப்பாளர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டு பேரவையை சிறப்பித்தனர்.

புதிய பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டு புதிய கிளை அமைப்பு துவக்கப்பட்டது. மருத.பாலகிருஷ்ணன் நன்றி கூறினார்.

### நூறு நாள் வேலைத்திட்ட

# முறைகேடுகளைக் கண்டித்து ஊர்கவுண்டனூரில் ஆர்ப்பாட்டம்

திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் அடுத்த ஊர்கவுண்டனூர் ஊராட்சி மன்ற அலுவலகம் முன் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஊர்கவுண்டனூர் பகுதியில் 100 நாள் வேலைத் திட்டத்தில் முறைகேடுகளை கண்டித்து, கண்டன ஆர்ப்பாட்டம் கிளை செயலாளர் குமார் தலைமையில் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர் முத்தையன், விவசாய தொழிலாளர் சங்கத்தின் மாவட்ட செயலாளர் தங்கராஜ் ஆகியோர் கலந்துகொண்டு முறைகேடுகள் குறித்து கண்டன உரையாற்றினார். ஆர்ப்பாட்டத்தில் செங்கம் டு பன்ரேவ் வரை தார் சாலைகளை உடனடியாக சீர் செய்திட வேண்டும். மழை வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட தொட்டிமடுவு, கோவில் கொல்லை , இரண்டு தலை பாலங்களை உடனடியாக சீர் செய்யவும் கோரிக்கை விடுத்தனர். செங்கம் வட்ட செயலாளர் சர்தார், மாவட்ட நிர்வாக குழு மாதேஸ்வரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# பரவாக்கோட்டை உ.மார்க்ஸ் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியல் இணைந்தார்

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா.முத்தரசன் தலைமையில், தேசியக் குழு உறுப்பினர் கோ.பழனிசாமி, மாநில நிர்வாக குழு உறுப்பினர் எம். செல்வராஜ் எம்.பி., மாவட்ட செயலாளர் வை.சிவபுண்ணியம், மன்னார்குடி ஒன்றிய செயலாளர் ஆர்.வீரமணி முன்னிலையில் பரவாக்கோட்டை உ.மார்க்ஸ் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்தார்.

### தனது பதவியின் கண்ணியத்தை மனதில் கொண்டு

# பொறுப்பற்ற அறிக்கைகளை பிரதமர் வெளியிடக் கூடாது

## மோடிக்கு ஐக்கிய விவசாயிகள் முன்னணி வேண்டுகோள்

ஜனவரி 5ஆம் தேதி பிரதமர் பஞ்சாப் பயணம் தொடர்பான நிகழ்வுகள் குறித்து, ஐக்கிய விவசாயிகள் முன்னணியின் (சம்யுக்த கிசான் மோர்ச்சாவின்) அறிக்கை வருமாறு:

1. ஜனவரி 5ஆம் தேதி பிரதமர் நரேந்திர மோடியின் பஞ்சாப் பயணம் குறித்த செய்தி கிடைத்ததும், சம்யுக்த கிசான் மோர்ச்சாவைச் சேர்ந்த 10 விவசாய அமைப்புகள், அஜய் மிஸ்ரா டேனியைக் கைது செய்யக் கோரி, அடையாளப் போராட்டத்தை அறிவித்தன. இந்த நோக்கத்திற்காக, ஜனவரி 2 அன்று பஞ்சாப் முழுவதும் கிராம அளவிலும், ஜனவரி 5 அன்று மாவட்ட மற்றும் தாலுகா தலைமையகத்திலும் போராட்டங்கள் மற்றும் உருவ பொம்மை எரிப்பு நிகழ்ச்சிகள் அறிவிக்கப்பட்டன.

2. முன்னரே தீர்மானிக்கப்பட்ட அட்டவணையின்படி, ஜனவரி 5ஆம் தேதி பஞ்சாபின் ஒவ்வொரு மாவட்டத்திலும் மற்றும் தாலுகா தலைமையகத்திலும் அமைதியான போராட்டங்கள் நடத்தப்பட்டன.

ஃபெரோஸ்பூர் மாவட்டத் தலைமையகத்திற்கு விவசாயிகளைச் செல்ல விடாமல் காவல்துறையினர் தடுத்து நிறுத்தியபோது, அவர்கள் பல இடங்களில் சாலையில் அமர்ந்து மறியலில் ஈடுபட்டனர்.

இதில், பிரதமரின் கார் அணிவகுப்பு வந்து நின்று திரும்பிய பைராயனா மேம்பாலமும் இருந்தது. அங்கு போராட்டம் நடத்திய விவசாயிகளுக்குப் பிரதமரின் வாகனம் அந்த வழியாகச் செல்லும் என்பது குறித்த உறுதியான தகவல் கிடைக்கவில்லை.

பிரதமர் டெல்லி திரும்பிய பின்னர்தான், ஊடகங்கள் மூலம் இந்த தகவல் அவர்களுக்குக் கிடைத்துள்ளது.

3. போராட்டம் நடத்திய விவசாயிகள் பிரதமரின் வாகன அணிவகுப்பை நோக்கிச் செல்ல எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்பது, நிகழ்ச்சியின் காணொளியில் தெளிவாகத் தெரிகிறது. பாஜக கொடியுடன் ''நரேந்திர மோடி ஜிந்தாபாத்'' என்ற முழக்கத்தை எழுப்பியபடி ஒரு குழு மட்டுமே அந்த கார் அணிவகுப்பு அருகே சென்றது. எனவே, பிரதமரின் உயிருக்கு அச்சுறுத்தல் முற்றிலும் உருவாக்கப்பட்டதாக தெரிகிறது.

4. ஆள் வராத தன்னுடைய பேரணியின் தோல்வியை மறைக்க, பஞ்சாப் மாநில அரசு மற்றும் விவசாயிகள் இயக்கம் ஆகிய இரண்டின் மீதும், ''எப்படியோ என்னுடைய உயிர் காப்பாற்றப்பட்டது'' என்ற சொல்லாடலைப் பயன்படுத்தி, பிரதமர் அவதூறு சுமத்த முயன்றது மிகவும் வருத்தம் அளிக்கிறது.

விவசாயிகளின் உயிர்தான் இன்று ஆபத்தில் இருக்கிறது என்று உலகம் முழுவதும் அறிந்த உண்மை.

அதுவும் அஜய் மிஸ்ரா டேனி போன்ற குற்றவாளிகளை அமைச் சராக்கி, சுதந்திரமாக உலவ விட்டதன் மூலம், விவசாயிகளின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது.

நாட்டின் பிரதமர் தனது பதவியின் கண்ணியத்தை மனதில் கொண்டு இதுபோன்ற பொறுப்பற்ற அறிக்கைகளை வெளியிடக்கூடாது என்று சம்யுக்த கிசான் மோர்ச்சா எதிர்பார்க்கிறது என பல்பீர் சிங் ராஜேவால், டாக்டர். தர்ஷன் பால், குர்னம் சிங் சதுனி, ஹன்னன் மொல்லா, ஜக்ஜித் சிங் டல்வால், ஜோகிந்தர் சிங் உக்ரஹான், ஷிவ்குமார் சர்மா (காக்கா ஜி), யுத்வீர் சிங், யோகேந்திர யாதவ் ஆகிய சம்யுக்த கிசான் மோர்ச்சா தலைவர்கள் தங்கள் அறிக்கையில் கூறியுள்ளனர்.

### நடைபெறும் சட்டமன்ற கூட்டத்தொடரில்

# போக்குவரத்து கழகங்களுக்கு தனியாக நிதி ஒதுக்கீடு அறிவிக்க வேண்டும்!

## ஏஐடியூசி ஓய்வூதியர்கள் கூட்டத்தில் கோரிக்கை!!


தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் செயல்பட்டு வரும் ஏஐடியூசி ஓய்வுபெற்ற தொழிலாளர் சங்கத்தின் நிர்வாக குழு கூட்டம் சங்கமாவட்ட அலுவலகத்தில் சங்கத் தலைவர் மல்லி. ஜி.தியாகராஜன் தலைமையில் நடைபெற்றது. பொதுச் செயலாளர் பி.அப்பாத்துரை நடைபெற்ற பணிகள் குறித்து பேசினார்.

சம்மேளன துணைத் தலைவர் துரை.மதிவாணன், ஏஐடியூசி மாநில செயலாளர் சி.சந்திரகுமார், மாவட்ட செயலாளர் ஆர். தில்லைவனம் ஆகியோர் பேசினர்.

நடைபெறும் சட்டமன்ற கூட்டத்தொடரில் போக்குவரத்து கழகங்களுக்கு தனியாக நிதி ஒதுக்கீடு அறிவிக்க வேண்டும், ஓய்வு பெற்ற சுமார் 85 ஆயிரம் தொழிலாளர்களுடைய உயர்ந்துவிட்ட பழைய, புதிய அகவிலைப்படி உயர்வுகளை ஓய்வூதியத்துடன் இணைத்து ஓய்வூதியத்தை உயர்த்தி நிலுவைத் தொகையுடன் வழங்கிட வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின்

# கிளை மாநாடுகள்



**மேட்டுத்தெரு கிளை:**

அஸ்தம்பட்டி மண்டலம் மேட்டுத் தெரு கிளை மாநாடு நடைபெற்றது. ஆர்.அய்யாக்கண்ணு தலைமை வகித்தார்.

கிளை செயலாளராக ஆர்.எல். செல்வராஜு, துணைச் செயலாளராக ஏ.ஜெகதீஸ்வரன், பொருளாளராக கே.ஆர். ஆண்டியப்பன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். மண்டல மாநாட்டிற்கு 8 பிரதிநிதிகள் தேர்வு செய்யப்பட்டனர்.

**கோடாரம்பட்டி கிளை:**

இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி தருமபுரி மாவட்டம் பென்னாகரம் வட்டார கோடாரம்பட்டி கிளை மாநாடு வட்டார குழு உறுப்பினர் கோவிந்தராஜ் தலைமையில் நடைப்பெற்றது. வட்டார செயலாளர் பி.முனியப்பன், மாவட்ட நிர்வாககுழு உறுப்பினர் சி. மாதையன் ஆகியோர் அரசியல், எதிர்கால கடமைகள் குறித்து பேசினர். மாநாட்டில் புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர்.

**திருநகரி கிளை:**


இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் திருநகரி கிளை மாநாடு ஜெயபிரகாஷ் தலைமையில் நடைபெற்றது. ஒன்றிய செயலாளர் செல்லப்பன் தொடங்கி வைத்து உரையாற்றினார். கிளை செயலாளராக சிவானந்தம், துணை செயலாளராக ஹரி கிருஷ்ணன் மற்றும் கலையரசி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

**நியூசெஞ்சுரி ஐ.சி.எப். கிளை:**

மத்திய சென்னை மாவட்டம், அம்பத்தூர் பகுதி, நியூசெஞ்சுரி ஐ.சி.எப். காலனி கிளை மாநாட்டிற்கு ஆர்.துரைசாமி தலைமை வகித்தார். கே.சிவகாமி கொடி ஏற்றினார். மாவட்டச் செயலாளர் பா.கருணாநிதி, ஏ.எஸ்.கண்ணன் எக்ஸ்.எம்.எல்.ஏ., மாவட்ட துணைச் செயலாளர் பி. மாரியப்பன் ஆகியோர் கலந்து கொண்டனர். கிளைச் செயலாளராக என்.கோபிநாதன், துணைச் செயலாளராக ஆர்.உமா மகேஸ்வரன், பொருளாளராக ஆர்.விஜயகுமார் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

# இராமநாதபுரம் பி.பொன்னுசாமி படத்திறப்பு விழா!

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக்குழு உறுப்பினராகவும், விவசாய சங்கத்தின் நெல்லை மாவட்ட தலைவராகவும், இராமநாதபுரம் ஊராட்சி மன்ற தலைவராகவும், அடித்தட்டு மக்களின் வாழ்க்கை மேம்பட வாழ்நாள் முழுவதும் அப்பணிப்பாய் வாழ்ந்து மறைந்த பி.பொன்னுசாமி அவர்களின் படத்திறப்பு விழா ஜனவரி 1ஆம் தேதி தென்காசி மாவட்டம் இராமநாதபுரத்தில் வாசுதேவநல்லூர் ஒன்றிய செயலாளர் ப.வேலு தலைமையில் நடைபெற்றது. மாநில துணைச் செயலாளர் கே.சுப்பராயன் எம்.பி., படத்தை திறந்துவைத்து புகழஞ்சலி செலுத்தினார். நிகழ்ச்சியில் மாநில நிர்வாக குழு உறுப்பினர்கள் எஸ்.காசிவிஸ்வநாதன், எஸ்.அழகுமுத்துபாண்டியன், மாவட்ட செயலாளர் த.இசக்கித்துரை, மாநில குழு உறுப்பினர்கள் பி.எஸ்.எஸ்.போஸ், எஸ்.வேலாயுதம், மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்கள் எஸ்.மாரியப்பன்,



ஏ.பரமசிவன், சிங்காரவேலு, வாசு மற்றும் கட்சி தோழர்கள் குடும்பத்தினர் ஏராளமானோர் கலந்து கொண்டனர். இளைஞர் பெருமன்ற சிவகிரி தாலுகா முன்னாள் தலைவர் பி.ரவிக்குமார் நன்றி கூறினார்.

## நீரில் மூழ்கிய பயிர்களுக்கு

# இழப்பீடு வழங்குக!

### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்கள் முதலமைச்சரிடம் நேரில் முறையீடு

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், முன்னாள் எம்.எல்.ஏக்கள் எம்.ஆறுமுகம், நா.பெரியசாமி (விவசாயத் தொழிலாளர் சங்கம்), எஸ்.குணசேகரன் (தமிழ்நாடு விவசாயிகள் சங்கம்) ஆகியோர் 03.01.2022 மாலையில் முதலமைச்சரை நேரில் சந்தித்து, தொடர் மழையால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள், நிவாரண நடவடிக்கைகள் குறித்து முறையிட்டதுடன் கீழ்க்கண்ட கோரிக்கை விண்ணப்பம் அளித்துள்ளனர்.

விண்ணப்பத்தைப் பெற்றுக் கொண்ட முதலமைச்சர், தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளை எடுத்துக் கூறினார். ஒன்றிய அரசிடம் இருந்து பேரிடர் நிதி ஏதேனும் வந்ததா என்று கேட்ட போது, இன்னும் வரவில்லை என்று தெரிவித்தார். இருப்பினும் அரசு விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்களுக்கு அதிகபட்சம் என்ன செய்ய இயலுமோ அதற்கான முயற்சிகளை மேற்கொள்வதாக கூறினார். மேலும் ஒன்றிய அரசின் மக்கள் விரோத கொள்கைகளுக்கு எதிராக ஜனநாயக ரீதியிலான கிளர்ச்சி நடவடிக்கைகளில் சட்ட வரம்புக்கு உட்பட்டு நடத்துகிற போது அதில் பங்கேற்பவர்கள் மீது வழக்குப் போடும் முறையை கைவிட வேண்டும். கடந்த ஆட்சியில் கோவை மாநகரத்தில் குடிதண்ணீர் விநியோக உரிமையை அன்னிய நிறுவனமான சூயஸ் பன்னாட்டு நிறுவனத்திடம் ஒப்படைப்பதை எதிர்த்து திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.சுப்பராயன் எம்.பி. தலைமையில் போராட்டத்தில் ஈடுபட்ட 90 பேர் மீது வழக்கு போடப்பட்டுள்ளது. இவ்வழக்கை திரும்பப் பெற வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டது. கீழ்க்கண்ட விண்ணப்பம் முதலமைச்சரிடம் நேரில் வழங்கப்பட்டது.

வடகிழக்கு பருவமழை இயல்பு நிலைக்கு மாறாக மிக அதிக அளவில் தொடர் கனமழையாக பெய்ததால் தமிழ்நாடு முழுவதும் கடுமையான பாதிப்புகளும், சேதாரங்களும் ஏற்பட்டுள்ளது. இது தொடர்பாக தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வரும் நிவாரண நடவடிக்கைகள் ஆறுதல் அளிக்கும் வகையில் அமைந்துள்ளன. இருப்பினும் விவசாயிகளின் பயிர் இழப்பீடுகளுக்கு போதுமான இழப்பீடு கிடைக்காததால் குறிப்பாக தாளடி பயிர்கள் சாகுபடி செய்த நிலையிலேயே இழந்துவிட விவசாயிகள் மீளமுடியாத துயரத்திற்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் அண்மை சில நாட்களாக பெய்யும் தொடர்மழையால் காவிரி பாசனப் பகுதிகளில் சம்பா நெற்பயிர்கள் நீரில் மூழ்கிவிட்டன. இப்பயிர்கள் தண்ணீர் வடியும் போது சேறு சகதியில் படிந்து நெற்கதிர்கள் முளைப்பதுடன் அறுவடை செய்ய இயலாமல் பெரும் சேதத்திற்கு உள்ளாகும் என்பதை தங்கள் மேலான கவனத்திற்கு கொண்டு வருகிறோம்.

தொடர் கனமழையால் காவிரி பாசன மாவட்டங்களில் ஏற்பட்ட பாதிப்புகளை கணக்கெடுத்து, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.30 ஆயிரம் இழப்பீடு வழங்கவும், விவசாயத் தொழிலாளர்களுக்கு ரொக்கப்பண உதவியாக குடும்பத்திற்கு தலா ரூ.10 ஆயிரம் வழங்கவும் வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறோம்.

இயற்கை பேரிடர் குறித்து ஒன்றிய அரசின் உயர்நிலை அதிகாரிகள் கள ஆய்வு செய்து திரும்பி பல வாரங்கள் ஆன பின்பும், எந்தத் தகவலும் வெளியிடப்படாதது தமிழ்நாட்டை வஞ்சிக்கும் போக்காகும். ஒன்றிய அரசின் இந்த அணுகுமுறைக்கு எதிராக மக்கள் உணர்வுகளை பிரதிபலித்து ஒன்றிய அரசுக்கு வலுவான அழுத்தம் கொடுத்து, பேரிடர் நிவாரண நிதி பெற்று விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்களின் துயர் துடைக்கும் நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு மேற்கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

## மழை வெள்ளத்தால் பாதித்த நெற்பயிர்களுக்கு ஏக்கருக்கு

# ரூ.30,000 இழப்பீடு வழங்கிடுக!




தஞ்சை மாவட்டம் உள்ளிட்ட காவிரி டெல்டா பகுதிகளில் மிகக் கூடுதலாக கடுமையான மழை பெய்ததால் அறுவடைக்கு தயாராக இருந்த குறுவை நெல் பெயர்களும், சம்பா நடவுக்காக பயிரிட்ட பயிர்களும் மழை வெள்ளத்தில் மூழ்கி அழிந்து போயுள்ளன.

மழை வெள்ளத்தால் ஏற்பட்ட பயிர்களுக்கு ஏக்கருக்கு ரூ.30,000 ஆயிரம் நிவாரணம் வழங்க வலியுறுத்தி, தஞ்சாவூர் ரயிலடி முன்பு தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் விவசாய சங்க மாவட்ட செயலாளர் பா.பாலசுந்தரம், மாவட்ட தலைவர் வீர.மோகன் தலைமையில் சாலை மறியல் போராட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தினை விளக்கி தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாநில பொதுச்செயலாளர் பி.எஸ்.மாசிலாமணி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் முத்து உத்திராபதி ஆகியோர் சிறப்புரையாற்றினர். விவசாய சங்கத்தின் தேசியசெயற்குழு உறுப்பினர் அ.பன்னீர்செல்வம், விவசாய சங்க நிர்வாகிகள் சோ.பாஸ் கர், சக்திவேல், மு.கருப்பையன், சிபிஐ மாநகர செயலாளர் ஆர்.பிமுத்து குமாரன் உள்ளிட்ட ஏராளமானோர் சாலை மறியலில் பங்கேற்றனர்.




**பாபநாசம்:** கும்பகோணம் – தஞ்சாவூர் மெயின் சாலையில், பாப நாசம் அரசு மருத்துவமனை அருகில் நடைபெற்ற சாலை மறியல் போராட்டத்தில் தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டச் செயலாளர் சாமு. தர்மராஜன், ஒன்றியச் செயலாளர் கனகராஜ், தலைவர் பொய்யா மொழி, விவசாயத் தொழிலாளர் சங்க மாவட்ட நிர்வாகக் குழு பரமசிவம், ஏஐடியூசி மாவட்டச் செயலாளர் தில்லைவனம் உள்பட 50 க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

**அம்மாப்பேட்டை:** அம்மாப்பேட்டையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு தமிழ்நாடு விவசாயிகள் சங்க ஒன்றியச் செயலர் வெங்கடேசன் தலைமை வகித்தார். இதில் மாவட்ட நிர்வாகி சாமு.தர்மராசன், ஏஐடியூசி மாவட்டச் செயலர் தில்லைவனம், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஒன்றியச் செயலாளர் செந்தில் குமார் உள்பட ஏராளமானோர் பங்கேற்றனர்.

**திருத்துறைப்பூண்டி:** திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி ஒன்றிய மற்றும் நகர விவசாய சங்கங்களின் சார்பில் திருத்துறைப்பூண்டி புதிய பேருந்து நிலையம் அருகில், தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாவட்ட துணை தலைவர் கே.உலகநாதன் எக்ஸ். எம்.எல்.ஏ. தலைமையில் நடை பெற்ற சாலை மறியல் போராட்டத்தில் திருத்துறைப்பூண்டி ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் அ.பாஸ்கர், பி.வி.சந்திரராமன் சிபிஐ மாவட்ட நிர்வாகக்குழு, கே. பாலு, எம்.முருகேசன், டி.பி. சுந்தர், கோ. ஜெயபால், எம்.மகாலிங்கம், சு.தமிழ் செல்வி உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.




## விருதுநகரில் ஏஐடியூசி மீனவத் தொழிலாளர்கள் கண்டன ஆர்ப்பாட்டம்

விருதுநகர் பழைய பேருந்து நிலையம் முன்பு, தமிழ்நாடு ஏஐடியுசி மீனவத் தொழிலாளர் சங்கம் சார்பில் தமிழகம் தழுவிய கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் சி.செல்வம் தலைமை வகித்தார். ரெஜினாமேரி, அழகர்செல்வம் முன்னிலை வகித்தனர். ஆர்ப்பாட்டத்தை தொடங்கி வைத்து மாநில பொதுச் செயலாளர் பி.சின்னதம்பி பேசினார். சிபிஐ மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, மாவட்ட துணை செயலாளர் எஸ்.பழனிக்குமார், மாநிலக்குழு உறுப்பினர் பாலமுருகன், ஏஐடியுசி மாவட்ட செயலாளர் முத்துமாரி, மாவட்ட தலைவர் சமுத்திரம் ஆகியோர் உள்பட எராளமானோர் கலந்து கொண்டனர்.

## இராயகிரி பேரூராட்சியை பூட்டுபோடும் போராட்டம் ஒத்திவைப்பு

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் இராயகிரியில் குடிநீர் தட்டுப்பாடு உட்பட பல கோரிக்கைகளை வலியுறுத்தி பேரூராட்சி அலுவலகத்தில் பூட்டு போடும் போராட்டம் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டு அதற்கான திட்டமிடல் நடைபெற்று வந்த நிலையில் சிவகிரி வட்டாச்சியர் தலைமையில் சமாதானக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் குடிநீர் தட்டுப்பாட்டை போக்க உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு 3 நாட்களுக்கு ஒரு முறை விநியோகம் செய்வது போன்ற 14 முடிவுகள் எடுக்கப்பட்டு அதற்கு அடுத்த ஒரு மாதத்திற்குள் தீர்வு செய்ய வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. எனவே சமாதானக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில் ஜனவரி 10ஆம் தேதி நடைபெறவிருந்த போராட்டம் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## பிஎஸ்என்எல் தொழிற்சங்க தலைவர் ஓ.பி.குப்தா நினைவு தினம்

தேசிய தொலைத்தொடர்பு ஊழியர் சம்மேளனத்தின் முன்னாள் அகில இந்திய பொதுச் செயலாளரும், பிஎஸ்என்எல் ஊழியர்களுக்கு முழு பென்சன் தொகையை பெற்றுத் தந்தவருமான ஓ.பி.குப்தா 9ம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அவரது உருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது. தருமபுரி தொலைபேசி நிலையம் அருகில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு மாவட்டத் தலைவர் வீரமணி தலைமை வகித்தார்.மாவட்டச் செயலாளர் கே.மணி மாலை அணிவித்து சிறப்புரையாற்றினார். இந்த நிகழ்ச்சியில் ஏஐடியூசி மாவட்ட துணை செயலாளர் ஆர்.சுதர்சனன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## நவீன அரிசி ஆலை முன்பு அரிசியை கொட்டி ஒப்பாரி வைத்து போராட்டம்

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி தாலுக்கா எருக்கூர் அரிசி ஆலை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நவீன அரிசி ஆலை அமைந்துள்ளது. இந்த அரிசி ஆலையில் அரைக்கப்படும் அரிசியே மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள மக்களுக்கு வினியோகம் செய்யப்படுகிறது. இங்கு இருந்து ரேஷன் கடைகளுக்கு அனுப்பப்படும் அரிசிகள் தரமற்று இருக்கிறது. இதனைக் கண்டித்து ஒப்பாரி போராட்டம் வி.தொ.ச. நீதிசோழன், தனசேகரன் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் அ.சீனிவாசன் கண்டன உரையாற்றினார். இந்த ஆர்ப்பாட்டத்தில் 400க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். சிதம்பரம் சீர்காழி பிரதான தேசிய நெடுஞ்சாலையில் வாகனங்கள் சம்பித்தது.

## ரூ.5 கோடி ரூபாய் மதிப்புள்ள சாலைகளை அமைத்ததில் முறைகேடு

### நடவடிக்கை எடுக்கக் கோரி நகராட்சி ஆணையாளரிடம் மனு

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி ஜீவா நகர் புறநகர் பகுதியில் மக்களே வசிக்காத, வீடுகளே இல்லாத இடத்தில் ரூ.5 கோடி ரூபாய் மதிப்புள்ள சாலைகளை அமைத்ததில் முறைகேடுகள் நடைபெற்றுள்ளது. வீட்டு மனை விற்பனையாளர்களுடன், நகராட்சி அதிகாரிகள், ஒப்பந்தக்காரர் என கூட்டணி அமைத்து தரமற்ற சாலைகளை உருவாக்கி கோடிக்கணக்கான ரூபாயை விரயம் செய்தவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி அனைத்து கட்சிகள் சார்பில் பரமக்குடி நகராட்சி அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்துவதென முடிவு செய்யப்பட்டு அதன் அடிப்படையில் கோரிக்கை மனு ஆணையாளர் வசம் வழங்கப்பட்டது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நகர் செயலாளர் என்.எஸ்.பெருமாள் உள்ளிட்ட பலர் இதில் கலந்து கொண்டனர்.

## ஜனசக்தி பேப்பர் – காலண்டர்




மணப்பாறை கோவில்பட்டி சாலையில் உள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் இயங்கும் கே.டி.கே. தங்கமணி அரங்கில் ஏ.ஐ.டி.யூ.சி. போக்குவரத்து கழகம் கும்பகோணம் கோட்டத்தில் பணி புரிந்து ஒய்வு பெற்றோர் சங்க கூட்டத்தில் ஜனசக்தி பேப்பர் காலண்டரை ஏ.ஐ. டி.யூ.சி மாவட்ட துணைச் செயலாளர் சுப்ரமணியன் வழங்கினார் இவ் நிகழ்வில் மாவட்ட ஜனசக்தி பொறுப்பாளர் ஜனசக்தி உசேன் உடன் பங்கேற்றார்.

# எண் வலிச்சாலை

சமகால நிகழ்வுகளையும் கடந்தகால வரலாற்று நிகழ்வுகளையும் இணைத்து வரலாற்று புனைவு இலக்கியமாக எண் வலிச் சாலை என்கிற இந்த சிறுகதைத் தொகுப்பை அண்டனூர் சுரா எழுதியுள்ளார். இதில் எளிய மனிதர்களின் வேதனைகளும், வலிகளும் இடம் பெற்றிருக்கிற அதேசமயத்தில், மேட்டுக்குடி மனப்பாங்கும், அதிகாரத்தில் இருப்பவர்களின் பரிவை போன்ற பாசாங்குகளும் இடம்பெற்றிருக்கிறது.

'கதை முகம்' என்கிற நுழைவு வாயிலே மிக அருமை, சாலைகள் நேராக இருக்கிறதா என்பதில் செலுத்திய கவனத்தை. அந்த சாலை வழிகளில் வாழ்கிற மக்களின் வாழ்க்கை நேராக இருக்கிறதா என்பது குறித்து எந்த மாமன்னர்களும், எந்த மந்திரிகளும் யோசிப்பதில்லை என்பதை மிகத் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளது. பிரான்ஸ் தேசத்து லூயியைப் போலவே, மக்களை பற்றி கவலை கொள்ளாத. மாமன்னர்கள் தான் உலகம் முழுவதும் பரவி இருக்கிறார்கள். ஆட்சியாளர்கள் என்கிற பெயரில் மன்னர்கள் செய்கிற எதுவும் சரியாகவே இருக்கும் என்கின்ற மனநிலையை மக்களுக்கு உருவாக்க நினைக்கிறார்கள். காலியான அரசாங்க கஜானாவை பற்றி கவலைப்படுகிறார்கள் காலியான மக்கள் வயிற்றை பற்றி கவலைப்படுவதில்லை. இதனால் தான் ஏழைகளின் குடிசைகளை அப்புறப்படுத்தி எட்டு வழி சாலைகள் உருவாகின்றன. மக்கள் ஒட்ட சுரண்டப்படுகிறார்கள் என்பதை என் வலி சாலை கதை பேசுகிறது. நாயை சுட்டாலும் சட்டப்படிதான் சுடவேண்டும் என்பது பிரிட்டிஷ் அரசின் ராஜ நீதி.




ஆனால் மனிதர்களை சுடும் அதிகாரம் அரசு அதிகாரிகளுக்கு எப்படி வருகிறது. மனிதர்களை பறவைகளைப் போல சுட்டுக் கொள்வீர்களா என வெள்ளை அதிகாரிகளை கேள்விகளால் துளைத்து எடுக்கிறார் ஒரு வெள்ளை நீதிபதி.

ஆஹா ! இவர் அன்றோ நீதிபதி என நாம் ஏமாந்து இருக்கிற சமயத்தில் தான். தவறு இழைத்த அதே அதிகாரிக்கு பதவி நீட்டிப்பு வழங்கி தனது பாசாங்கை பள்ளிக்க செய்கிறார் வெள்ளை நீதிபதி "நிறுத்தக்குறி" கதையில். எத்தனை பெரிய அதிகாரியாக இருந்தாலும், கீழ்சாதி காரருக்கு இந்த சமூகத்தில் தங்குவதற்கு வீடு கூட கிடைக்காது என்பதை "பசலி" என்கிற கதையில் எழுதி உள்ளார். பஞ்சமன் எனும் அந்த தாசில்தார் பாவப்பட்ட பஞ் சமர்களின் வாழும் சாட்சியாக அந்த கதையில் வலம் வருகிறார். சொல்ல முடியாத அந்த துயரத்தை வார்த்தையால் வடித்திருக்கிறார். அண்டனூர் சுரா எண் வலிச்சாலையை படித்தால் எல்லோருக்கும் மனம் வலிக்கவே செய்யும். இந்நூலை அனைவரும் வாங்கிப் படியுங்கள். **– சமரன்**

| | | |
|---|---|---|
| நூலாசிரியர் | : | அண்டனூர் சுரா |
| வெளியீடு | : | நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் நிறுவனம் 41b, சிட்கோ இன்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை-50, போன்: 044 26251968 |
| பக்கங்கள் | : | 94 விலை : ரூ.80 |

## நூல் நயம்

# காகிதம்

நெகிழி இல்லாத உலகம் படைக்க வேண்டும் என்று நினைக்கிறோம். அதேபோன்று காகித இல்லாத உலகம் சாத்தியமா?. கதை, கவிதை, நாடகம்,புதினம், போன்றவற்றை நாம் காகிதத்தில் தானே படித்தோம். அரசு ஆணைகள், கடிதங்கள்,சுற்றறிக்கைகள், உத்தரவுகள் அனைத்தும் காகிதத்தில்தானே வெளியிடப்பட்டன. காகிதங்கள் இல்லாமல் இவை அனைத்தும் சாத்தியமா? என்கிற கேள்வியும் எழுகிறது.

காகிதப் பணம் தான், பண்ட பரிவர்த்தனைக்கு அடிப்படையாக இருந்தது. இனி பணம்மற்ற பரிவர்த்தனை பற்றி பேசப்படுகிறது. இதன் பெயர்தான் டிஜிட்டல் பரிவர்த்தனை. நேற்று ஒருவர் கையில், இன்று நமது கையில், நாளை யாருடைய கையிலோ என்று சுற்றி சுழன்ற பணம். இனி கணவாய்,கற்பனையாய் போய்விடுமோ தெரியவில்லை. ஓலைச்சுவடிகளில் தனி நபருடைய உடமையாக இருந்த கல்வி, பலருக்கும் வந்தது இந்த காகிதத்தால் தான். எழுதுவதும்,படிப்பதும், பாதுகாப்பதும்,நகலெடுப்பதும் காகிதம் கண்டுபிடிக்கப்பட்டதால் எளிதானது. ஆவணப்படுத்துவதும், சொத்துக்களைப் பாதுகாப்பதும், பதிவதும் மிக சாதாரணமாக மாறியது காகிதத்தால் தான். காகிதம் கண்டுபிடிக்கப்பட்டு 1200 ஆண்டுகளுக்கு பின்னால் தான் இந்தியாவில் அதன் உபயோகம் வந்தது. அதுவரை அது சிலரிடம் ரகசியமாகவே இருந்தது. காகிதத்தின் பயன்பாடு இந்தியர்களுக்கும், தமிழர்களுக்கும் முதலிலேயே தெரிந்திருந்தால். நம்முடைய அறிவியல் அறிவும், மருத்துவ முறைகளும் காப்பாற்றப்பட்டிருக்கும். நகர்ப்புற வடிவமைப்பு,கட்டடக் கலை,கணிதம், வானியல்,மண்ணியல்,வேளாண்மை,கால்நடை இயல் போன்றவற்றில் நாம் உலகத்திற்கு வழிகாட்டுகிற அளவிற்கு உயர்ந்து இருக்க முடியும்.




பல தமிழ் இலக்கியங்களை மண் கொண்டு போகவும், கடல் கொண்டு போகவும் விட்டு இருக்க வேண்டியதில்லை. அவற்றை காப்பாற்றியிருக் கலாம். பல மின்னணு சாதனங்கள் புழக்கத்திற்கு வந்துவிட்ட போதிலும், புத்தகத்தை வாசிப்பது போல கணினியில் எல்லோராலும் எளிதாக வாசித்து விட முடிவதில்லை. முக்கியமான செய்திகளை குறிப்பெடுக்க காகிதத்தையே பயன்படுத்த வேண்டி இருக்கிறது.

இன்றைய சூழலில் காகிதத்தை மிகவும் சிக்கனமாகவும், பொறுப்போடும் பயன்படுத்த வேண்டியதாக இருக்கிறது. அவசியமற்று காகிதத்தை பயன்படுத்தும் போதெல்லாம் வனங்களுக்கும், மரங்களுக்கும் சேதத்தை விளைவிக்கிறோம் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். தேவையற்ற முறையில் காகிதத்தை வீணாக்கக்கூடாது. என்று 'காகிதம்' என்கிற இந்த புத்தகத்தில் இறையன்பு அவர்கள் எழுதியுள்ளார் . வண்ணப் படங்களுடன் இந்த புத்தகம் வெளிவந்துள்ளது.காகிதத்தை அறிந்துகொள்ள நாம் அனைவரும் இந்த புத்தகத்தை வாசிக்க வேண்டும்.

**– இன்சுவை பாரதி**

| | | |
|---|---|---|
| நூலாசிரியர் | : | வெ. இறையன்பு |
| வெளியீடு | : | நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் நிறுவனம் 41b, சிட்கோ இன்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை-50, போன்: 044 26251968 |
| பக்கங்கள் | : | 30 விலை : ரூ.50 |

செய்தித்தொகுப்பு: அருண் அசோகன்

**சுழலும் உலகம்**

## ஆணாதிக்க சமுதாயத்தை மட்டுப்படுத்தும்

# கலாச்சாரப் புரட்சிக்கான ஆண்டு




## பொலிவிய இடதுசாரி அரசு அனுசரிக்க முடிவு

2022 ஆம் ஆண்டை "ஆணாதிக்க சமுதாயத்தை மட்டுப்படுத்தும் கலாச்சாரப் புரட்சிக்கான ஆண்டு" என்று அனுசரிக்கப்ப போவதாக பொலிவியாவின் இடதுசாரி அரசு அறிவித்துள்ளது. தென் அமெரிக்க நாடுகளில் பொலிவியா வில்தான் பெண்கள் கொலை செய்யப்படுவது அதிகமாக உள்ளது. அதோடு, இங்கு தான் சிறப்பான சட்டப் பாதுகாப்பும் ஏற்படுத்தப் பட்டுள்ளது. இருக்கும் சட்டவிதிகளின்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டாலே, இந்தப் பிரச்சனையில் பெரும் முன்னேற்றம் கண்டுவிட முடியும். ஆனால் அதைச் செய்ய முடியவில்லை என்று ஐக்கிய நாடுகள் சபையின் அலுவலரான நிட்யா பெசன்டெஸ் கூறியுள்ளார்.

கடந்த ஆண்டில் மட்டும் 107 பெண்கள் பொலிவியாவில் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று குற்றங்கள் தொடர்பான அரசு ஆவணம் தெரிவிக்கிறது.

குடும்ப வன்முறையால் கடந்த ஆண்டு பாதிக்கப்பட் டவர்கள் பத்து பேரில், 9 பேர் பெண்களாகவே இருந்தனர். இந்தப் புள்ளி விபரங்கள் எங்களை எச்சரிக்கை செய் கின்றன. தொடர் நடவடிக்கைகள் தேவை என்பதை இவை வலியுறுத்துகின்றன. கடந்த ஆண்டில் நீதித்துறை அமைச்சகத்திடம் வந்த புகார்களில் 50 விழுக்காடு பெண்களுக்கு எதிரான குடும்ப வன்முறைகள் தொடர்பு டையதாகவே இருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

பாலின சமத்துவத்தை நடைமுறைப்படுத்திட பொலிவிய அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக, 2022 ஆம் ஆண்டை "ஆணாதிக்க சமுதாயத்தை மட்டுப்படுத்தும் கலாச்சாரப் புரட்சிக்கான ஆண்டு" என்று அனுசரிக்கப்பபோவதாக பொலிவியாவின் இடதுசாரி அரசு அறிவித்துள்ளது. இதை வரவேற்புக்குரிய நடவடிக்கையாக உலக நாடுகள் கருதுகின்றன.

## அரசின் கொள்கைகளுக்கு எதிராக

# கூட்டுப் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும்

**ஜப்பான் கம்யூனிஸ்ட் கட்சி அறைகூவல்**

ஜப்பான் நாடாளுமன் றத் தேர்தலில் ஏற்படுத் தப்பட்ட எதிர்க் கட்சிகளு டனான கூட்டணியில் ஜப்பான் கம்யூனிஸ்ட் கட்சி தொடரும் என்று அக்கட்சியின் துணைத் தலைவர் தமுரா டோமோகோ உறுதியளித்துள்ளார். புத்தாண்டிற்கான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டு இணையதள வானொலியில் உரையாற்றுகை யிலேயே அவர் இதைக் குறிப்பிட்டார். நாடாளுமன்றத் தேர்தலில் எதிர்க்கட்சிக் கூட்டணி தோல்வியடைந்து விட்டதால், கூட்டணி தேவை யில்லை என்ற கருத்துக்களை அவர் நிராகரித்தார். ஒருவேளை கூட்டணி ஏற்படாமல் இருந்திருந்தால் தேர்தல் முடிவுகள் படுமோசமாக இருந்திருக்கும் என்று அவர் தெரிவித்தார்.

ஜப்பான் கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்தவரை, அரசின் கொள்கைகளுக்கு எதிராகக் கூட்டான போராட்டங்களை முன்னெடுத்துச் செல்வதில் உறுதி யாக இருக்கிறது. அதோடு, ஆளும்கட்சி மற்றும் அதன் கூட்டாளிகளின் பலம் அதிகரிப்பதைத் தடுக்க வேண்டியுள்ளது. அதனால் வர விருக்கும் மேலவைத் தேர்தலில் தற்போதுள்ள எதிர்க்கட்சிக் கூட்டணி தொடர வேண்டும். எதிர்க்கட்சிகளின் ஒன்றுபட்ட முயற்சிகளே ஆளும் கட்சியின் மக்கள் விரோதக் கொள்கை களைத் தடுக்கும் என்றும் அவர் கூறினார். அக்டோபர் 2021ல் நடந்து முடிந்த பொதுத் தேர்தல் பற்றிப் பேசிய தமுரா டொமோகோ, "கூட்டணிப் பேச்சுவார்த்தை முடிந்து, பொது வான கொள்கைகளை இறுதிப்படுத்தி விட்டு தேர்தல் களத்தில் இறங்கிப் பணி யாற்ற ஒருமாத காலம் மட்டுமே இருந்தது. கூட்டணி வேட்பாளர் களுக்கும். பொதுவான கொள்கை களுக்கும் ஆதரவு திரட்டுவதில் பல்வேறு இடர்பாடுகள் ஏற்பட்டன. அந்த அனுபவங்களைக் கொண்டு பார்த்தால், மக்கள் விரோத அரசை அகற்ற வேண்டுமென்றால் எதிர்க்கட்சிகளின் இணைந்த செயல்பாடு அவசியம்" என்றார். இது குறித்து எதிர்க்கட்சிகளோடு ஜப்பான் கம்யூனிஸ்ட் கட்சி பேச்சு வார்த்தை நடத்தவுள்ளது. ஜப்பான் நாட்டின் பொருளாதாரத்தை மீட்க ஆட்சி மாற்றம் தேவைப்படுகிறது என்பதை கட்சி உணர்ந்துள்ளதாகக் கூறிய தமுரா டொமோகோ,

"ஜப்பானை நெருக்கடியில் தள்ளும் பல்வேறு அம்சங்களை அரசியலமைப்பு சட்டத்தில் இணைக்கும் முயற்சிகளைக் கடுமையாக எதிர்ப்போம்" என்று தெரி வித்தார்.

# மக்கள் நலன் காக்கும் சோசலிச வியட்நாம்

கோவிட் 19 தொற்றால் பாதிப்பை சந்தித்த வியட்நாமின் பொருளாதாரம் மீண்டு வருவதற்கான அறிகுறிகள் தென்படுவதாக சர்வதேச நிதியத்தின்(ஐ.எம்.எப்) தென் கிழக்கு ஆசியப் பிரதிநிதி பிரான்கோயிஸ் பைன்சாட் தெரிவித்துள்ளார்.

மக்களில் எந்தப் பிரிவினருக்கு உதவி தேவைப்படுகிறதோ அவர்களைக் குறி வைத்து வியட்நாம் அரசு பல்வேறு திட் டங்களை செயல்படுத்தி வருகிறது. தொற்றுக் காலத்தில் ஏற்பட்ட பாதிப்புகளை குறைக்கச் செய்வதற்காக அவர்க ளுக்கான நலத்திட்டங்களை மாற்றி அமைத்தும் வருகிறார்கள். நீண்டகால ஆதரவு அவர்களுக்குக் கிடைக்கும் வகையில் இந்தத் திட்டங்களில் மாற்றங்கள் இருக்கும். இதையும் பிரான்கோயிஸ் சுட்டிக்காட்டியுள்ளார்.

வியட்நாம் தலைநகர் ஹனோயில் நடை பெற்ற வியட்நாம் பொருளாதார அமைப்பு 2021 மாநாட்டில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது பற்றி மேலும் பேசிய அவர், "இந்த பொரு ளாதார மீட்சி நான்காவது காலாண்டில் துவங்கியிருக்கிறது. நடப்பாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தி 2.5 விழுக்காடாகவும், 2022 ஆம் ஆண்டில் 6.6 விழுக் காடாகவும் இருக்கும். மருத்துவ நலனை மேம்படுத்துவது மிகவும் முக்கியம். பொருளாதார மீட்சிக்கு அது முக்கியமான காரணியாக அமையும்" என்றார்.

இதுபற்றி மேலும் பல ஆலோசனைகளை அவர் தெரி வித்துள்ளார். மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட குடும்பங்க ளுக்கு வியட்நாம் அரசு சில குறிப்பான திட்டங்களை நடை முறைப்படுத்தி வருகிறது.

இதைப் பாராட்டிய அவர், இத்தகைய செயல்பாடுகள் தற் காலிகமாக இருந்தாலும், முழு அடைப்பிலிருந்து நாடு வெளியேறி வரும் நிலையில் இவை மிகவும் அவசி யமானவையாகும். கடுமையாகப் பாதிக்கப்பட்ட நிறுவ னங்களுக்கும் இந்த உதவிகள் தரப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார். வேலைவாய்ப்புகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களில் வேலை யிழப்புகள் தொற்றுக் காலத்தில் ஏற்பட்டன. இதைச்சுட்டிக்காட்டிய பிரான்கோயிஸ், வியட்நாம் தனது இலக்குகளை அடைவது ஒன்றும் கடினமானதல்ல என்று குறிப்பிட்டார். இதில் பேசிய வியட்நாம் பொருளியல் மையத்தின் இயக்குநர் குவாங் துவான், "பொருளாதார மீட்சி மற்றும் தொடர் வளர்ச்சிக்கான திட்டங்களை வியட்நாம் செயல்படுத்துகிறது. சில தடைகள் இருந்தாலும் பெரிய ஆதரவை எதிர்பார்த்து நிறுவனங்கள் காத்திருக்கின்றன. வட்டி விகிதம், மருத்துவத்துறையில் அரசு முதலீடு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் வளர்ச்சி, பொதுவான அரசு முதலீடு உள்ளிட்ட வற்றில் கவனம் செலுத்த வேண்டும்" என்று குறிப்பிட்டார்.



# மழை பாதிப்புக்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டும்

## சட்டமன்றத்தில் டி.இராமச்சந்திரன் எம்.எல்.ஏ.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரை, அரசின் கொள்கைகளையும், சமூகநீதி மற்றும் மாநில உரிமைகளையும் உயர்த்திப் பிடித்து பிரகடனப்படுத்தும் உரையாக அமைந்திருப்பதை இந்திய கம்யூ னிஸ்ட் கட்சி சார்பில் வரவேற்கிறேன்.**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதவியேற்ற நொடியிலிருந்து அரசு இயந்திரத்தை முடுக்கிவிட்டு கொரோனா பெருந்தொற்றை கட்டுப்படுத்தும் வகையில் மருத்துவ கட்டமைப்புகளை வலுப்படுத்தி மாநிலம் முழுவதிலும் தடுப்பூசி பணிகளை மக்கள் இயக்கமாக மாற்றி கொரோனா இரண்டாம் அலையை திறம்பட கையாண்டு இன்றைக்கு இந்திய நாடு மட்டுமல்ல, உலக நாடுகளே திரும்பி பார்க்கும் அளவிற்கு நம்முடைய முதலமைச்சர் அவர்களின் செயல்பாடுகள் கொரோனா கட்டுப்பாட்டில் வந்தது என்பதை மனதார பாராட்டுகிறோம்.

அதேபோல இன்றைக்கு தெற்கு ஆசியாவிலேயே முதலீட்டுக்கு உகந்த மாநிலமாக தமிழகத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாற்றி ஆட்சி பொறுப்பேற்ற ஏழே மாதத்தில் மூன்று முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்தி 109 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் மூன்று லட்சம் பேர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கும் திட்டம் பாராட்டுக்குரியது.

அரசு பள்ளிகளை நவீனமயமாக்கும் திட்டம், 10 ஆண்டுகளில் குடிசைகளற்ற மாநிலமாக தமிழகத்தை மாற்றும் முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்கு திட்டம், சென்னை வெள்ளத்தை தடுக்க 109 கோடி ரூபாய் ஒதுக்கீடு போன்ற பல்வேறு திட்டங்கள் இந்த ஆளுநர் உரையில் இடம்பெற்றிருப்பதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வரவேற்கிறேன்.

சமீபத்தில் பெய்த வடகிழக்கு பருவமழையில் பாதிப்புகள் அதிகமாக உள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் டெல்டா மாவட்டங்கள் உள்பட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொட்டும் மழையிலும் ரெயின் கோட் அணிந்து முழங்கால் அளவு தண்ணீரில் பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்து ஆறுதல் கூறி நிவாரண பணிகளை போர்க்கால அடிப்படையில் மேற்கொண்டிருப்பதை மனப்பூர்வமாக பாராட்டுகிறேன்.

ஆகவேதான் இன்றைக்கு மக்கள் மனதில் இடம்பெறுகின்ற முதலமைச்சராக நம்முடைய முதலமைச்சர் இருந்து கொண்டிருக்கிறார். அதேபோல இன்றைக்கு டெல்டா மாவட்டங்கள் குறிப்பாக சம்பா சாகுபடிக்கு தயாராக இருந்த பயிர்கள் இன்றைக்கு மழையால் அழுகிப்போய்விட்டன. எனவே ஒரு ஏக்கருக்கு ரூ.30,000 நிவாரணமாக வழங்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை வைத் திருக்கிறார்கள். இதனை விவசாயிகள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நாளை பதிலுரையில் விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று ஒரு ஏக்கருக்கு ரூ 30000 அரசு வழங்க வேண்டும்.

**அதுபோல் மானாவாரி பயிர்கள், அவரை, துவரை, கடலை, ராகி போன்ற பயிர்களும் அதுபோல் மர வள்ளிக் கிழங்கு, வாழை, கரும்பு போன்ற பயிர்களும் இந்த மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு இருக்கின்றன மானாவாரி பயிர்களுக்கு நிவாரணமாக ஒரு ஏக்க ருக்கு ரூ 30 ஆயிரம் வழங்க வேண்டும்.**

அதுபோல் கால் நடைகள் கோமாரி நோய் மற்றும் மழையால் உயிரிழந்திருக்கின்றன. உயிரிழந்த கால்நடைகளுக்கும் அரசு நிவாரணத் தொகை வழங்க வேண்டும். மழைக்காலத்தில் விவ சாய தொழிலாளர்கள் வேலை இழந்து பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் அவர்களுக்கும் ரூ.10,000 நிவாரணமாக அரசு அறிவிக்க வேண்டும்.

மழையால் வீடுகள் இடிந்து சேதமடைந்து இருக்கின்றன. அதற்கு அரசு நிவாரணம் வழங்கியிருக்கின்றது. புறம்போக்கு இடத்தில் விழுந்த வீடுகளுக்கு நிவாரணம் வழங்கப்படவில்லை அவர்களுக்கும் நிவாரணம் வழங்கி இடிந்து விழுந்த வீடுகள் அனைத்தும் கான்கிரீட் வீடுகளாக கட்டிக் கொடுக்கப்பட வேண்டும் என்று அரசை பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு நீட் தேர்வு தமிழகத்தில் ஏழை எளிய கிராமப்புற மாணவர்கள் உயர்கல்வி படிக்கும் வகையில் இந்த சட்டமன்றத்தில் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ஆளுநருக்கு அனுப்பப்பட்டு நான்கு மாதங்களாக அந்த தீர்மானம் கிடப்பில் போடப் பட்டிருக்கிறது. 7 கோடி மக்களின் பிரதிநிதித்துவம் தான் இந்த சட்டமன்றத்தில் இயற்றப்பட்ட தீர்மானம். அதுபோல் இன்றைக்கு தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்துறை அமைச்சரை சந்தித்து நீட் தேர்வு குறித்து விலக்கு அளிப்பதற்காக நான்கு நாட்களாக டெல்லியில் நேரம் ஒதுக்கி தர கேட்டும் இன்றுவரை நேரம் ஒதுக்காமல் தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்களை அவமதிப்பது என்பது தமிழகத்தை அவமதிப்பதாகும். இதனை இந்த அவை வாயிலாக வன்மையாக கண்டிக்கிறோம்.

மேகதாதுவில் காவிரியின் குறுக்கே அணை கட்டப்படும் என்று எதிரும் புதிருமாக உள்ள அரசியல் கட்சிகள் கர்நாடகாவில் ஒன்று திரண்டு இருக்கின்றன.

காவிரியின் குறுக்கே அணை கட்டப்பட்டால் டெல்டா மாவட்டங்கள் பாலைவனமாக மாறும் அபாயம் உள்ளது. எனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலையிட்டு உடனடியாக மேகதாதுவில் அணை கட்டுவதை தடுத்து நிறுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தொடர்ந்து இலங்கை அரசு தமிழக மீனவர்களை சிறை பிடிப்பதும் சித்ரவதைக்கு ஆளாக்குவதும் அவர்களின் படகுகளை சேதமாக்குவதும் தொடர்கதையாக இருக்கிறது. இதற்குத் தீர்வு காணும் வகையில் ஒன்றிய அரசை வற்புறுத்தி நிரந்தர தீர்வை ஏற்படுத்த வேண்டும் என்று இந்த நேரத்தில் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

பேரறிவாளன் உட்பட 7 பேர் விடுதலை செய்ய சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி ஜனாதிபதி அவர்களுக்கு அனுப்பப்பட்டு இரண்டு ஆண்டுகளாக நிலுவையில் இருக்கிறது. உச்சநீதிமன்றம் மாநில அரசுகளே முடிவெடுத்துக் கொள்ளலாம் என்று தீர்ப்பு வழங்கி இருக்கின்றது. எனவே 7 பேர் விடுதலை குறித்து சட்ட வல்லுனர்களை ஆலோசித்து மாநில அரசு நல்ல முடிவு எடுக்க வேண்டும் என்று மாண்பு மிகு முதலமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன்.

ஆன்லைன் சூதாட்டத்தை தடுக்கும் வகையில் புதிய திருத்த சட்டத்தை கொண்டு வந்து அதற்கு முற்றுப்புள்ளி வைத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன் றியை தெரிவித்துக் கொண்டு எனது தளி சட்டமன்றத் தொகுதியில் நேற்றைக்கு கண்டகாணபள்ளி என்ற கிராமத்தில் எல்லப்பா என்ற விவசாயி ஆடு மேய்த்துக் கொண்டிருக்கும் போது யானை தாக்கி உயிர் இழந்தி ருக்கிறார்.

அவரது குடும்பத்திற்கு ரூ 10 லட்சம் முதலமைச்சரின் நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட வேண்டும். அதேபோல அவருடைய குடும்பத்திற்கு அரசு வேலை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தளி தொகுதியில் தொடர்ந்து வன விலங்குகள் மற்றும் மனித உயிரிழப்புகள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன அதைத் தடுப் பதற்கு 100 கிலோ மீட்டர் தூரத்திற்கு சோலார் மின்வேலி அமைத்து வன விலங்குகள் மற்றும் மனித உயிர் இழப்புகளை தடுக்க இந்த அரசு போதிய நிதியை ஒதுக்க வேண்டும் என்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி கூறி என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி, வணக்கம்.

## ஓசூரை தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் அவர்களே!**

**கேள்வி:** கிருஷ்ணகிரி மாவட்டத்தை இரண்டாக பிரித்து ஓசூரை தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் உருவாக்க அரசு ஆவன செய்யுமா? ஆம் எனில், எப்போது?

**பதில்:** கிருஷ்ணகிரி மாவட்டத்தை இரண்டாக பிரித்து, ஓசூரை தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் உருவாக்குவது தொடர்பாக அரசாணை நிலை எண் 279 வருவாய்த்துறை நாள் 9.6.2003 இன் படி நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்கள் பூர்த்தி ஆகாததால் ஓசூரை தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் உருவாக்கும் சாத்தியக் கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர் களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

**கேள்வி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம் ஒரு காலத்தில் புகழ்பெற்ற விஜய நகரம் மன்னர்களில் ஒருவரான கிருஷ்ணதேவராயர் சாம்ராஜ்ஜியத்தின் ஆளுகையின் கீழ் இருந்தது. இன்றைக்கு கிருஷ் ணகிரி மாவட்டம் 5343 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் அமைந் துள்ள பெரிய மாவட்டம். தேன்கனிக்கோட்டை, அஞ்செட்டி வட்டங்களில் உள்ள நாற்றம்பாளையம் கொடகரை போன்ற மலை கிராமங்களில் இருந்து மாவட்ட தலைநகருக்கு வந்து மாவட்ட ஆட்சித் தலைவரை சந்திக்க வேண்டுமென்றால் 150 கிலோ மீட்டர் தூரம் பயணித்து 3, 4 பேருந்துகளில் மாறிச் செல்ல வேண்டி இருக்கிறது. அதற்கு ஒரு நாள் தேவைப்படுகிறது ஆகவே பொதுமக்கள் மற்றும் நிர்வாக நலன் கருதி அஞ்செட்டி, தேன்கனிக்கோட்டை, சூளகிரி, ஓசூர் வட்டங்களை இணைத்து ஓசூரை தலைமையிடமாக கொண்டு புதிய மாவட்டமாக உருவாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**பதில்:** அரசின் வழிகாட்டு முறைப்படி மாவட்டம் பிரிப் பதற்கு வழி இல்லை ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு செல்கிறேன்.

**கேள்வி:** இன்றைக்கு ஆசியாவிலேயே வேகமாக வளர்ந்து வருகின்ற தொழில்நகரங்களில் 13வது இடத்தில் ஓசூர் இருக்கிறது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட ஓசூரில் 3500 ஏக்கர் பரப்பில் சர்வதேச விமான நிலையம் அமைப்பதற்காக ஜிமிஞ்சிளி மூலமாக ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டிருக்கின்றன. ஆகவே தொழில் வளர்ச்சி மற்றும் பொதுமக்களின் நலனைக் கருதி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதுகுறித்து மறுபரிசீலனை செய்து ஓசூரை மையமாகக்கொண்டு புதிய மாவட்டத்தை உருவாக்க வேண்டும் என்று தங்கள் வாயிலாக கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுவதை மாண்புமிகு முதல மைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டுதான் இருக்கி றார்கள். தேவை இருப்பின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு சென்று தகுந்த நடவ டிக்கை எடுக்கப்படும்.

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மூத்த தோழர் கு.பழனிச்சாமி மூன்றாம் ஆண்டு நினைவு அஞ்சலி

மறைவு 02.01.2019



மனைவி: லேட். கு.மீனாட்சி அம்மாள்

மகன்: கு.ப.ராமகிருஷ்ணன் - இரா.இந்துராணி

(சுந்தரம் சர்ஜிகல்ஸ்)

மகள்கள்:

லேட். பொ.செண்பகவள்ளி – ம.பொன்னுக்காளை

க.தமிழ்செல்வி – கலுசுலிங்கம் (R.90 C.W.G.S)

பேரன், பேத்திகள்

பொ.ஆனந்தமுருகன் B.Com – ஆ.குருதேவி

பொ.சுரேஷ் M.Sc – சு.முத்துமாரியம்மாள் B.Com

க.அருணா B.Com – ஜெ.கார்த்திகேயன் DCE

கா.விஜயலட்சுமி B.Com(CA) – வே.காளிமுருகன் DCE

இரா.பழனிச்செல்வி B.Com(CA) Diploma (yoga)

இரா.திவ்யா

கொள்ளுபேரன் பேத்திகள்

ஆ.காளிமுத்து, ஆ.செழியன், சு.ராகவ், சு.சாதனா, கா.பிரியதர்ஷினி, கா.வேதஸ்ரீ

மற்றும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தோழர்கள், சங்கிலிக்காளை நினைவுப் படிப்பகம், சத்திரப்பட்டி, இராஜபாளையம் வட்டம், விருதுநகர் மாவட்டம்

JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201 Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023 WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
Posted on 15.01.2022 at Egmore RMS 1 / Patrika Channel. Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57

## ஜனநாயகத்தை காப்பாற்ற

# மக்கள் போராட முன்வரவேண்டும்

## கோவையில் டி.ராஜா பேட்டி




**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டி.ராஜா கோவை ஜீவா இல்லத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் பேசியதாவது, “இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய நிர்வாகக் குழு மற்றும் தேசியக் குழு கூட்டங்கள் இம்மாதம் 26,27,28 தேதிகளில் கோவையில் நடைபெற இருக்கிறது.**

கட்சியின் மாநாடு இந்த ஆண்டு அக்டோபர் 14,15,16,17,18 தேதிகளில் விஜயவாடாவில் நடைபெற உள்ளது. விஜயவாடாவில் நடைபெறும் மாநாட்டில் முன்வைக்கப்படும் அரசியல் நிலைபாடுகள் குறித்த அறிக்கை தயாரிக்கப் படவுள்ளதால், கோவையில் நடைபெற உள்ள தேசிய கவுன்சில் கூட்டம் முக்கியத்துவம் பெறுகிறது.

கோவையில் நடைபெறும் தேசிய கவுன்சில் கூட்டம் அரசியலில் நிகழ்ந்துள்ள சவால்கள், சோதனைகள் ஆகியவற்றை மதிப்பீடு செய்து, நிறைவாக வழிகாட்டுதல் என்ன? என்பதை விவாதித்து அறிக்கை முன்வைக்கும்.

நாட்டில் பி.ஜே.பி., ஆர்.எஸ்.எஸ். அமைப்புகள் மூர்க்கத்தனமாக செயல்படத் தொடங்கி உள்ளது. அவர்களது அரசியல் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ள மக்களைப் பிளவு படுத்தி வருகிறார்கள்.

டாக்டர் அம்பேத்கர் நாட்டின் அரசியல் சாசனத்தை உருவாக்கும் போது இந்தியா மதசார்பற்ற ஜனநாயக குடியரசு என்று குறிப்பிட்டார். ஆனால் மோடியும், ஆர்.எஸ்.எஸ்.சும் இந்திய அரசை இந்து மதம் சார்ந்த அரசாக கட்டியமைக்க விரும்புகிறார்கள்.

நாட்டின் பிரதமர் என்கிற முறையில் மதம் சார்ந்த நிகழ்ச்சிகளில் அவர் கலந்து கொள்ளக் கூடாது. அவரது தனிப்பட்ட மத நம்பிக்கை என்பது வேறு, அரசு நிகழ்ச்சி என்பது வேறு.

அவர் உத்தரப் பிரதேசத்தில் நடந்த அரசு நிகழ்ச்சியில் தனது அரசு ஒரு மதம் சார்ந்த அரசாக வெளிப்படுத்திக் கொண்டார். இது அரசியல் சட்ட விரோதமானது ஆகும்.

பல மொழி, பல மதங்கள், பல கலாச்சாரம், பல்வேறு வரலாற்று பின்னணிகள் கொண்ட நாடுகளின் இணைப்புதான் இந்தியா, இதில் ஒரு மதம், ஒரு மொழியை கட்டாயமாக திணிக்க விரும்புகிறார்கள். அதற்காக ஆர்.எஸ்.எஸ்., பி.ஜே.பி. அமைப்புகள் மூர்க்கத்தனமாக செயல்பட தொடங்கி உள்ளார்கள். மக்களுக்கு எதிராக வெறுப்பையும், தாக்குதலையும் நடத்துகிறார்கள்.

கோவையில் கூட பள்ளிக் கூடங்களில் சாகா பயிற்சிகள் நடத்தப்படுகின்றன. சாகா பயிற்சி என்பது வன்முறைக்கு இளைஞர்களை தயார் படுத்துவதாகும்.

இது நாட்டு மக்கள் மத்தியில் அச்சுருத்தலை ஏற்படுத்தி இருக்கிறது. இதற்கு தமிழக அரசு இடமளிக்கக் கூடாது. உலக அளவில் பசி பட்டினி அதி கம் உள்ள நாடுகள் பட்டியலில் இந் தியா இடம் பிடித்துள்ளது. பசி பட்டினி இல்லாத நாடுகள் என்ற பட்டியலில் 101 வது இடத்தில் இந்தியா உள்ளது. வேலையின்மை கவலை அளிக்கிற வகையில் உள்ளது.

நாடாளுமன்ற மேலவை என்பது பல மாநிலங்களின் பிரதிநிதிகளை கொண்ட அமைப்பு, அது ஜனநாயகத்தின் ஒரு அங்கம். அது செயல்படாமல் முடங்கிப்போயுள்ளது. ஜனநாயகம் மிகப் பெரிய ஆபத்துக்குள்ளாகி உள்ளது என்பதைக் காட்டுகிறது.

நாட்டின் அரசியல் சட்டம் காப்பாற்றப்பட வேண்டும், ஜனநாயகம் காப்பாற்றப்பட வேண்டும், நாட்டின் ஒற்றுமை காப்பாற்றப்பட வேண்டும், இதற்காக மக்கள் முன்னின்று போராட வேண்டும்.

தமிழகத்தில் மதச்சார்பற்ற ஜனநாயக கூட்டணி ஏற்படுத்தப்பட்டு, அது வெற்றி பெற்று ஆட்சி அமைக்கப் பட்டுள்ளது.

ஸ்டாலின் தலைமையிலான இந்த அரசு எடுத்துவரும் நல்ல நடவடிக்கைகளை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஆதரிக்கிறது.

பிரதமர் தமிழகத்திற்கு வருவதால் அது அரசியல் ரீதியில் எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்திவிடாது. இது பெரியார் பிறந்த மண், பகுத்தறிவு இயக்கம் வேரூன் றிய மண். இதில் மோடியின் வருகை எவ்வித தாக்கத்தையும் உண்டு பண்ணிவிடாது.

இந்திய சீன எல்லையில் என்ன நடக்கிறது? என்பதை, பிரதமர் மோடி நாட்டு மக்களுக்கு தெளிவு படுத்த வேண்டும். அதற்கு அவர் கடமைப் பட்டவர்.

கம்யூனிஸ்ட் கட்சிகள் ஒன்றுபட வேண்டும் என்பது, எங்களது கட்சி தோழர். சி.ராஜேஸ்வரராவ் காலத்தில் 1986 ம் ஆண்டு கல்கத்தா மாநாட்டில் இருந்து வலியுறுத்தப்பட்டு வருகிறது.

இரு கட்சிகள் மட்டுமல்ல இடது சாரி கட்சிகள் அனைத்துமே ஒன்றுபட்டு செயல்பட வேண்டும். எப்போதுமே கூட்டு முயற்சிக்கு வலு அதிகம். அந்த வகையில் கம்யூனிஸ்ட் கட்சிகள் இணைந்தால் அது மக்கள் மத்தியில் பெரிய அளவிலான தாக்கத்தையும், நம்பிக்கையும் ஏற்படுத்தும்.

அதற்கு வரலாற்று நகர்வுகள் பதில் கூறும்‘‘, என்றும் டி.ராஜா கூறினார். இந்த பேட்டியின்போது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கோவை மாவட்ட செயலாளர் வி.எஸ்.சுந்தரம், மாவட்ட துணை செயலாளர்கள் ஆர்.தேவராஜ், சி.சிவசாமி ஆகியோர் உடன் இருந்தனர்.

## உ.பி. உள்ளிட்ட 5 மாநிலத் தேர்தல்களில் பாஜக தோற்கும்

### ● இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய பொதுச் செயலாளர் டி.ராஜா உறுதி

சென்னையில் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: இந்திய அரசியலமைப்புச் சட்டம், ஜனநாயக நெறிமுறைகள், கூட்டாட்சித் தத்துவத்தை தகர்க்கும் வகையில் மத்திய பாஜக அரசு தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. மாநில உரிமைகளை ஒவ்வொன்றாகப் பறிக்கிறது. அதிகாரங்களை மத்தியில் குவித்து மாநில மக்களின் உணர்வுகளுக்கு மாறாக செயல்படுகிறது.

மத்திய பாஜக அரசு கொண்டு வந்துள்ள புதிய கல்விக் கொள்கை,கல்வியை வணிகமயமாக்குவதோடு, கல்வியில் இதுவரை மாநிலங்களுக்கு இருந்த உரிமைகளைப் பறிக்கிறது. நாட்டின் சொத்தானபொதுத் துறை நிறுவனங்களை தனியார்மயாக்குவது தேச விரோதசெயலாகும். தனியார்மயாக்கும்போது மாநில அரசுகளை ஆலோசிக்காமல் தன்னிச்சையாக மோடிஅரசு செயல்படுகிறது. நீட் தேர்வில்இருந்து தமிழகத்துக்கு நிரந்தர விலக்கு அளிக்க வகை செய்யும்வகையில் சட்டப்பேரவையில் நிறைவேற்றிய மசோதாவை ஆளுநர் நிறுத்தி வைத்திருக்கிறார். நீட் தேர்வு தொடர்பாக தமிழக அனைத்துக் கட்சி எம்பி.க்கள் குழுவை மத்தியஅமைச்சர் அமித் ஷா சந்திக்க மறுத்திருக்கிறார். இவைகள் கண்டனத்துக்கு உரியன.

எனவே, அரசியலமைப்புச் சட்டத்தை பாதுகாக்க மோடி அரசு விரட்டப்பட வேண்டும். அதற்கு, மதச்சார்பற்ற, ஜனநாயக சக்திகள் ஒன்றுபட்டு செயல்பட வேண்டும்.

பாஜகவுக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழத் தொடங்கி விட்டனர். விரைவில் நடைபெறவுள்ள உத்தர பிரதேசம், உத்தராகண்ட், பஞ்சாப், கோவா, மணிப்பூர் ஆகிய 5 மாநில சட்டப்பேரவைத் தேர்தல்களில் பாஜக தோல்வி அடைவது உறுதி.

பஞ்சாபில் பிரதமர் மோடியின் பயணத் திட்டம் கடைசி நேரத்தில் மாற்றப்பட்டது ஏன் என்பது குறித்து பிரதமர் அலுவலகமும், உள்துறை அமைச்சகமும் விளக்கம் அளிக்க வேண்டும். இதற்கு பஞ்சாப் மாநில அரசை குறைகூறுவது ஏற்கத்தக்கது அல்ல.

இவ்வாறு அவர் கூறினார்.

இந்திய கம்யூனிஸ்ட் தேசிய நிர்வாகக் குழு உறுப்பினர் சி.மகேந்திரன், மாநில துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன், மாநிலசெயற்குழு உறுப்பினர் ந.பெரியசாமி உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

# நீட்தேர்வை ஒன்றிய அரசு திரும்பப் பெற வேண்டும்

## அனைத்து கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் டி.ராமச்சந்திரன் பேச்சு





**சென்னை தலைமை செயலகத்தில் நாமக்கல் கவிஞர் மாளிகையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற அனைத்து கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டு நீட் தேர்வுக்கு எதிரான இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கருத்துகளை பதிவு செய்தேன்.**

மருத்துவ படிப்பிற்கான நுழைவுத் தேர்வு, நீட் மட்டுமல்ல எந்த ஒரு உயர் கல்விக்கும் நுழைவு தேர்வு கூடாது என் பதே இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நிலைப்பாடு.

தமிழ்நாடு சமூகநீதியின் பிறப்பிடமாக திகழ்ந்து வருகிறது. மருத்துவ படிப்பிற்கான நுழைவுத்தேர்வில் ஒன்றிய அரசு நீட் தேர்வை திணித்திருப்பதால் தமிழ்நாட்டில் கிராமப்புற ஏழை, எளிய, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, பழங்குடி மற்றும் அரசு பள்ளி மாணவர்களின் மருத்துவக்கல்வி கனவு சிதைந்து போகிறது.

ஆகவே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த 13.09.2021 அன்று தமிழகத்திற்கு நீட் தேர்வில் இருந்து விலக்கு வேண்டுமென்று சட்ட முன் வடிவை கொண்டுவந்தார். அதை ஆளுநர் குடியரசுத் தலைவருக்கு கடந்த நான்கு மாதங்களாக அனுப்பாமல் உள்ளார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேரில் சந்தித்து வலியுறுத்தியும் கிடப்பில் போட்டுருப்பது தமிழக மக்களையும் மாணவர்களையும் அரசியல் சாசன சட்டத்தையும் அவமதிக்கும் செயல்.

தமிழ்நாட்டை சேர்ந்தநாடாளுமன்ற உறுப்பினர்கள் டெல்லியில் ஒன்றிய உள்துறை அமைச்சரை சந்திக்க காத்திருந்தும் அவர்களை பார்க்க அனுமதி வழங்காமல் இருந்தது தமிழக மக்களையும் மாணவர்களையும் அவமதிக்கும் செயல் இது மிகவும் கண்டனத்துக்குரியது.

மாநில அரசால் சட்டமன்றத்தில் இயற்றப்படுகின்ற சட்ட முன்வடிவுகள் மீது குறிப்பிட்ட கால அவகாசத்திற்குள் மாநில ஆளுநர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சமீபத்தில் சிம்லாவில் நடைபெற்ற சபாநாயகர்கள் மாநாட்டில் நம்முடைய சபாநாயகர் வலியுறுத்தி மாநில உரிமைகளுக்கு குரல் கொடுத்திருக்கிறார்.

ஒன்றிய அரசு மாநில அரசுகளை கலந்தாலோசிக்காமல் நீட் தேர்வை திணித்திருப்பது மாநில உரிமைகளுக்கும் சமூகநீதிக்கும் கூட்டாட்சித் தத்துவத்திற்கும் நேர் எதிரானது. ஆகவே நீட் தேர்வில் இருந்து சமூகநீதியை நிலைநாட்டும் வகையில் அனைத்து மாநில முதல்வர்களையும் நீட்டுக்கு எதிராக தங்கள் தலைமையில் அணி திரட்ட வேண்டும். தமிழ்நாட்டில் உள்ள ஜனநாயக சக்திகளை ஒன்றிணைத்து தங்கள் தலைமையில் ஜனநாயக ரீதியான போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும்.

சட்ட வல்லுநர்களை கலந்தாலோசித்து சட்டரீதியான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

சமூக நீதியை நிலைநாட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுக்கின்ற அனைத்துவிதமான நடவடிக்கைகளுக்கும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுதுணையாக இருக்கும். இவ்வாறு அவர் பேசினார்.

ஜனசக்தி
சந்தா விவரம்
ஆண்டுச் சந்தா ரூ.500/-
2 ஆண்டுச் சந்தா ரூ.1000/-
ஆயுள் சந்தா ரூ.5000/-
Janasakthi Trust
A/c No 108302000009999
IFSC No: IOBA 0001083
Indian overseas bank
Mylapore branch
Chennai - 600 004
ஜனசக்தி
பாவை பிரிண்டர்ஸ் முதல் மாடி, 142/16 ஜானி ஜான்கான் ரோடு, இராயப்பேட்டை, சென்னை - 600014
✆: 9444331138

Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliye Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **K.Subbarayan .,**
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.